www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
பெப்.08–14,1998
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 243

## குண்டு வெடிப்பு

## ஆட்டம் காணும் அரச தளம்



## அநாமதேய சுவாரசியம்

## கில்லாடி கிளின்ரன்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

# முரசம்

## ஏன் இந்தப் புலம்பல்?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

யாழ் குடாநாட்டு
உள்ளூராட்சித் தேர்தலில்
வசைபாடக் கருப்பொருளாக
இருந்தது 'முரசு'தான்
முன்னணியில் நின்று
வசைபாடியது கூட்டணி!

1994 பொதுத் தேர்தலில்
கூட்டணிக்கே வெற்றிவாய்ப்பு
என்று முரசு
உண்மையை எழுதியதால்
ஏனைய கட்சிகள்
முரசுமீது பாய்ந்தன!

தங்களுக்கு தோதாக
உண்மைகள் இல்லாதபோது
கோபம் வரத்தான் செய்யும்!

முரசின் கருத்துக்களை
எதிர்கொள்ள இயலாமல்
வெறுமனே வசைபாடுவதில்
இறங்கியுள்ளனர்!

முரசின் ஆசிரியர் பீடத்தில்
யார் யார் இருக்கிறார்கள்
என அறிய முடியாமல்
கற்பனைக் கண்டு பிடிப்புக்களை
வெளியிட்டு வருகின்றனர்.
நல்ல வேடிக்கை!

மறுபுறத்தில்
முரசின் புகழ் கண்டு
எழுத்தாள நண்பர்கள் சிலருக்கு
பொறாமை தாங்கவில்லை!

முரசில்
புனை பெயரில் எழுதுவது
யார் யார் என்று
ஆராய்வதே அவர்களது
புதுத் தொழிலாகிவிட்டது!

அதிலே அவர்கள்
ஒருபோதும்
வெற்றி பெறப்போவதில்லை!

புனைபெயரில் எழுதும்
தங்கள் திருப்பெயர்களை
அந்த நண்பர்கள்
முதலில் வெளியிடட்டும்!
பின்னர் முரசு
அவர்களுக்கு விபரம் தரும்!

முரசின் பலம்
யார் எழுதுகிறார்கள்
என்பதல்ல,
யாது எழுதப்படுகிறது
என்பது மட்டும்தான்!

முரசு
உண்மையை எழுதுவது
வியாபாரத்திற்காக
என்றும் கூறுகின்றனர்!

இதனைக் கண்டுபிடிக்கக்கூட
இத்தனை சிரமமா?

முன்னைய முரசுகளை
புரட்டினால் தெரியும்!
முரசே தானாக
ஒப்புக்கொண்ட விடயம் அது!

உணமையைச் சொலலி
பிழைக்க முடியவில்லையே
என்று வருந்தினால்
அது நியாயம்!

முரசு,
உண்மையைச் சொல்லி
நியாயமான கருத்துக்களைக் கூறி
பிழைக்கிறதே என்று
புலம்பினால் என்ன நியாயம்?!
சாட்சாத் பொறாமைதானே!

தாங்கள் எல்லாம்
தர்ம சேவையாளர் போல
அவர்கள் நினைத்துக் கொள்ளட்டும்!
'முரசு' மட்டும்தான்
வியாபாரப் பத்திரிகை
என்றும் கூறட்டும்!

முரசின்
அரசியல் விமர்சனங்களால்
தவறான சக்திகள்
பலன் அடைகிறதா?

முரசின் நிலைப்பாடுகள்
தமிழ் பேசும் மக்களின்
பொது நலன்களுக்கு
சாதகமாக உள்ளனவா?
பாதகமாக உள்ளனவா?

இன்றுள்ள தேவை என்ன?
சரியான அரசியல்
நிலைப்பாடுகள்!
நம்பிக்கையூட்டும் கருத்துக்கள்!

அதனை யார் செய்தாலும்
பாராட்டும் பக்குவம்
வரவேற்கும் உற்சாகம்
முரசுக்கு உண்டு!

தங்கள் மனங்களை
சுருக்கி வைத்திருப்போரால்
எதனையும் சாதிக்க முடியாது!
வளர்கிறவர்களைக் கண்டு
வயிறு எரிய மட்டும் முடியும்!

அரசியல் அரங்கில் மட்டுமல்ல
பத்திரிகை உலகிலும்
அப்படியான சிலர் உள்ளனர்!

'காய்க்கிற மரத்திற்கே
கல்லெறி விழும்'
முரசுக்கும்
அது மிகப் பொருந்தும்!

புறக்கணிக்கப்பட முடியாத
முரசின் வளர்ச்சிக்கு
விமர்சனத்திற்கு உள்ளாவோரின்
வசைகள்தான் சாட்சியம்!

சில காரணங்கள் கருதி
முரசு ஆசிரியர் பீடத்தின்
விபரங்கள்
வெளியிடப்படாமல் இருந்தன!

எனினும்,
முன்றொராவது முரசில்
முரசின் ஆசிரியர்பீடத்தை
கௌரவிக்கும் வகையில்
அவர்களது
பெயர்கள் வெளியாகும்!

பின்னர் சிரமம்
இல்லாமல்
நேரடியாக வசைபாடலாம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## பாடுகள்

"நீதியினிமித்தம் நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாய் இருப்பீர்கள்!"-

1 பேதுரு 3:12

"தீமை செய்து பாடனுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மை செய்து பாடனுபவிப்பதே மேன்மையாயிருக்கும்."

1 பேதுரு 3:17.

"ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைபடுத்தக் கடவன்."

1 பேதுரு 4:16.

"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்."

1 பேதுரு 4:7.

பாடுகளை அனுபவிக்கும் நாம் செய்ய வேண்டிய ஒன்று, ஜெபத்திலே தரித்திருப்பதுதான். ஏற்ற காலத்திலே எம்மை உயர்த்துகிறவர் கர்த்தரே! பொறுமையோடே காத்திருப்போம்!

ஜே. புளோரன்ஸ்,
அம்பக்கோட்டை, கெங்கல்ல.



## அல்குர் ஆன் கற்பிக்கும் பிரார்த்தனைகள்

* எனது இறைவனே! எனக்கும் எனது தாய் தந்தையருக்கும் நீ அளித்த பாக்கியங்களுக்காக நான் உனக்கு நன்றி செலுத்தும்படியும், உனக்கு திருப்தியளிக்கக்கூடிய நற்செயல் புரியும் படியும், எனக்கு அனுக்கிரகம் செய்வாயாக. மேலும் உனது திருவருட் கருணையால் உனது நல்லடியார்களுடன் என்னைச் சேர்த்தருள்வாயாக! (27:19)

* எங்கள் இறைவனே! எங்கள் பாவங்களையும் எங்கள் காரியங்களில் அவர்கள் வரம்பு மீறுவதையும் மன்னித்தருள்வாயாக. இன்னும் எங்கள் பாதங்களை ஸ்திரப்படுத்துவாயாக. மேலும் உன்னை நிராகரிப்பவருக்கு விரோதமாக எங்களுக்கு உதவி புரிந்தருள்வாயாக! (3:146)

* எங்கள் இறைவனே! எங்கள் மீது பொறுமையைப் பொழிந்தருவாயாக. மேலும் உனக்கு கீழ்படிந்தவராகவே எங்களை மன்னிக்கச் செய்வாயாக (7: 126)

* எங்கள் இறைவனே! நாங்கள் உன்னையே நம்பி வாழ்கிறோம். இன்னும் நாங்கள் உன் பக்கமே திரும்புகிறோம். மேலும் யாவரும் உன்னிடத்திலே மீள வேண்டும்! (60:4)

என். முஸாதீக், வில்வெளி.

## கவிதைப் போட்டி இல. 240

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

பரிசுக்குரிய கவிதை

**ஸ்ரீலங்கா**

சிறையிலும் கொலை!
உறவினர் வந்து
பார்க்கவும் தடை!
தமிழரின் வாழ்வு
சிறகொடிந்த நிலை!

ப. ரவி- புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

**ஆயத்தம்?**

புதைத்தது
முளைத்திருக்கிறதோ?
அல்லது
புதைக்க ஆயத்தமோ?

சுபா வரன்-கண்டி.

**(சு)தந்திரம்**

ஐம்பது ஆண்டுகள் முன்னே
ஆரம்பமான உறக்கம்,
பொன்விழா கண்டாலும்
பொய்யுறக்கம் தீராது!

சி.மு.சுந்தரேசன்-
மஸ்கெலியா.

**தவம்**

சிறைக்குள் இருக்கும் இவள்;
உயிரை மீட்க
யார் வருவாரோ...?

ந.மங்களம்- சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

**மனிதம்**

செத்துவிட்ட
மனிதம்- மண்
மேலிருந்தாலென்ன
கீழிருந்தாலென்ன?

முஸவ்விரா மௌஜூத்-
மல்வானஹின்ன,
அக்குறணை.

**ஈழத்து இளவல்**

சுற்றிவளைத்து
சுவரெல்லாம் கம்பி!
சுகமான சொப்பனத்தில்
தூங்குகிறான் தம்பி!

சற்குணேஸ்வரி வைத்திலிங்கம்-
யாழ்ப்பாணம்.



**வாக்கு**

போதையில் தள்ளாடி
போட்டது கை
செல்லாத புள்ளடி! .

செ.அகிலா-கலகெதர.

**இறுதித் தீர்ப்பு**

தடுத்து வைத்த வேலிக்குள்,
மனிதங்கள் மாயும்!
அடைபட்ட மூச்சு-இனி
சுதந்திரமாய்ப் போகும்!

திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணன்-
பூவரசன்குளம்.

**நாதியற்றுக் கிடக்கிறது!**

படிப்படியாய் முன்னேற்றப்
பாதையிலே வந்த இனம்,
நடைப்பிணமாய் வீதியிலே
நாதியற்றுக் கிடக்கிறது!

உடுவை குகதாசன்- உடுவில், சுன்னாகம்.

**கனவு**

கட்டாந்தரையில் படுத்துக் கொண்டு
கனவு காணும் நண்பனே!
சுதந்திரமும், தீர்வும்
சொப்பனத்திலாவது வந்ததா...?

ஸபீர் ஹாபிஸ்-ஏறாவூர்.

## கவிதைப் போட்டி இல.243



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 14.02.1998

முகவரி:
கவிதைப் போட்டி இல.243,
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

முரசே!

ரசிகனின் 'யார் இனம்' இலக்கிய நயம், யாழ் நகர்த் தேர்தலில் தலைகால் தெரியாமல் தாண்டவமாடும் தமிழ்க் கட்சிகளுக்குத்தான் எழுதப்பட்டனவோ என எண்ணவைத்தது. நிச்சயம் அக் கட்சிகளின் நிலையும் இறுதியில் இதுதான்!

ப.ஜோதி, வவுனியா.

☆★



என் அபிமான முரசே!

நீ வாரா வாரம் சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். அதிலும் 'பூலான்தேவி', 'அரசியல் தொடர்' போன்றவை அசத்தலானவை.

ஞா.சிவகுமார், மட்/விளாவெட்டுவான்.

☆★

அன்பின் முரசே!

நீ வாரம் தோறும் சுமந்து வரும் பூலான்தேவியின் வரலாறு, 'மேக்கப் புன்னகை', 'சிந்தியா பதில்'. என்னை மிகவும் கவர்ந்தவை. இவற்றை நீ சுமந்து வருவதற்கு எனது வாழ்த்துக்கள்.

ஆ.விஜயகுமாரி, அட்டப்பள்ளம், நிந்தவூர்-10.

☆★

## விரலுக்குத் தகுந்த வீக்கம்

உதவி செய்யும்போது ஒரு சந்தேகமும் இல்லாமல் கம்பளம் விரித்துப் பெற்றுக்கொண்டனர். இதை சாக்காக வைத்து அமெரிக்கா முழுமையாக காலூன்றும்போது கவலைப்பட்டு என்ன பயன்? தன்னளவில் தீர்ப்பதை விட்டு வல்லரசை நாடியதால், தான் விரித்த வலையில் தானே விழுந்துவிட்டது இலங்கை அரசு.

ஆ.ஜெகதீஸ்வரன், புசல்லாவ.

☆★

## உலக சாதனை

சமாதானத்துக்காக போர்- துப்பாக்கி முனையில் ஜனநாயகம். இதுதான் அரசாங்கத்தின் தற்போதைய சாதனை! வடக்கில் தமிழர்கள் சிலருக்கு நிறைகுட வரவேற்பு. சிறைக்குள்ளும் சிங்களக் கைதிகளுக்கு ஆயுதம், தமிழ் கைதிகள் கொலை. அதைக் கண்டும் பாதுகாவலர் பெருமிதம். உலகில் எப்போதுமே நடக்காத சாதனை தானே!

தமிழினியன், மண்டூர்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

## உண்மையில் இருந்து....

அன்பு முரசுக்கு;

தேர்தல் அலசல்கள் அருமை. இராஜதந்திரியாரின் அலசலில் தமிழ்க்கட்சிகள் வெறுப்புற்றிருக்கும் என்பதும் உண்மை. தப்பித்தவறிக்கூட எக் கட்சிக்கும் சார்பான சிறு கருத்துக்கூட தலைக்காட்டவில்லை. விமர்சகர்களும் மனிதர்கள்தான். அவர்களுக்கும் கட்சி சார்புகள் இருக்கக் கூடும்தான். இல்லை எனச் சொல்லாதீர்கள். ஆனால், விமர்சனம் என்று வரும்போது, கட்சிசார்பு, சொந்தக் கருத்து என்பவற்றில் இருந்து சிந்திக்காமல், புறநிலை உண்மையில் இருந்து, கருத்துக்கள் தருபவரே நமக்குத் தேவையான விமர்சகர். அந்த வகையில் முரசின் விமர்சகர்களுக்கு மனம் திறந்த பாராட்டுக்கள்.

சி. தனராஜ், யாழ்ப்பாணம்.

முரசே!

தேர்தல் திருவிழாவுக்கு தமிழ்க் கட்சிகள் ஒலிபரப்பிய பாடல்களுக்கு, காதிலை பூ கந்தசாமியார் கொடுத்த பதிலடி பிரமாதம். அதனை சகியாத கட்சி ஒன்று பாடலை ஒலிபரப்புவதை விட்டுவிட்டு, முரசை திட்டித் தீர்த்ததுதான் வேடிக்கை.

பி. இந்திராணி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ரசிகனின் 'இலக்கிய நயம்' தேர்தல் காலத்தில் மறைமுகத் தாக்குதலாக இருந்ததைப் புரிந்து கொண்டோம். பாராட்டுக்கள். 'இனி என் முறை' கலக்கல். டயானா படங்களோடு இரட்டிப்புக் கலக்கல்.

செல்வி கி. மிதுளா, ஹட்டன்.

## நூலகத் திறப்பு

இனிய முரசுக்கு!

யாழ் நூலகத் திறப்பு விழா காலத்தில் ஒன்பது நினைவுக் கற்கள் பற்றி நினைவூட்டிய நக்கீரனுக்கு முதுகில் இரண்டு மூன்று அன்புத் தட்டுக்கள்! எல்லாமே நாடகமாகிவிட்டன. கொழும்பு பத்திரிகை ஒன்றில் குமார் பொன்னம்பலமும் அதனைச் சுட்டிக்காட்டியிருந்தார். போர் தொடரும்போது குண்டுவீச்சால், நாளையும் நூலகம் சேதமானால் என்பதற்கு என்ன உத்தரவாதம் எனக் கேட்டிருந்தார். நியாயம்தானே!

ஆ. செல்வராசா, கொழும்பு-15.

களுத்துறைச் சிறைப்படுகொலை போதாது என்று, உறவினர்கள் கைதிகளைப் பார்வையிடவும் தடை விதித்த அரசை பூத்தூவிப் பாராட்டலாம். யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் பற்றி விசாரணைக் கமிஷன் அமைப்பது பற்றிய பேச்சும் அமுங்கிவிட்டது. அடுத்து ஒரு தேர்தல் வந்தால்தான் இனி தமிழ்க் கட்சிகளும் தேடல் நடத்துமோ?!

எம். துஷ்யந்தன், மன்னார்.

வாரமொருமுறை வெளிவந்து, எங்கள் மனதைத் தொட்டுச் செல்லும் என் இனிய முரசே! உன்னில் வரும் அனைத்து அம்சங்களும் என்னைக் கவர்ந்துவிட்டன. அதிலும் காதிலே பூ கந்தசாமியாரின் கற்பனைச் சித்திரம் மிகப் பிரமாதம். மற்றும் சினிமா, 'சிந்தியாவின் பதில்கள்', தொடர்கதை, 'சிறுகதைகள்' அனைத்தும் வெகு ஜோர்!

செல்வன் ஏ.சி.சமீம், ஏறாவூர்.

☆★

யாழ் தேர்தல்களம் அங்கு போட்டியிட்ட கட்சிகளின் பலமும்-பலவீனமும் என்னும் தொடரில் தமிழ்க் கட்சிகளின் உண்மை நிலவரத்தை தொகுத்து வழங்கியமைக்கு பாராட்டு. முரசே! உன் பணி தொடர நல்வாழ்த்துக்கள்.

நா.இராஜதுஷ்யந்தினி, பரந்தன்.

☆★

வாரத்தில் ஒரு நாள் வலம் வந்து எம் இதயத்தில் இடம் பிடித்த என் இதய முரசே! நீ சுமந்து வரும் அனைத்தும் சிறப்பு. 'சினி விசிட்' தேனிலும் இனிமை. உன் பணி என்றும் இனிதாய் தொடர வாழ்த்துக்கள்.

ர.முருகேஸ் கலைவாணி, காவத்த.

☆★

தினமுரசை வாராவாரம் படித்து வருகின்றேன். 'இனி என் முறை'- எழுத்துச் சித்தர் பாலகுமாரனின் தொடர்கதை வெரிவெரி சூப்பர். யாரய்யா அந்த கந்தசாமி? இப்படி வெளுத்து வாங்குகிறார். பூலான் தொடரும் வெளுத்துக் கட்டுகிறது. பூலான் அல்ல அவள் எதிரடி பூலான். அல்ல அதிரடி பூலான்.

எட்வேட் நிஷாந்தன், பெரியநீலாவணை-01.

☆★

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் அருமையிலும் அருமை- 'பூலான் தேவி'யை நான் பாராட்டுகிறேன். இரசனை நிறைந்த படைப்புக்கள் தரும் ரசிகனுக்கும் முரசுக்கும் என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

ரா.யோகராணி, வெரலகம.

☆★

அப்துல் ரகுமானின். 'தேசிய நீரோட்டம்' கவிதையால், தண்ணீரே அருந்த நா மறுக்கிறது. டயானாவின் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்,' 'கொள்ளை ராணி' அனைத்து அம்சங்களும் சுவையைக்குறைக்கவில்லை தொடரட்டும் உன் பணி- வெற்றி இலக்கிலே!

மயில்வாகனம் உதயகுமார், தலவாக்கலை.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல.- 1772, கொழும்பு.



www.padippakam.com
படிப்பகம்

# கிளிநொச்சியில் புலிக்கொடி என தெரிவிப்பு

# சூளுரையை முறியடிக்கும் தாக்குதல்!

பெப்ரவரி 04ம் திகதிக்கு முன்பாக ஜயசிக்குறுய் படைகள் கிளிநொச்சியை சென்றடையும் என்று அரசாங்கம் காலவரையறை விதித்திருந்தது. எனினும் அந்த முயற்சி கைகூடவில்லை.அதேவேளை பெப்ரவரி 04ம் திகதி கிளிநொச்சியை புலிகள் கைப்பற்றி நிலை கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மையப்பகுதியில் புலிகளின் மூத்த தளபதி ஒருவரால் பெப்ரவரி 04ம் திகதி புலிக்கொடி ஏற்றிவைக்கப்பட்டதாக வன்னியில் புலிகள் தெரிவித்துள்ளனர்.

1.02.98 அன்று அதிகாலை முதல் 3.02.98 காலை வரை நடைபெற்ற பரந்தன்-கிளிநொச்சி சமரின் பின்னர் கிளிநொச்சி மையப்பகுதி . புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது.

கிளிநொச்சி மையப்பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் கரடிப் போக்குக்கு அப்பால் பரந்தனை நோக்கிச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

படையினரின் 41 சடலங்களை புலிகள் ஒப்படைத்துள்ளனர். புலிகளின் சடலங்களை கைப்பற்றியதாக படையினர் கூறினரேதவிர சடலங்கள் எதனையும் அவர்கள் ஒப்படைக்கவில்லை.

பரந்தன்-கிளிநொச்சி சமரில் புலிகள் தரப்பில் ஞாயிறு அன்று சண்டையில் 32 பேரும், பின்னர் நடைபெற்ற கடும் சண்டைகளில் 152 பேரும் பலியானதாக கடைசியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி மையப் பகுதியில் புலிகளின் அணிகள் நிலைகொண்டதை அடுத்து, பரந்தன் பகுதிகளை நோக்கி புலிகளின் மோட்டார் தாக்குதல்கள் சரமாரியாக நடத்தப்பட்டு வருகின்றன.

பலியானவர்கள், காயமடைந்தோர் உட்பட கிட்டத்தட்ட ஐநூறு படையினருக்கான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்று சில தகவல்கள் கூறுகின்றன. ஒரு படைப்பிரிவுக்குரிய எண்ணிக்கையான படையினரே மேற்கண்ட தொகையினராவர்.

### புலிகளின் செய்தி

பெருந்தொகையான ஆயுத தளபாடங்கள் தம்மால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், சமர் முடிவுற்றதும் பூரண விபரங்கள் வெளியிடப்படும் என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் தமக்கு ஏற்பட்ட பாரிய இழப்புக்களை மூடிமறைத்து வருகிறது. 300ற்கு மேற்பட்ட படையினர் அவசர சிகிச்சைக்காக அநுராதபுரத்திற்கும் கொழும்புக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். 300ற்கு மேற்பட்ட படையினர் பலியாகி உள்ளனர் என்று புலிகளின் குரல் வானொலி அறித்துள்ளது.

04.02.98 அன்று புலிகளின் குரல் வானொலியின் விசேஷ ஒலிபரப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"சிறீலங்காவின் சுதந்திர தினத்தன்று ஜயசிக்குறுய் படைகள் கிளிநொச்சியை வந்தடையும். அதன் அடையாளமாக கிளிநொச்சியில் சிறீலங்கா கொடி பறக்க விடப்படும் என்ற சூளுரையை விடுதலைப் புலிகள் முறியடித்துள்ளனர். கிளிநொச்சியில் தமிழீழத் தேசியக் கொடியான புலிக்கொடியை விடுதலைப் புலிகள் பறக்கவிட்டுள்ளனர்." என்று புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. பலியான தமது உறுப்பினர்களுக்கும் அஞ்சலி செலுத்தியது.

கிளிநொச்சி புலிகளின் வசம் சென்றுள்ளது என்ற செய்தியை பாதுகாப்புத் தரப்புக்கள் ஊர்ஜிதம் செய்யவில்லை. புலிகளின் தாக்குதலை முறியடித்து தேடுதல் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டு வருவதாக படைவட்டாரங்கள் கூறிவருகின்றன. ■

# சிறுத்தைப் புலிகள் முன்னணியில்

பரந்தன்-கிளிநொச்சிச் சமரில் சிறுத்தைப் புலிகள் அணியே பிரதான ஊடறுப்புக்களை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரபாகரனின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள சிறுத்தைப் புலிகள் அணி பங்கு கொண்டுள்ள இரண்டாவது பாரிய சமர் இதுவாகும்.

ஏற்கனவே மன்னகுளத்தில் விசேஷ கொமாண்டோக்களுக்கு எதிரான பாரிய தாக்குதலில் சிறுத்தைப் புலிகள் அணி முக்கிய பங்கு வகித்திருந்தது.

கிளிநொச்சி மற்றும் பரந்தன் பகுதிகளில் தாக்குதல் நடத்துவதற்கான வேவு நடவடிக்கைகள் பல மாதங்களாக நடைபெற்று வந்தன.

கிட்டத்தட்ட 20 வேவுப் புலிகள்வரை உளவறியும் நட வடிக்கையில் பலியானதாகக் கூறப்படுகிறது. ■

# இழப்புக்களை மறைக்க மாட்டோம்

பலியான புலிகளின் உடல்களை ஒப்படைக்க படையினர் முயன்றதாகவும், புலிகள் மறுத்ததாகவும் வெளியான செய்திகளை புலிகள் மறுத்துள்ளனர்.

எக்கட்டத்திலும் பலியான எம் உறுப்பினர்களின் உண்மையான விபரங்களை நாம் மறைத்தது இல்லை.

எமது உறுப்பினர்களது உடல்களை பொறுப்பேற்க மறுத்ததும் இல்லை. அவ்வாறு செய்வதை எமது உறுப்பினர்களுக்கு செய்யும் துரோகமாகவே நாம் கருதி வருகிறோம்.

துப்பாக்கிச் சூடுகள் மற்றும் குண்டு வீச்சுக்களில் பலியான பொதுமக்களின் சடலங்களையோ, அல்லது இனம் தெரியாமல் உருக்குலைந்த சடலங்களையோ எமது உறுப்பினர்களின் சடலங்கள் என்று ஒப்படைக்க முயலும்போது மட்டுமே நாம் அவற்றை மறுத்து வந்திருக்கிறோம்" என்று புலிகளின் குரல் தெரிவித்துள்ளது. ■

# அரச தளத்தில் வெடிப்பு

## தலதா தாக்குதலின் எதிரொலி

தலதா மாளிகைமீது புலிகள் நடத்திய குண்டுத்தாக்குதலை அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரமாக பயன்படுத்துவதில் எதிர்க்கட்சியினருக்கு குறிப்பிட்டளவு வெற்றி கிட்டியிருக்கிறது.

புலிகளின் குண்டுத் தாக்குதல் தலதா மாளிகையில் மட்டுமல்லாமல், அரசாங்கத்தின் அடித்தளத்திலும் வெடிப்பை ஏற்படுத்தி உள்ளது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தலதா மாளிகையை பாதுகாக்க முடியாத அரசாங்கம் என்ற அவப்பெயரை அத்தாக்குதல் தேடிக் கொடுத்துள்ளது. புலிகள்மீது தீர்க்கமான வெற்றியை பெற்றால் மட்டுமே அந்த அவப்பெயரை துடைக்க முடியும். ஆனால் அது சாத்தியமான ஒன்றாக இருக்காது.

யுத்தத்தை பெரும் அரசியல் மூலதனமாக நம்பியிருந்த அரசாங்கத்திற்கு, யுத்தமே எதிரியாக மாறிக் கொண்டிருக்கும் நிலைதான் ஏற்பட்டுள்ளது என்று அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

சுதந்திர தினப் பொன்விழாவை அரசாங்கம் நினைத்த இடத்தில் நடத்த முடியாமல் போனமை அரசியல், இராணுவ ரீதியில் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள பலத்த தோல்வியாகும். அதனால் போர் வெற்றி தொடர்பான அரசாங்கத்தின் கடந்த காலப் பிரசாரங்கள்கூட அர்த்தமிழந்துள்ளன என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். ■

# குண்டுவெடிப்புக்கு முன்னர் வெள்ளை அடிக்கப்பட்ட சுவர்கள்

இந்நாட்டிலுள்ள பௌத்த சிங்களவர்கள் தங்கள் உறவினர்கள் யாராவது மரணமடைந்தால், துக்கம் அனுசரிப்பதை வெளிப்படுத்த தூயவெண் ஆடைகளை அணிந்து கொள்வார்கள். அதேபோல் வெள்ளைக் கொடிகளையும் பறக்கவிடுவார்கள். ஏனையோர் துக்கத்தை வெளிப்படுத்த கறுப்பு நிறத்தையே பயன்படுத்துவர். மரணச் சடங்குகளில் கலந்து கொள்வோரும் கறுப்பு உடைகளையே அணிவது வழக்கம்.

சுதந்திர தினப்பொன்விழாவை கண்டி மாநகரில் கொண்டாடுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான ஆயத்தங்களுக்காக பல கோடி ரூபா செலவிடப்பட்டது.

அரச கட்டடங்கள் யாவற்றுக்கும் வெள்ளை பூசப்பட்டது. பொது மக்கள் குடியிருப்புக்களுக்கும் வர்த்தக நிலையக் கட்டடங்களுக்கும் வெள்ளையே பூசப்பட்டது. வேறு வர்ணங்கள் எதுவுமே பூசப்படாமல் தூய வெள்ளையே கட்டடங்களுக்குப் பூசப்படவேண்டும் என்று பொதுமக்களை சில அதிகாரிகள் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது. இதனால் வசதியற்ற வறியவர்கள்கூட கடன்பட்டு தமது இருப்பிடங்களில் வெள்ளை பூசியதாக அறியப்படுகிறது.

தலதா மாளிகைக் குண்டுவெடிப்பு நாட்டுக்கே ஒரு துக்க சமாச்சாரமாக ஆகிவிட்டது. இத்தகைய துயரமானதொரு சம்பவம் நடைபெறப்போவதற்கு எங்கும் வெள்ளை பூசப்பட்டது ஒரு துர்ச்சகுனம்போல் அமைந்துவிட்டது போலும் என்று கண்டி நகர மக்கள் தெரிவிக்கிறார்கள்.

# மக்களுக்கு சுதந்திரமில்லாத விழா

## தலை நகரம் வெறிச்சோடியது

சுதந்திர தினத்தை முன்னிட்டு செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளால் கொழும்பு நகரம் வெறிச்சோடிக் கிடந்தது.

ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவது போன்று நகர் காட்சியளித்தது. பல வீதிகளில் வாகனப் போக்குவரத்துகள் தடைப்பட்டிருந்தன. நடந்து செல்லக்கூட அனுமதி மறுக்கப்பட்டது.

பொலிசாரும், படையினரும் மட்டுமே நகரில் சுதந்திரமாக நடமாடியதைக் காணக் கூடியதாக இருந்தது.

இதேவேளை மட்டக்களப்பு நகரில் புலிகள் நடத்திய ஆட்டிலெறி ஷெல் வீச்சால் நகரம் களையிழந்து காணப்பட்டது. மட்டக்களப்பு படை நிலைகள்மீதும், கச்சேரி நோக்கியும் ஷெல்கள் ஏவப்பட்டன. அதனால் மட்டக்களப்பு கச்சேரியில் சுதந்திரதின கொண்டாட்டங்களும் காலையில் நடைபெற இருந்த சிறீலங்கா தேசியக் கொடி ஏற்றும் வைபவமும் தடைப்பட்டன.

கச்சேரியில் கொடி ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டு, அதிகாரிகளும், படையினரும் தயாராக நின்ற போதே ஷெல் ஒன்று வந்து விழுந்து வெடித்தது. அதனையடுத்து அங்கு நின்ற அனைவரும் கலைந்தோடினர்.

மட்டக்களப்பில் படையினரும், பொலிசாரும் கொடிகளை பறக்கவிடுமாறு வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகன உரிமையாளர்களை கட்டாயப்படுத்தியதாகவும் அறியப்படுகிறது.

யாழ் குடாநாட்டிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சுதந்திர தினத்தன்று தென்னிலங்கை மக்கள்கூட சுதந்திரமாக நடமாட முடியவில்லையே என்று மக்கள் அங்கலாய்த்தனர்.

# சென்ற ஆண்டும் பரந்தனில் ஆரம்பம்!

## இந்த ஆண்டும் பரந்தனில் தொடக்கம்!

வரலாற்றை மறக்காமல் இருந்தால் சம்பவங்களின் ஒற்றுமையைப் புரிந்து கொள்ளலாம்.

1997ம் ஆண்டில் தமது முதலாவது பாரிய ஊடறுப்புச் சமரை புலிகள் ஆரம்பித்தது பரந்தனில்.

சத்ஜய மூன்று கட்ட நடவடிக்கைகள் மூலம் ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்வரை படையினர் நிலை கொண்டிருந்தனர்.

9.1.97 அன்று அதிகாலையில் பரந்தன் பகுதியில்- அதாவது சத்ஜய படைகளின் இதயப் பகுதியில்- புலிகள் ஊடறுப்புத் தாக்குதல் நடத்தினர்.

அத் தாக்குதலில் படைத்தரப்பு உத்தியோக பூர்வமாக அறிவித்ததன்படி பலியான படையினரின் எண்ணிக்கை 223. ஆனால் அதனைவிட எண்ணிக்கை அதிகம். புலிகள் தரப்பில் 142பேர் பலியாகினர்.

ஆட்டிலெறித் தளங்கள் அழிக்கப்பட்டன. ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. 97ல் புலிகளின் வெற்றிகரமான முதலாவது தரைச் சமராக அது அமைந்தது.

அதன் பின்னர் ஜயசிக்குறுய் படைகளுக்கு எதிரான பல ஊடறுப்பு அழித்தொழிப்புச் சமர்களை 97ம் ஆண்டில் புலிகள் நடத்தி முடித்தனர். அனைத்துச் சமர்களும் புலிகளுக்கு வெற்றியாகவும், படையினருக்கு பலத்த சேதங்களையும், ஆயுத தளபாட இழப்புக்களை ஏற்படுத்துபவையாகவுமே அமைந்தன.

1997ம் ஆண்டு புலிகளுக்கு வெற்றிகரமான போர் ஆண்டாகவே அமைந்திருந்தது.

பிரபாகரனுக்கு அதிஷ்டங்களிலும் நம்பிக்கை உண்டு. சென்ற ஆண்டில் வெற்றிகளைத் தேடித் தந்த பரந்தனில் இந்த ஆண்டுக்கான முதலாவது பாரிய ஊடறுப்பு சமரை ஆரம்பிக்க பிரபாகரன் திட்டம் வகுத்ததும் அதனால்தான்.

பரந்தன்-கிளிநொச்சி சமர் புலிகள் எதிர்பார்த்த வெற்றியை கொடுத்துள்ளது என்றே தகவல்கள் கூறுகின்றன. ■

# சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு!

## கனடாவிலும், இலண்டனிலும் பேரணிகள்

இலங்கையின் சுதந்திரப் பொன்விழாவைக் கண்டித்து இலண்டனிலும், கனடாவிலும் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்றுள்ளன.

இலண்டனில் நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்துகொண்டனர்.

'தமிழர் தேசம் தமிழீழம்.'

'சுதந்திரம் யாருக்கு?', 'சிறீலங்காவின் பிடியில் தமிழீழம்!' போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் பிரிட்டிஷ் பிரதமரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. 01.02.98 அன்று இந்தப் பேரணி நடைபெற்றது.

கனடாவிலும் 01.02.98 அன்று மாபெரும் பேரணி ஒன்று இடம்பெற்றது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

காலை பத்துமணிக்கு ரொறன்டோ மாநகரில் இருந்து ஆரம்பமான பேரணி, ஒன்ராறியோ மாநில பாராளுமன்றம் முன்பாக முடிவுற்றது.

50 ஆண்டுகால இனப்படுகொலையை அம்பலப்படுத்தவும், தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை வெளிப்படுத்தவுமே ஆர்ப்பாட்ட பேரணி நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

பெப்ரவரி 04ம் திகதி அன்று கனடாவில் உள்ள தமிழர்கள் துக்கநாள் அனுஷ்டிக்குமாறு தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்திருந்தது. அதனையடுத்து பெப்ரவரி 4இல் தமிழர்கள் கடைகள் அநேகமானவை மூடப்பட்டிருந்தன. ■

# கண்டியில் பாய்ச்சல்!

## எதிர்பார்க்கப்பட்ட தாக்குதல்

கண்டியில் குண்டுவெடிப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அநுருத்த ரத்வத்த, ஃபிரான்ஸ் செய்தி நிறுவனமான ஏ.எஃப்.பி. கொழும்பு நிருபரான அமல் ஜயசிங்கவிடம் இவ்வாறு கூறினார்: "வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி மாநகரப் பாதுகாப்புக்காக 10,000 படைவீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பயங்கரவாதிகளின் தாக்குதல் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கலாம். ஒருசிறு தாக்குதலாக இருந்தாலும், அது மிகப் பிரமாண்டமான அளவில் செய்தியாகிவிடும். அதனைத்தான் அவர்கள் எதிர்பார்ப்பார்கள்."

அவருடைய கூற்றின்படி, ஏதோ ஒரு வகையில் எல்.ரி.ரி.யினர் தாக்குதல் மேற்கொள்வார்கள் என்பதை எதிர்பார்த்தே இருந்தனர். சிறியதாகத்தான் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களுடைய தாக்குதலோ மிகப் பெரியதாகவே அமைந்துவிட்டது.

பொலிசார் மற்றும் துருப்புகள் 10,000 பேரைக் கொண்ட பெரும் அமைப்பு இருந்தும்கூட தலதாமாளிகையைக் குறிவைத்து வந்த குண்டு வாகனத்தைத் தடுக்க முடியாமற் போய்விட்டது. எல்.ரி.ரி.ஈ.யினர் கண்டிக்குள் ஊடுருவி விட்டனர். தற்கொலைப் படையினர் சுதந்திரமாக நகர வீதிகளில் வாகனங்களில் பவனிவந்துள்ளனர். இவ்வாறு 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது. ■

# அப்பாவிகள் எண்மர் சுட்டுக்கொலை!

## 'பயங்கரவாதிகள்' என்கிறது ரூபவாஹினி

திருமலை மாவட்டத்தில் தம்பலகாமத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் எட்டுப் பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக செய்தி வெளியிட்ட அரச தொலைக் காட்சியான ரூபவாஹினி, தம்பலகாமத்தில் காவல் அரண்மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதாகவும், பயங்கரவாதிகள் ஆறுபேர் கொல்லப்பட்டனர் என்றும் செய்தி தெரிவித்தது.உண்மையில் நடந்த சம்பவம் நேர் மாறானதாகும். இதுபற்றி முரசுக்கு கிடைத்துள்ள தகவல் பின்வருமாறு:

தம்பலகாமத்தில் உள்ள வீடொன்றில் புதுமனை புகுவிழா நடைபெற்றது. அதனை முன்னிட்டு கிராமத்தவர்கள் பலர் அங்கு சென்றுவிட்டனர்.

கிராம மக்கள் கூட்டமாகச் செல்வதை காவலரணில் உள்ள பொலிசார் அவதானித்தனர். இரவு பதினொரு மணியாகியும் கிராம மக்கள் திரும்பி வராமையால் பொலிசாருக்கு பலத்த சந்தேகம் வந்துவிட்டது.

காவலரண்களை புலிகள் தாக்கப் போகிறார்கள். அதுதான் கிராம மக்களுக்கு முன் கூட்டியே தகவல் கொடுத்து அப்புறப்படுத்திவிட்டனர் என்று நினைத்தனர்.

அதனால் இரவு பதினொரு மணியளவில் காவலரணில் இருந்து ஷெல் தாக்குதலை ஆரம்பித்தனர். சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. கிட்டத்தட்ட மூவாயிரம் ரவைகளைச் சுட்டுத் தீர்த்தனர்.

### வீட்டுக்குள் புகுந்தனர்

விடியும்வரை புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பொலிசார், காலை ஆறே முக்கால் மணியளவில் ஊருக்குள் சென்று பார்த்தனர்.

புதுமனைப் புகுவிழாவில் கூட்டமாக ஆட்கள் நின்றதால், அந்த வீட்டுக்குள் புகுந்து ஆறுபேரைக் கைதுசெய்தனர். அவர்கள் அப்பாவிகள் என்று அங்கிருந்த பெண்கள் மன்றாடினார்கள். அவர்களையும் தாக்கிவிட்டு ஆறுபேரையும், பிடித்துச் சென்றனர். அயல் வீட்டில் இருந்த இரண்டு ஆண்களையும் கூட்டிச் சென்றனர்.கூட்டிச் செல்லப்பட்ட எட்டுப்பேரும் காவலரண் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர்.

உறவினர்கள் சென்று உடல்களை யாவது ஒப்படைக்குமாறு மன்றாடினர். புலிகள் என்று ஒப்புக் கொண்டு கையொப்பம் போட்டுவிட்டு உடல்களை எடுத்துச் செல்லுமாறு பொலிசார் கூறினராம்.

அதன் பின்னர் ஈ.பி.டி.பி.,புளொட் ஆகிய கட்சிகளின் தலையீட்டாலும், மக்கள் நடத்திய போராட்டத்தாலும் உடல்கள் ஒப்படைக்கப்பட்டன.

### நஷ்ட ஈடு

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்தித்த கந்தளாய் பொலிஸ் எஸ்.எஸ்.பி. நடந்த தவறுகளுக்காக வருந்துவதாகத் தெரிவித்தார்."இறந்தோர் அனைவரும் அப்பாவிகள்தான். அவர்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுத் தர ஏற்பாடு செய்கிறேன்," என்று கூறினார்.

அப்போது பையன் ஒருவர் எஸ்.எஸ்.பி.யிடம் "நாங்கள் எல்லாம் புலிகளுக்கு போக வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?" என்று கேட்டார்.

"தம்பலகாமம் பொலிசார் அப்பகுதியில் உள்ள பெண்களுடன் சேட்டைகளில் ஈடுபட்டு வந்தனர். அத்துமீறல்களில் ஈடுபட முனைகின்றனர்" என்று பெண் ஒருவர் எஸ்.எஸ்.பி.யிடம் முறையிட்டார்.

பொலிசாரின் தாக்குதலில் பலியானவர்களில் மூன்றுபேர் மாணவர்கள். இருவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் எங்கும் பெப்ரவரி 3ம் 4ம் திகதிகளில் மக்களால் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

பெப்ரவரி 04ம் திகதியன்று பலியான எட்டுப்பேரினதும் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன. ■

# புலிகளின் நினைவஞ்சலி!

## படையினர் மீது பழிவாங்கல்

மட்டக்களப்பு-கொழும்பு நெடுஞ்சாலையில் உள்ள ஐந்து படைமுகாம்கள்மீது புலிகள் இயக்கத்தினர் ஏக காலத்தில் தாக்குதல் தொடுத்தனர். கடந்த 27.01.98 அன்றிரவு 9.40 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

புலிகள் இயக்கத்தினரின் இலக்கு வாகனேரிச் சந்தியிலுள்ள இராணுவ முகாமைத் தாக்கி அழிப்பதாகவே இருந்தது. எனினும் இந்த நெடுஞ்சாலையிலுள்ள ஏனைய முகாம்களிலிருந்து படையினர் உதவிக்கு விரைவதைத் தடுக்கவே, ஏக காலத்தில் பரந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த வாகனேரிச் சந்திப்படை முகாம் மீது தாக்குதல் நடத்திய புலிகள் இயக்கத்தினர் 81 மி.மீ. மோட்டார் குண்டுகள் 52 ஐ அங்கு ஏவியிருந்தனர் என்று படையினர் தெரிவித்தனர். இத்தாக்குதலில் படையினர் தரப்பில் 6 பேர் கொல்லப்பட்டதாகவும் ஒரு படை வீரரைக் காணவில்லையென்றும் கூறப்படுகிறது. இவர் புலிகள் இயக்கத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. எனினும் புலிகள் இயக்கத்தினர் இதுபற்றி அறிவிக்கவில்லை. ஆறு படைவீரர்கள் காயப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலில் தமது தரப்பில் லெப்டினன்ட் க.நவரெத்தினம் (ஈசநாதன்), மட்டக்களப்பு என்பவர் கொல்லப்பட்டார் என்றும் முகாமிலிருந்த 60 மி.மீ. மோட்டார் 01, ரி.56 ரக துப்பாக்கி 08,. பி.கே.எல்.எம்.ஜி.01. நடமாடும் தொலைத்தொடர்பு சாதனம் 04, 60 எம்.எம்.பேஸ் பிளட் 01, பி.கே.மேலதிக சுடுகுழல் 02, 60 எம்.எம்.ஸ்கோப் 01, நடுத்தர ரவை 15070, பைனாகுலர் 10, 60 மி.மீ.எறிகணைகள் 88, வெடிக்க வைக்கும் கருவி 22, 60 மி.மீ.பரா எறிகணை 06, சிறிய கிளைமோர் 06, ஆர்.பி.ஜி. எறிகணை 18, ஆகியவற்றைக் கைப்பற்றிச் சென்றதாக அறிவித்துள்ளனர். புலிகள் இயக்கத்தினர் அங்கிருந்த பங்கர்களுக்கு தீயிட்டுக் கொழுத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

வாழைச்சேனை பிரிகேட் தலைமையகம், 126 ஆம் மைல்கல் முகாம், 121 ஆம் மைல்கல் முகாம், வாகனேரிச்சந்தி முகாம், மியான் கற்குளமுகாம் என்பனவற்றையே புலிகள் ஏககாலத்தில் தாக்கினர்.

கடந்த டிசம்பர் மாதம் 27ஆம் திகதி மட்டக்களப்பு ஜெயந்தியாயவில் எதிர்பாராத விதமாக படையினரின் சுற்றிவளைப்பில் அகப்பட்டு 16 புலிகள் இயக்கத்தினர் கொல்லப்பட்டதாக புலிகள் அறிவித்தனர். கொல்லப்பட்டவர்களில் ஒரு கப்டன், 2வது லெப்டினன்ற் இருவர், மேலும் 13 போராளிகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இத்தாக்குதலில் இரு படை வீரர்கள் கொல்லப்பட்டனர். மேற்படி ஜெயந்தியாயத் தாக்குதலில் பலியாகி வீரமரணமடைந்த புலிகள் இயக்கத்தினரின் 31ஆம் நாள் நினைவஞ்சலியாகவே சமீபத்திய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ■


வாரமலர்
தினமுரசு

www.padippakam.com

# அதிகாரிகளின் ஆட்டம்-பாலர்கள் அச்சம்

(திருமலை நிருபர்)

பாடசாலையொன்று சுமுகமாக இயங்குவதற்குக் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களே இடையூறாக இருப்பதா? எனக் குமுறுகிறார்கள் திருக்கோண மலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள்.

தேசிய பாடசாலையான இக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு வளாகம்- பிரதம வளாகத்திலிருந்து சில யார் தூரத்தில் வேறாக அமைந்துள்ளது. இங்கே முதலாம் இரண்டாம் ஆண்டு வகுப்புகள் நடைபெறுகின்றன. எட்டு ஆசிரியர்களும் ஒரு பகுதித் தலைவரும் இந்தப் பிரிவில் கடமையாற்றுகின்றனர்.

இந்த வளாகத்தின் ஒரு பகுதி மெல்ல மெல்ல கல்வித்திணைக்கள அதிகாரிகளின் குடியிருப்பாக மாற்றப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் ஓரத்தில் ஒதுங்கிக் கொள்பவர்கள், பாசாங்கு செய்தவர்கள் நாளடைவில் மெல்ல மெல்லத் தமது பிடியை இறுக்கிக் கொண்டு நிலப்பரப்பையும் பிடித்து வைத்து அதிகாரம் செய்கின்றனர்.

இவர்களது அதிகாரம் பாலர்களின் மன வளர்ச்சியைப் பாதிப்பதாக அமைந்துள்ளது. தங்களது பாடசாலையில் சுதந்திர மாக உலாவி, ஓடிப்பிடித்து விளையாட முடியாது ஒடுங்கிப் போயிருக்கிறார்கள். கழிப்பிட வசதி, நீரருந்தும் வசதி என்பவையும் மட்டுப்படுத்தப்பட்ட எல்லைக்குள்ளேயே செயல்பட வேண்டியதாக இருக்கிறது. காலையில் ஆசிரியைகள் பாடசாலைக்கு வரும் வேளையில் தொந்திகரைக்கும் உத்தி யோகத்தர்களின் சகிக்க முடியாத கோலங்களைக் கண்டு வெட்கிப் போக வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

"மாணவர்களே எங்கள் எஜமானர்கள் என்று சொல்லிக் கொள்வதால் பயனில்லை. பாடசாலையை பாடசாலையாக இயங்கவிட வேண்டும். அதுதான் உடனடித் தேவை!" என்கிறார் ஒரு பெற்றார்.

# வைத்திய வசதி

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த சீன், டன்சினன், பேர்லண்ஸ் ஆகிய தோட்டங்களில் பிள்ளைகள், வளர்ந்தோர் என ஆறாயிரம் பேர் வரை வசிக்கின்றனர். எனினும் உரிய வைத்திய வசதியின்றி இங்குள்ள மக்கள் பரிதவிக்கின்றனர். காரணம் இம்மூன்று தோட்டங்களுக்குமாக ஒரு வைத்தியரே கடமை புரிகின்றார். மேற்படி மூன்று தோட்டங்களிலும் தனித்தனி வைத்தியசாலைகள் இருக்கின்றபோதிலும், டன்சினன் தோட்டத்தைச் சேர்ந்த ஒரு வைத்தியசாலை மாத்திரமே பூரணமாக இயங்குகின்றது.

தோட்டங்கள் தனியார் மயப்படுத்தலுக்கு முன்னர் மேற்படி மூன்று வைத்தியசாலைகளும் ஆறு வைத்தியர்களுடன் சீராக இயங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது. அண்மையில் பிரசவத்திற்காக சீன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒரு இளம் மாது உரிய வைத்திய வசதியின்றி காலமானார்.

இந்நிலை தொடர்ந்து நீடிக்குமாயின் மேலும் பலர் இறக்க நேரிடும். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுப்பது அவசியமும், அவசரமும் ஆகும்.

# கொடுப்பனவுகள் எங்கே?

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்காக நாடளாவிய ரீதியில் சமுர்த்தி திட்டத்தை அறிமுகம் செய்து அதற்கான உத்தியோகத்தர்களையும் நியமித்தது.

ஆனால் இதுவரைக்கும் அம்பாறை மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்றவர்களுக்கு இதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இதனால் வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்றவர்கள் சமுர்த்தி ஊக்குவிப்பாள உத்தியோகத்தர்களா? அல்லது இங்கு வாழும் வறிய மக்களா? என்ற கேள்வி பலர் உள்ளங்களிலும் எழுகின்றது.

மேலும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர் நியமனங்களிலும் பழிவாங்கல்களும் பல கண் துடைப்புக்களும் இடம் பெற்றுள்ளன.

அரச பங்காள அமைச்சரின் ஆதரவாளர்களின் ஆக்கிரமிப்பே இத்திட்ட நியமனங்களில் மேலோங்கி நிற்கிறது.

"சமுர்த்தியில் நீதி, நியாயம் பேணப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் கூற்றுக்கு இவை எல்லாம் மாறான நிகழ்வுகளாக உள்ளது.

எம்.சி.கலீல், 72, ஹனிபா வீதி, கல்முனை-05.

# ஒரே நாடு ஒரே மக்கள்




அரசாங்கம் ஒரே தேசம் ஒரே மக்கள் என இனங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு "தவளம" தெருக்கூத்து, பாட்டு நாடகங்களை நாட்டில் உள்ள பல பகுதிகளுக்கும் சென்று நடத்தி முடித்துள்ளது.

இந்த தெருக்கூத்து சில தமிழ் பிரதேசங்களில் நடைபெற்றபொழுது, சிங்கள மொழியில் உரையாற்றி நடித்ததினால் தமிழ் மக்களுக்கு ஒன்றுமே புரியாமல் இருந்தது.

அரசாங்கம் பதவியேற்று பலவருடம் ஆகியும், தமிழ் மொழி முழுமையாக அமுல்படுத்த பல கோரிக்கைகள் விடுத்தும் இதுவரை ஒன்றும் நடைபெறவில்லை. "தமிழ் மொழி அமுலாக்கல் 3 மாதங்களில் அமைச்சுகள், அரச நிறுவனங்கள் திணைக்களங்களில் அமுல்படுத்த வேண்டும்!" என ஜனாதிபதி உத்தரவு விடுத்திருந்தார். பல மாதம் ஆகியும் அது பயனளித்ததாக இல்லை.

(உ+ம்) சமுர்த்தியால் வெளியிடப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டை இங்கு காணலாம். இதில் முன்பக்க அட்டையில் மிகச்சிறிய எழுத்துக்களால் தமிழில் சமுர்த்தி என எழுதப்பட்டு உள்ளது. கூர்ந்து வாசிக்கக்கூட முடியாத அளவுக்கு தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு உள்ளது. தமிழ் பேசும் மக்கள் கூர்மையான பார்வையுள்ளவர்கள் என்பதை இவ்வாறான தருணங்களில் மட்டும்தான் அரசாங்கம் நம்புகிறதோ?

அ.அச்சுதன், சேனையூர்-06, மூதூர்.

# வன்னிக்குள் பயணம்



வன்னியின் கிழக்கு, மேற்கு பகுதிகளை இணைக்கும் தற்போதைய பாதை இரணைமடுக்குள வான்படு பாதையே. பருவமழை கொட்டியதால் குளம் நிரம்பி வழிந்தது. அதனால் குளத்தின் வான்கதவின் மேலே உள்ள பாதையைத்தான் போக்குவரத்துக்கு பயன்படுத்தினர். அந்தப் பாதையில் உள்ள பயண அவலத்தையே படத்தில் காண்கிறீர்கள். தடியை ஏணியாகப் பாவித்து ஆட்களும் சைக்கிள்களும் இறங்கும் காட்சி.

(படப்பிடிப்பு: தங்கராசா சிவனேசன்)

# இழுபடும் அணிவகுப்புக்கள்!

(காரைதீவு நிருபர்)

கல்முனை மாவட்ட நீதிமன்றில் இரண்டு அடையாள அணிவகுப்புக்கள் மாதக் கணக்காக இழுபட்டு வருகின்றன.

சென்ட்ரல் காம்ப் 4ஆம் கொலனி கிராமம் மீதான தாக்குதல், கொலை தொடர்பாக 400 பொலிஸாருக்கெதிரான அடையாள அணிவகுப்பு இதுவரை 4 தடவைகள் ஒத்திவைக்கப்பட்டு மாதக் கணக்காக இழுபட்டு வருகின்றது.

அதேபோன்று சென்ட்ரல் காம்ப்பில் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாகி கொலை செய்யப்பட்ட கோணேஸ்வரி வழக்கும் கடந்த 1 1/2 வருடகாலமாக இழுபட்டுவருகின்றது. அண்மையில் மட்டு எம்.பி. யோசப் பரராஜசிங்கம் மற்றும் பத்திரிகையாளர் எஸ்.எஸ்.செல்வநாயகம் ஆகியோர் சாட்சியமளித்தனர். மேலும் 10 பேர் சாட்சியமளிக்க வேண்டுமாம்.

மேலும் அண்மையில் திருவெம்பா காலத்தில் வீரமுனையில் இடம் பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் 7 ஊர்காவல் படை வீரர்களுக்கான அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. ஒருவருமே இனங் காணப்படவில்லை. கொலையாளி தப்பித்துள்ளார். நீதி எங்கே?


UNION

யூனியன் மோட்டிஸ்

கதவு பூட்டுக்கள்

Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு, கொழும்பு – 12.

தொலைபேசி – 431511, 434411



கலை அலங்கார வகுப்புக்கள்

* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* 4 மாத கற்கைநெறி

ஆரம்பம்: 28-02-98

FASNAZ BEAUTY SALON

142, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு-06.

தொலைபேசி: 589457

சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை

SHAKTHY SARAVANA, 30/16, MALLIKA LANE, WELLAWATTA, COLOMBO-06. TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை

SHAKTHY SARAVANA, 82, MANIKKAVASAGAR ROAD, TRINCOMALEE. TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை கீழ்க்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்.

ஓட்டமாவடி பெப்ரவரி 4,5ம் திகதிகளில்

Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி. T.P. 065-57345

கல்முனையில் பெப்ரவரி 7,8,9,10ம் திகதிகளில்

T.M.M பாமசியிலும் T.P. 065-29329
மற்றைய நாட்களில் Dr. P. Arumugam
No. 33, Tissa Weerasingam Sq, Boundary Road, Batticaloaவிலும் சந்திக்கலாம்.

வவுனியாவில் பெப்ரவரி 14,15,16,17ம் திகதிகளில்


வவுனியாவில் 2ம் குறுக்கு தெரு, ஞான வைரவர் கோவில் வீதி, VANNI INNல் சந்திக்கலாம்.
T.P. 024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
கவனத்திற்கு! புதியசெல்டெல் No. 072-609388

கம்பியூட்டர் பாடநெறி

புதிய அணுகு முறை.

க.பொ.த (சா/த) எழுதிவிட்டீர்களா? அடுத்தது என்ன?

- அரசாங்கத்தால் நடாத்தப்படும் NCCA பரீட்சைக்கு சிறப்பான வழி காட்டி.
- அரசாங்கத்தில் பதிவு செய்த நிறுவனம்.
- வெளிநாடு செல்வோருக்கு குறுகியகாலபாடநெறி.




Diploma in Computer Studies
காலம்: 5மாதம் கட்டணம்: 3000.00

Diploma in General Electrician
காலம்: 4மாதம் கட்டணம்: 2500.00

விண்ணப்ப முடிவுத்திகதி :- 28 பெப்ரவரி 1998

OPTIONAL SUBJECTS

Ms office, Page Maker, Corel Draw, Windows 95, Computer Assembling, House wiring, Coil rewinding etc.. மேலதிக விபரங்களுக்கு சுய முகவரி எழுதி, முத்திரை ஒட்டப்பட்ட காகித உறையுடன் தொடர்பு கொள்ளவும்.

MICS

36, 2nd Cross Street Puttalam ☎ 032-65370
NEC Kalpitiya Road, Nurachcholai.
9,19 th Lane Colombo-3 ☎ 01 575586

HEALTH IS WEALTH

Here's an opportunity to be wealthy healthwise with the professionals.

General massage
Herbal massage
Steam bath
Herbal Steam bath

ORCHID EXECUTIVE (PVT) LTD.,
Old Police Station Road,
37, Kirulapona Avenue,
Colombo-05.
T.P. 854271
R.No. N(pus)11358

BRANCH AT
No. 6A, Sellamuthu Avenue, Kolpity.
T.P. 074-517713

RADIO ASIA CANADA

ஐரோப்பிய நாடெங்கும் 24 மணிநேரமும் தமிழ் மணம் பரப்பி வரும்

Radio Asia Canada

மாபெரும் ஆரம்பம்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேஷியா மற்றும் மத்திய கிழக்கு நாடெங்கும் February 1ம் திகதி முதல் ஆரம்பமாகும்.

இந்த 1 மணிநேர நிகழ்ச்சியை-

ஐரோப்பிய நாடெங்கும் GMT 14.30 முதல் 15.30 வரை Astra satellite Channel 7, Audio Channel 7. 38Mhz இல் கேட்கலாம். கனடாவில் 9.30A.M-10.30A.M Internet சேவையிலும் தினமும் இலங்கை நேரப்படி இரவு 8.30-9.30 வரை Short Wave 25 இலும் கேட்கலாம்.

மாபெரும் ஆரம்பம்

எமது சேவை தற்போது சிங்கப்பூர் "ஒலி" வானொலி 96.8 FM அலைவரிசையில் ஒலிபரப்பாகின்றது. சிங்கப்பூர் "ஒலி" வானொலியும் R.A.C இல் ஒலிபரப்பாகின்றது.

வெகுவிரைவில்

கனடாவிலும் R.A.C இன் 18 மணிநேர தமிழ் ஒலிபரப்பு அத்துடன் அவுஸ்திரேலிய நாடெங்கும் 24 மணிநேர தமிழ் ஒலிபரப்பு

உலக நாடெங்கிலும் இருந்து இசையும் கதையும், நாடகங்கள், கட்டுரைகள், கவிதைகள் போன்ற பல வேறுபட்ட படைப்புகளும் வரவேற்கப்படுகின்றன. உங்கள் தயாரிப்புகளை cassette இல் ஒலிப்பதிவு செய்தும் அனுப்பலாம்.

முக்கிய குறிப்பு: சமயம், நம் நாட்டுக் கலாச்சாரம், உள்நாட்டுக் கலைஞர் வளர்ச்சி, கர்நாடக சங்கீதம், நாடகத் தயாரிப்புகள், மற்றும் எமது கலை, கலாச்சார வளர்ச்சியை மையமாக வைத்து தயாரிக்கப்படும் தயாரிப்பாளர்களிற்கு ஒலிப்பதிவு, ஒலி பரப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளிற்கு:

Radio Asia Canada
680 Progress Avenue Unit 01
Scarborough, Ontario
MIH 3A5
Canada.

Tel: 001-416-289-1522 Fax: 001-416-289-1840

ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக் வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 250/=,150/=
தங்க பஸ்பம் கலந்தது 1125/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 1025=

ஞான சுந்தர வைத்தியசாலை

187, செட்டியார் தெரு, கொழும்பு 11, போன்: 421398




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# எதிர்பார்த்திருந்த முனையில் எதிர்கொள்ள முடியாத தாக்குதல்

1977ற்கு முற்பட்ட காலங்களில் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புக் காட்ட கறுப்புக் கொடியை பறக்கவிடுமாறு கூட்டணியினர் கோருவர். உதயசூரியன் கொடிகளை ஏற்றி வைக்குமாறும் கோருவர்.

கூட்டணியின் கோரிக்கையை ஏற்று கறுப்புக்கொடிகளையும், உதயசூரியன் கொடிகளையும் ஏற்றிவைத்த இளைஞர்களுள் பிரபாகரனும் ஒருவர்.

**அதே பிரபாகரன் இந்தச் சுதந்திரப் பொன்விழாவை முன்னிட்டு கறுப்புக் கொடிகளுக்கு பதிலாக போர்க்கொடியை ஏற்றி வைத்துள்ளார்.**

**01.02.98 அன்று பரந்தன், கிளிநொச்சியில் புலிகள் ஏற்றிவைத்த போர்க் கொடி சுதந்திர தினமான பெப்ரவரி 4ம் திகதியும் பறந்துகொண்டிருந்தது.**

சுதந்திர தினத்தன்றும் சமர் நடந்துகொண்டிருக்கக்கூடிய வகையில்தான் தாக்குதல் திட்டமும், தாக்குதலை ஆரம்பிக்கும் திகதியும் தீர்மானிக்கப்பட்டது.

அரசுக்கும் படைகளுக்கும் நெருக்கடியான நேரத்தில் புலிகளால் திறக்கப்பட்ட பாரிய களமாகவும் அமைந்தது.

அதனால்தான் பரந்தன் கிளிநொச்சி சமரின் பரிமாணங்களையும், பயங்கரத்தையும் மூடி மறைக்க அரசும், படைத்தரப்பும் பலத்த முயற்சியில் இறங்கியிருந்தன.

களநிலரவம் தொடர்பாக தெளிவற்றதும் ஒன்றுக்குப்பின் ஒன்று முரணான தகவல்களும் சொல்லப்பட்டன. அரச கட்டுப்பாட்டில் உள்ள ரூபவாஹினி ஒருவிதமாகவும் சுயாதீன தொலைக்காட்சி வேறுவிதமாகவும், வானொலி இன்னொருவிதமாகவும் தகவல்களை வெளியிட்டன.

**எவ்வாறு முயன்றாலும் சுதந்திரதின கொண்டாட்டம் முடியும்வரைதான் களநிலவரத்தை இறுக மூடிவைத்திருக்கலாம். பின்னர் தகவல்கள் கசியவே செய்யும். ஏனெனில் இதுவரை நடைபெற்ற ஊடறுப்புச் சமர்களில் மிகப் பாரிய சமராக நடந்திருக்கிறது பரந்தன்-கிளிநொச்சி சமர்.**

ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் வரையான கிட்டத்தட்ட பதினாறு கிலோமீட்டர் தூரத்தில் படையினர் நிலைகொண்டிருந்தனர்.

16 கிலோமீட்டர் நீளமான தூரத்தில் பிரதான வீதியை மையப்படுத்தி மூன்றரை கிலோ மீட்டர் அகலத்தில் படையினர் நிலை கொணடிரருந்தனர்.

வவுனியா-யாழ் சாலையில் படையினர் பிரதான சாலையை மையப்படுத்தி ஒரு கிலோ மீட்டர் அகல நிலப்பரப்பில் தான் நிலை கொண்டுள்ளனர்.

எனவே வவுனியா-யாழ் சாலையில் நிலை கொண்டுள்ள படையினரை பக்க வாட்டுப் பகுதியால் ஊடறுப்பதைவிட, ஆனையிறவில் இருந்து கிளிநொச்சிவரை நிலைகொண்டுள்ள படைகளை ஊடறுப்பது கடினமான காரியமாகும்.

**இன்னமும் சுருக்கமாகச் சொல்வதானால் வவுனியா யாழ்சாலையில் புளியங்குளம்வரை படையினர் நிலைகொண்டுள்ள நீளம் அதிகம். சாலையை மையப்படுத்தி இரு பக்கவாட்டிலும் நிலைகொண்டுள்ள அகலம் குறைவு.**

**ஆனையிறவு-கிளிநொச்சிவரையான தரைப்பகுதியில் படையினர் நிலைகொண்டுள்ள நீளம் குறைவு. சாலையின் இரு புறமும் நிலை கொண்டுள்ள அகலம் அதிகம்.**

ஆகவே, அகண்ட நிலப்பரப்பரப்பில் பொறிகள் போன்ற காவலரண்கள், பங்கர்கள் மற்றும் நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பாதுகாப்பு எல்லைகள் கொண்ட பகுதிக்குள் புலிகளின் அணிகள் ஊடறுக்கவேண்டி இருந்தது.

பரந்தனில் இருந்து கிளிநொச்சிவரை பல மினிமுகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. கிட்டத்தட்ட பத்தாயிரம் படையினர்வரை அங்கு நிலைகொண்டிருந்தனர்.

கடந்த ஆண்டு பரந்தனில் புலிகள் ஊடறுத்தபோது கிளிநொச்சிக்குள் புக முடியவில்லை. பரந்தனில் இருந்த ஆட்டிலெறித் தளங்களை அழித்துவிட்டு, ஆயுதங்களை கைப்பற்றிக்கொண்டு சென்று விட்டனர்.

அப்போது அதிகாலையில் ஆரம்பித்து அன்று மாலைக்குள் பரந்தன் சமர் முடிந்திருந்தது. ஆனையிறவில் இருந்தும் கிளிநொச்சியில் இருந்தும் படைகள் பரந்தன் மையப் பகுதியை நோக்கி முன்னேறியதால் புலிகள் விரைவாக சண்டைக் களத்தில் இருந்து விலக நேர்ந்தது.

**ஆனால் இம்முறைச் சமர் கடந்த ஆண்டு பரந்தனில் நடைபெற்ற ஊடறுப்புச் சமரைவிட பாரியது. சமரின் உக்கிரமும் தீவிரமானது.**

01.02.98 அன்று அதிகாலை 1.30க்கு சமர் தொடங்கியது.

பூநகரி பரந்தன் வீதியூடாக மேற்குப் புறம் இருந்து ஒரு அணியும், முல்லைத்தீவு புலிகளின் தளத்தில் இருந்து புறப்பட்டு முரசுமோட்டை ஊடாக கிழக்குப் புறமிருந்து இன்னொரு அணியும் பரந்தன் மையப்பகுதி நோக்கி பாய்ச்சலைத் தொடங்கின.


முன்னணிக் காவலரண்களை உடைத்துக் கொண்டு ஆட்டிலெறித் தளங்களை நோக்கி கரும்புலிகள் செல்ல வழி ஏற்படுத்திக் கொடுத்தன புலிகளின் தாக்குதல் அணிகள்.

கிட்டத்தட்ட பத்துக் கரும்புலிகள்வரை ஆட்டிலெறித் தளங்களுக்குள் புகுந்து தற்கொலைத் தாக்குதல் மூலம் அவற்றை தகர்த்தெறிந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

**தாக்குதல் ஆரம்பித்த சில நிமிட நேரங்களுக்குள் ஆட்டிலெறி தளம் ஒன்று புலிகளின் கைகளில் வீழ்ந்தது. அங்கிருந்த ஆட்டிலெறிகள் மூலம் ஆனையிறவுத் தளம் நோக்கி புலிகள் சரமாரியாக ஷெல்களை ஏவினார்கள்.**

அதேசமயம் அப்பிரதேசத்தில் இருந்த தொலைத்தொடர்பு கோபுரமும் புலிகளின் ஷெல் வீச்சில் தகர்ந்தது.

இதனால் ஞாயிறு முதல் யாழ்ப்பாணத்திற்கான நேரடி தொலைத் தொடர்புகள் அனைத்தும் செயல் இழந்தன.




அம்புக் குறிகளு புலிகளின் தாக்குதல் முனைகளைக் காட்டுகின்றன.

ஆனையிறவுக்கும் பரந்தனுக்கும் இடையிலான இராணுவ வேலியை பரந்தன் சந்தியில் ஊடறுத்துப் பிளந்தன புலிகள் அணிகள். இதனால் ஆனையிறவு தளத்துடனான பரந்தன் படையினரின் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

புலிகளின் மற்றொரு அணி பரந்தனுக்கும், கிளிநொச்சிக்கும் இடையிலான இராணுவ வேலியை கரடிப்போக்குக்கு சமீபமாக ஊடறுத்துப் பிளந்தது.

இதனால் பரந்தன் மையப்பகுதியில் உள்ள படையினர் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கிக் கொண்டனர். அதேசமயம் கரடிப் போக்குக்கு அப்பால் நிலைகொண்டிருந்த படையினர் தனியாகத் துண்டிக்கப்பட்டனர்.

அதனையடுத்து கிளிநொச்சி நகரில் நிலை கொண்டுள்ள படைகளை நிலை குலையச் செய்யவும், பரந்தன் படைகளுக்கு உதவிக்குச் செல்வதை தடுக்கவுமான புலிகளின் தாக்குதல் ஆரம்பித்தது.

முல்லைத்தீவில் உள்ள புலிகளின் தளம் ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டிலெறிப் பீரங்கிகள் கிளிநொச்சி நகர் நோக்கி ஷெல்களை ஏவத்தொடங்கின.

பரந்தன் படைகளுடன் புலிகளின் அணிகள் போரிட்டுக்கொண்டிருக்க, கிளிநொச்சி நகரில் இருந்த படை நிலைகளை நோக்கி புலிகளின் ஆட்டிலெறிகள் ஷெல் மழை பொழிந்து கொண்டிருந்தன.

அதனால் முகாம்களை விட்டு பதுங்கு குழிகளை நாடி படையினர் செல்ல வேண்டி ஏற்பட்டது.

**தாக்குதல் தொடங்கிவிட்டது என்ற செய்தி அறிந்ததும் கிபீர் விமானங்கள் பறந்து சென்ற போதும், களத்தில் குண்டுத் தாக்குதல் நடத்த இயலவில்லை. படையினரையும், புலிகளையும் இனம் கண்டு தாக்க முடியாதளவுக்கு களநிலவரம் காணப்பட்டது.**

உதவிக்கு விரைந்த ஹெலிகளை நோக்கியும் புலிகள் தரையில் இருந்து தாக்கியதால், பலாலி விமான தளத்தில் ஹெலிகளை இறக்கி விட்டு விமானிகள் காத்திருந்தனர்.

ஆனையிறவில் இருந்து பரந்தனுடன் இணைப்பை ஏற்படுத்தும் முயற்சியும் ஞாயிறு இரவுவரை படையினருக்கு பயன் அளிக்கவில்லை.

**அதேசமயம் கிளிநொச்சி நோக்கிய புலிகளின் தரைநகர்வுத் தாக்குதல் ஆரம்பமானது. கிளிநொச்சியின் மையப்பகுதி நோக்கி மும்முனைகளில் புலிகளின் அணிகள் பாய்ந்தன.**

**கிளிநொச்சியின் கிழக்கில் இருந்தும், மேற்கில் இருந்தும் முன்னேறிய புலிகளின் அணிகள் இரு பக்கவாட்டுப் பகுதியால் ஊடறுக்க, தெற்குப்புறமாக இரணைமடுப் பகுதியில் நகர்ந்த புலிகளின் அணி முகப் பகுதியில் இடித்து பின்னே தள்ளியது.**

**மும்முனை வியூகத்திற்குள் சிக்கிய படையினர் காப்பரண்களை நோக்கி பின் வாங்கினர்.**

முதல்நாள் சண்டையில் பலியான புலிகளில் பலர் கண்ணிவெடிகளில் சிக்கியே பலியாகினர். பங்கர்களில் இருந்தபடி படையினர் நடத்திய தாக்குதலும் புலிகளின் அணிகளுக்கு சேதத்தை ஏற்படுத்தியது.

மினிமுகாம் அமைந்திருந்த கட்டடங்கள், காவலரண்கள் போன்றவை புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன. குண்டுவைத்து தகர்க்கப்பட்டன.

கிளிநொச்சி மத்திய வித்தியாலயப் பகுதியில் இருந்த படையினர் தற்காப்புக்கான முயற்சியாக, பாதுகாப்பான காப்பரண்களை நோக்கி பின்வாங்கினர்.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம், சிங்கள மகாவித்தியாலயம் ஆகியவை புலிகளால் குண்டுவைத்து தாக்கப்பட்டன. அங்கிருந்த இராணுவ தளபாடங்கள் உபகரணங்கள் என்பவையும் தகர்க்கப்பட்டன.

02.01.98 அன்று ஆனையிறவில் இருந்து பரந்தன் நோக்கி பாரிய நகர்வு ஒன்றை ஆனையிறவு படையினர் மேற்கொண்டனர்.

கனரக வாகனங்கள், ஆட்டிலெறிகள் சகிதம், விமானப் படையின் வான் பாதுகாப்புடன் பெரிய எடுப்பில் படைகள் நகர்ந்தன.

**ஆனையிறவு படைநகர்வை எதிர்கொள்ள வேண்டுமானால் பரந்த வெளிகளில் நின்று சண்டையிட்டாகவேண்டும். இழப்புக்கள் அதிகமாகும். எனவே பரந்தன் களத்திலிருந்து புலிகளின் அணிகள் விலகி, கிளிநொச்சியின் மையப்பகுதிக்குள் புகுந்தன.**

விமானப் படையினரால் சண்டைக் களத்தில் குண்டுகளைப் போட இயலவில்லை. படையினருக்கு சமீபமாக நின்று சண்டையிட்டதால் வான் தாக்குதலுக்கு வாய்ப்பு இருக்கவில்லை.

**கெரில்லாப்பாணியில் தொடங்கிய சமர் மரபுப் போர் கலந்த முறையில் தொடர்ந்து நடந்தது.**

**திங்கள் இரவு கடும் சண்டை மூண்டது. கிளிநொச்சி நகருக்குள் புலிகளின் அணிகள் படையினரை தேடியழிக்கும் தாக்குலை ஆரம்பித்தன. படையினரும் பாதுகாப்பான காப்பரண்களுக்குள் இருந்தபடி பலத்த தாக்குதல் தொடுத்தனர்.**

**செவ்வாய் காலை விடிந்தபோது கிளிநொச்சி நகரின் மையப்பகுதி புலிகளின் கையில் வீழ்ந்திருந்தது.**

கரடிப்போக்கில் இருந்து கிளிநொச்சி வரை சுமார் மூன்று கிலோமீட்டர் வரையான பிரதேசத்தில் புலிகளின் அணிகள் நிலை கொண்டிருந்தன.

செவ்வாய் அன்றும் புதன் காலையும் சமர் தொடர்ந்து கொண்டிருந்தது. கிளிநொச்சியின் மையப்பகுதியை நோக்கி முன்னேற ஆனையிறவு தளப்படையினரும், பரந்தன் படையினரும் முயற்சித்து வருகின்றனர்.

அவர்களது முன்னேற்றத்தைத் தடுக்க கரடிபோக்கில் இருந்து புலிகள் மோட்டார் ஷெல்களை சரமாரியாக ஏவி வருகின்றனர்.

ஞாயிறு முதல் புதன்கிழமைவரையான சமரில் படையினர் தரப்பில் 300 பேர்வரை பலியாகி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

புலிகளின் இழப்பு 160ஐ தாண்டியிருந்தது.

**அகண்டு பரவியிருந்த படை நிலைகளை ஊடறுக்கும் தாக்குதல் என்பதால்தான் புலிகள் அதிக இழப்பைக் கொடுத்து களநிலவரத்தை தமக்கு சாதகமாக மாற்ற வேண்டி ஏற்பட்டது.**

பொறிவெடிகள், மற்றும் பாதுகாப்பான காப்பரண்களில் இருந்து படையினர் தொடுத்த தாக்குதல்கள் போன்றவையும் புலிகளின் இழப்பை அதிகமாக்கியுள்ளது.

அதுதவிர கிளிநொச்சியில் புலிகள் தாக்குவார்கள் என்று படையினர் கடந்த ஒருவருட காலமாக தினமும் எதிர்பார்த்துக் கொண்டே இருந்தனர்.

எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத நேரத்தில் தாக்குவதுதான் கெரில்லா உத்தி.

ஆனால், நாட்டின் சகல பகுதிகளிலும் புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்துப் படையினர் காத்திருக்கின்றனர். அதிலும், வன்னியில் தினமும் சகல முனைகளிலும் படையினர் உஷாராக உள்ளனர். புலிகளின் ஊடறுப்பை எதிர்கொள்ளும் ஏற்பாடுகளையும் செய்து வைத்திருக்கின்றனர்.

படையினரின் உஷார் நிலையைக் கண்டு புலிகள் தாக்குதல் நடத்தாமல் இருந்தால், எதிரி முந்த முன்பாக தாம் முந்திவிடவேண்டும், எதிரியின் ஆட்பலத்தையும், மன பலத்தையும் உடைக்க வேண்டும் என்ற புலிகளின் அடிப்படை நோக்கம் நிறைவேறாது.

சுதந்திர தினத்தை முடித்துக்கொண்டு வன்னியில் பெரும் தாக்குதலை நடத்தவும் படைகள் திட்டமிட்டுள்ளன.

கிளிநொச்சியில் இருந்தும் படை நகர்வு இரணைமடு நோக்கி ஆரம்பிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

**படை நடவடிக்கைக்கான ஒரு முனையாகவும், ஜயசிக்குறுய் சென்று சேரவேண்டிய இடமாகவும் இருக்கிறது கிளிநொச்சி.**

**எனவேதான் கிளிநொச்சியை பிரதான தாக்குதல் இலக்காக தெரிவு செய்தனர் புலிகள்.**

வன்னிப் போர் முனையில் போர்த்தந்திர ரீதியில் அவசியமான தாக்குதல் என்பதால்தான், படையினர் உஷாராக இருப்பர் எனத் தெரிந்தும் புலிகள் தமது அணிகளை களத்தில் இறக்கினர்.

**படையினர் எதிர்பார்த்த முனையில் படையினரால் எதிர்கொள்ள முடியாத தாக்குதலாக நடத்தப்பட்டிருப்பதுதான் பரந்தன்-கிளிநொச்சி சமர்.**

**சண்டைக் களத்தில் படையினரின் பலம், சமர் நடைபெற்ற நிலப்பகுதியின் விஸ்தீரணம், நில அமைப்பு, படையினரின் எதிர்பார்ப்பு என்பவற்றுடன் ஒப்பிடுகையில் புலிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு அதிகம் இல்லை என்றே கூறவேண்டும்.**

படைத்தரப்பினர் தம்மில் 300 பேர் காயமடைந்துள்ளனர் என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர்.

களத்தில் இருந்து ஹெலிகள் மூலம் சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்டவர்கள்தான் அந்த முன்னூறுபேர்.

சிறுகாயங்கள் என்றால் முகாமில் வைத்தே சிகிச்சை கொடுத்திருப்பர். எனவே பலத்த காயம் அடைந்தவர்கள்தான் கொண்டுவரப்பட்டிருப்பர்.

முன்னூறு பேர் பலத்த காயம் அடைந்துள்ள போர்முனையில் ஆக முப்பது நாற்பது பேர்தான் பலியாகினர் என்று படைத்தரப்பு கூறுவதை எப்படி நம்புவது?

பரந்தனில் புலிகளின் ஏழு நிலைகள் மீது விமானத்தாக்குதல் நடத்தப்பட்டதாக செய்தியில் கூறப்பட்டது. பரந்தன் ஒரு பரந்த வெளிப்பிரதேசம். அங்கு படையினர்தான் நிலைகொண்டிருந்தனர். புலிகள் நிலைகள் எங்கிருந்து அங்கு முளைத்தன என்றுதான் தெரியவில்லை.

## நாரதர்

பொறிவெடிகளில் சிக்கிய புலிகளின் உடல்களும் மற்றும் கரும்புலிகள் 14 பேரின் உடல்களும் கிடந்திருக்கலாம். அவற்றை ஒரு வாய்ப்பாட்டால் பெருக்கி 300 உடல்களை கைப்பற்றியதாக கூறி வருகின்றனர் போலுள்ளது.

**55 உடல்களை புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர். ஆயுதங்களை கைப்பற்றியுள்ளனர். ஆட்டிலெறி நிலைகள் தகர்க்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி நகரின் மையப்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்திருக்கிறது. இந்த ஆண்டின் புலிகள் நடத்தியுள்ள முதலாவது மிகப்பாரிய அழித்தொழிப்புச் சமர் இதுதான்.**

புலிகளைப் பொறுத்தவரை வெற்றிகரமான சமராகவே பரந்தன்-கிளிநொச்சி சமர் அமைந்திருக்கிறது.

'எதிர்பார்த்திருந்தோம், முன்கூட்டியே தகவல் கிடைத்தது, உடல்களை கைப்பற்றிவிட்டோம்' என்ற கூற்றுக்கள் களநிலவரத்தை மூடிமறைக்கும் பிரசாரதந்திரங்களாக படைத்தரப்பால் பயன்படுத்தப்படுகிறதா? என்று தெரியவில்லை. ■

# அதிரடி அய்யாத்துரை



***யாழ் மேயராகி*** விட்டார் முன்னாள் ஆசிரியை. வேம்படி மாணவிகள் செல்லமாகப் 'பொன்னி' என்று அழைப்பர். முன்கோபம் அதிகமாம். யாழ் நகரை அழகு மிளிரச் செய்யப்போகிறாவாம். உப்பிடியெண்டால் அந்த மனுசன் துரையப்பாவை தூற்றாமல் இருந்திருக்கலாம்! அப்போது தன்மான அரசியல் பேசிய கட்சியினர் இப்போது நிர்மாண அரசியல் பற்றிப் பேசுகினம். சொன்னால் கோபப்படுகினம்.

***சோதனை அரண்கள்*** சிலவற்றில் லொறிகளைச் சோதனையிடும்போது சீருடையினர் எட்டத்தில்தான் நிற்கினமாம். சாரதி இறங்கிச் சென்று ஆவணங்களைக் காண்பித்த பின்னர்தான் லொறிகளைச் சமீபிக்கின்றனராம். எல்லாம் ஒரு முன் ஜாக்கிரதைதான்!

**பொன்விழாவுக்கு** வருவதை உலகத் தலைவர்கள் நைசாகத் தவிர்த்து விட்டனர். உடையார் பொல்லை அனுப்பி வைப்பது போல தங்கள் பிரதிநிதிகளைத்தான் அனுப்பிவைத்தவை. அவை வந்ததே பெரிய காரியம் எண்ட மாதிரி அதிகாரத்தரப்பார் பெருமூச்சுவிட்டிருப்பினம்.

***புள்ளடிபோடச் சென்ற*** ஆட்களை உடல் முழுக்க 'மசாஜ்' பண்ணித்தான் உள்ளேவிட்டவையாம். "ஓசியிலே மசாஜ் செய்து கொண்டு வந்திருக்கிறம்!" எண்டு முதியவர் ஒருவர் பத்திரிகையாளர்களிடம் கூறினாராம். சில வாக்காள 'குடி'மக்கள் மசாஜ் பண்ணிய சீருடையினரை முகம் சுளிக்கவைத்துப் போட்டினம். அந்தளவுக்கு கமகம வாசனை. தண்ணீரில் மிதந்துவந்துதான் ஜனநாயகக் கடமையை செய்தவையாம்!

**கண்டியில் பத்துக்கு** மேற்பட்ட தமிழ்ப் பெண்களின் தாலிக் கொடிகளை அறுத்தெடுத்துக் கொண்டு போனதாம் கும்பல். ஆறுதலாக ஒரு இடத்தில் அமர்ந்து பெற்றோல் குண்டு தயாரித்துக் கொண்டுவந்து கோயிலுக்கு வீசப்பட்டதாம். இதையெல்லாம் சீருடைத்தரப்பு கண்டும் காணாததுபோல இருந்த காட்சியையும் பலர் கண்டுவிட்டு பொருமுகினம். 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்றார் நாமக்கல் கவிஞர். தமிழ்க் கடவுள்களே தலையில்லாமல் நிக்குதாம். சனம் எப்படி தலையை நிமிர்த்துவதாம்?

**பொன்விழாவை** எங்கு நடத்த வேண்டும் என்பதும் பிக்குமார் சொற்படிதான் நடக்குது. பொதியை எப்படிக் கொடுக்க வேண்டும் என்பதும் அவை சொற்படிதான் நடக்கும். அவை தெருவில் இறங்கினவுடன் அப்பா ஒப்பந்தத்தை கீழே போட்டது பழைய கதை. மகள் ரெண்டு எழுத்தார் மீது தடையைப் போட்டது புதிய கதை. இந்த நாட்டில் ஏதாவது காரியம் நடக்கவேண்டுமானால் ஒன்றில் பிக்குமார் நினைக்க வேண்டும், அல்லது பிரபாகரன் நினைக்க வேண்டும்.

***யாழ் குடாநாட்டில்*** உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளை தங்கள் அணிக்குள் இரண்டறக் கலக்கச் செய்ய நீல அணி விரும்புகிறதாம். எந்தளவு தூரத்திற்கு 'டமில்' கட்சிகளை அவை எடைபோட்டு வைத்திருக்கினம் பார்த்தியளோ? தனியாக நின்று "எங்களுக்கு சேவை செய்வதைவிட ஒன்றாகக் கலந்திருந்து செய்யலாமே" என்று அபிப்பிராயப் படுகினமாக்கும்!

**ரூபவாஹினித் தலைவர்** முன்னாள் இடதுசாரி. விட்டால் நாள் முழுக்க இனப்பிரச்சனைக்கான நியாயமான அரசியல் தீர்வின் அவசியம் பற்றி மனுசன் வெளுத்துக் கட்டுவார். ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகள் மட்டும் கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு போய்க் கொண்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமையில் தமிழ் பேசும் நேயர்களால் விரும்பிப் பார்க்கப்பட்ட 'ரேவதி' தொடர் நாடகம் பாதியில் திடீர் நிறுத்தம். காரணமும் கூறப்படவில்லை. அதற்குப் பதிலாக 'சீதா' என்றொரு சிங்கள நாடகத்தை தமிழ்க்கொலை வசன உச்சரிப்புக்களோடு காண்பித்தனர். முடிவாக சிங்களத்தில் ஏதோ போட்டார்கள். அடுத்தவாரமும் போட்டு கழுத்தறுப்பார்களோ இல்லையோ என்றுகூட தெரியாமல் பார்தோர் குழம்பினர். ரேவதி நாடகக் கதி என்ன? "தமிழ்பேசும் மக்களை நடுவீதியில் நிறுத்தினால்கூட கேட்க நாதியில்லை; நாடகத்தை பாதியில் நிறுத்தினால் யார் கேட்கிறது?" என்று நினைத்தார்களாக்கும்.

***யாழில் இருந்து*** வந்த கிரிக்கெட் குழு தோற்பதற்காகவே சுற்றுப் பயணம் செய்துவிட்டுப் போய்விட்டது. குழுத் தலைவர் தயாளன் முன்னர் யாழ் இந்து கிரிக்கெட் குழுவில் ஆடியவர். அப்போது கப்டன் பண்ணியவர் யோகி. பின்னர் அவர் ரெண்டு எழுத்து முக்கியஸ்தராக இருந்தவர். அதனைத்தான் முன்னர் குறிப்பிட்டிருந்தேன். அன்பர்கள் சிலர் தவறுதலாக விளங்கிக் கொண்டு, யோகிதான் கப்டனாக வந்திருப்பதாக நான் குறிப்பிட்டதாக நினைத்துவிட்டனர். புரியும்படியாக நான்தான் எழுதத் தவறிவிட்டேன் என்று நினைக்கிறேன்.

**இவ்வாரம்** மகாத்மா காந்தியின் பொன்மொழி (காந்திய வாதிகளும் கவனிக்கலாம்)

"நம்மைப் புகழ்வதை
காட்டிலும் நம்மீது
கூறப்படும்
குற்றங்களை
மதிக்கத் தெரிவதே
உயர்ந்த பண்பாகும்!" ■



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# 167

## புலி எதிர்ப்பும் பலிகொடுப்பும்

"தமிழ் மக்கள் இலங்கை அரசுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய அளவுக்கு விட்டுக் கொடுத்தனர். இனி மேலும் ஒற்றுமை என்ற ரீதியில் அடக்குமுறையினை திணிப்பதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு உரிய அதிகாரங்கள் எந்த வடிவத்தில் தரப்பட வேண்டுமோ அந்த வடிவத்தில் தரப்பட வேண்டும். இல்லையேல் இலங்கையில் ஈழம் உருவாகும்."

இவ்வாறு கருத்துத் தெரிவித்தவர் வேறு யாருமல்ல, வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த வரதராஜப் பெருமாள்தான்.

கூறியதோடு மட்டும் நின்று விடாமல், வடக்கு-கிழக்கு மாகாணசபையில் ஈழப் பிரகடனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார் வரதராஜப் பெருமாள்.

வரதராஜப் பெருமாளின் அறிவிப்பும் இலங்கை அரசுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. புலிகளுக்கான இரண்டாம் கட்ட ஆயுத உதவியும் வன்னியில் வைத்து வழங்கப் பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் தொண்டர் படைமீதும், தேசிய இராணுவம் மீதும் புலிகள் தாக்குதல்களைத் தொடுத்தனர்.

சரியான தலைமைத்துவம் இல்லாத நிலையில் தேசிய இராணுவம் மற்றும் தொண்டர் படை உறுப்பினர்கள் புலிகளை எதிர்த்து நிற்க முடியாமல் பலியாகினர்.

புலிகளுக்கு எதிரான இயக்கத் தலைவர்கள் புலிகளுக்கு எதிராக வீரம் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு போதிய பாதுகாப்பும், வசதியான தங்குமிடங்களும் இருந்தன.

அந்த இயக்கங்களின் உறுப்பினர்கள் தான் தங்கள் தலைவர்களின் வாய் வீரப் பேச்சுகளுக்கான பலிக்கடாக்களாகினர்.

**தங்கள் உறுப்பினர்கள் பலியாகிக் கொண்டிருப்பதை தடுக்கக்கூடிய வழி வகைகளைச் செய்வதைவிட, பலியான தங்கள் உறுப்பினர்களது எண்ணிக்கையைக் கூறி இந்திய அரசினதும், படைகளினதும் நல்லெண்ணத்தைப் பெறவும், பாராட்டைப் பெறவும்கூட சில இயக்கத் தலைமைகள் நாட்டம் காட்டின.**

"நாங்கள்தான் புலிகளுக்கு எதிராக முன்னணியில் நின்று சண்டை பிடிக்கிறோம்." என்று இந்திய அரசிற்கு கூற வேண்டுமானால் தங்கள் உறுப்பினர்கள் பலியாகவும் வேண்டும் என்ற மனப் போக்கு தலைமைகளிடம் தோன்றியது.

அதனை நியாயப்படுத்தவும், தமது அப்பாவி உறுப்பினர்களை உருவேற்றி பலிகொடுக்கவும் புலிகள் எதிர்ப்பு என்பதற்கு தத்துவ விளக்கங்கள் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

உண்மையாகவே ஏனைய இயக்கங்களில் இருந்த முன்னணி உறுப்பினர்கள் பலருக்கு புலிகளில் இருந்த கோபம் ஓரளவு நியாயமானது.

எங்கள் சக தோழர்களை புலிகள் கொன்றனர். நாங்களும் போராடத்தானே வந்தோம். எங்கள் போராடும் உரிமையை புலிகள் எப்படித் தடுக்கலாம்? என்ற உணர்ச்சியோடு கலந்த கோபம் அது.

அத்தகையவர்கள்தான் புலிகளை எதிர்ப்பதில் முன்னணியில் நின்றனர். புலிகளை எதிர்த்துப் பிரசாரம் செய்தனர்.

தங்களால் புலிகளைவிட உறுதியாகப் போராட முடியும் என்ற நம்பிக்கையோடும், தங்கள் போராட்ட உரிமையை புலிகள் பறித்து விட்டனரே என்ற கோபாவேசத்திலும் புலிகளை எதிர்த்து கிளர்ந்த ஏனைய இயக்க உறுப்பினர்களை குறை சொல்ல முடியாது.

### நேர் எதிர் நிலைகள்

**இந்தியப் படையோடு என்றால் என்ன? எந்தப் படையோடு என்றால் என்ன இணைந்து புலிகளை எதிர்த்து நிற்போம். பின்னர் நாம் வடக்கு-கிழக்கில் காலூன்றிக் கொண்டு ஈழப் போராட்டத்தைத் தொடர்வோம் என்றே நினைத்தனர்.**

ஆனால், அவர்களது நினைப்புக்கும் அவர்களது தலைமைகளது நினைப்புக்கும் இடையே நேர் எதிரான தன்மை காணப் பட்டது.

புலிகளுக்கு எதிராக வாய்வீச்சுக்களை அள்ளி வீசத் தயாராக இருந்தனரே தவிர, புலிகளுக்கு எதிரான செயல்பூர்வமான நடவடிக்கைகளுக்கு வழிகாட்டவோ, புலிகளை எதிர்கொள்ளவோகூட தலைமைகள் தயாராக இருக்கவில்லை.

**எங்கள் உறுப்பினர்களை புலிகள் கொல்கிறார்களே நியாயமா? எனக் கேட்டு தங்கள் உறுப்பினர்களை புலிகளுக்கு எதிராக சண்டையிட இந்தியப் படையுடன் அனுப்பிவைத்தனர். ஆனால் சரியான வழிகாட்டல் இன்றி தங்கள் உறுப்பினர்கள் பலியாகிக் கொண்டிருப்பதை அதே தலைமைகள்தான் வேடிக்கை பார்த்துக் கொண்டும் இருந்தன.**

ஒரு கட்டத்தின் பின்னர் புலி எதிர்ப்பு என்பதும், புலிகளால் கொல்லப்பட்ட தமது உறுப்பினர்களது பட்டியலும் இந்திய அரசிடம் காட்டி நற்சான்று பெறும் பத்திரங்களாக மாறியிருந்தன.

இந்திய அரசின் நிதி உதவிகள் இயக்கத்திற்கு இயக்கம் வித்தியாசப்பட்டிருந்தது. தமக்கும் கூடுதலாக நிதி பெறுவதற்கும், கூடுதலாக நிதி பெறும் இயக்கத்திற்கு தாமும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கவும் தம்மில் பலியானவர்களதும், தம்மால் பலியான புலிகளதும் பட்டியல்களையே தூக்கிக் காட்டினார்கள்.

**புலிகளால் கொல்லப்பட்ட ஏனைய இயக்க உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட, புலிகளுக்கு எதிரான சண்டை என்ற பெயரில் ஏனைய இயக்கத்தலைமைகளால் எவ்வித உத்திகளும் இல்லாமல் முன்னே தள்ளப்பட்டு, பலிகொடுக்கப்பட்ட உறுப்பினர்களின் தொகை பன்மடங்கு அதிகம்.**

இதனால்தான் பல இயக்கங்களில் உண்மையான உணர்வுடன் புலிகளுக்கு எதிராக முன்னணியில் நின்று செயற்பட்ட பலர்கூட மெல்ல ஒதுங்கத் தலைப்பட்டனர்.

புலிகளின் வீழ்ச்சி ஏற்பட்டால் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இன்னொரு அரசியல் இராணுவ இயக்கத்தை தோற்றம் பெறச் செய்ய தங்கள் தலைமைகளால் முடியவே முடியாது எனவும் உணர்ந்தனர்.

**குறுகிய இயக்க வரம்புகளுக்குள் நின்று சிந்திக்கின்றவர்கள் தவிர, ஏனைய இயக்க முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள் பலர் புலிகள் தொடர்பான எதிர் நிலைப்பாட்டை கைவிட்டுள்ளமைக்கும் அதுதான் காரணம்.**

இதனைத்தான் சிலர் ஆச்சரியமாக அல்லது புதிராக நோக்குகிறார்கள். நேற்று புலிகளை தீவிரமாக எதிர்த்தவர்கள் இன்று ஏன் அடக்கி வாசிக்கிறார்கள்? என்று சந்தேகிப்பது ஒரு கோணம்.

புலி ஆதரவாளர்கள் என்று முத்திரை குத்தி பிரச்சனைக்கு உள்ளாக்க நினைக்கும் கபட நோக்கங்கள் கொண்டோர் இன்னொரு பக்கம்.

**"ஆயிரமாயிரம் உயிர்களை பலிகொடுத்தும், விலைமதிப்பற்ற இழப்புக்கள் ஊடாகவும், கண்ணீரும், செந்நீரும் சிந்தி வளர்க்கப் பட்ட போராட்டம் தன் இலக்கை எட்டும்வரை தமிழ்பேசும் மக்களின் அரசியல் இராணுவ பலம் பாதுகாக்கப்பட வேண்டும்.**

**ஈழம்தான் இறுதி என்று நான் கூறவில்லை. ஈழத்துக்கு மாற்றான கௌரவமான தீர்வைப் பெறுவதற்குக்கூட உரத்துப் பேசும் பலம் நம் பக்கம் இருக்க வேண்டும்.**

சரி, பிழைகளுக்கு அப்பால் அந்தப் பலத்தை புலிகள்தான் நிறைவு செய்கிறார்கள். ஏனைய இயக்கங்கள் சாத்வீக பாதையிலான அரசியல் பலத்தைக் கூட கட்டியெழுப்ப முடியவில்லை. எனவே புலிகளுக்கு ஆதரவளிக்காவிட்டாலும்கூட, எதிர்ப்பு தெரிவிக்காமல் இருப்பதே சரியானது"

மேற்கண்ட கருத்தை கூறியவர் முன்னர் புலிகளுக்கு எதிராக கடும் போக்கைக் கொண்டிருந்த முந்நாள் போராளி ஒருவராகும்.

இத்தகைய நிலைப்பாடுகளை பேரினவாதிகள் மட்டுமல்லாமல், சில இயக்கத் தலைமைகள்கூட புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாடுகளாக காட்டத் தலைப்படுகின்றன.

ஆனால் அது தவறு. தமிழ் பேசும் மக்களின் பிறப்புரிமைகளை, அரசியல் ஜனநாயக உரிமை வேட்கைகளை பலவீனப் படுத்த விரும்பாத நிலைப்பாடு எனக்கூறுவதே சரியானதாகும் என்று நான் நினைக்கிறேன்.

இத்தகைய சக்திகளை புலிகள் என்று முத்திரை குத்துகிறவர்கள்தான், அவர்கள் புலிகளை நோக்கி செல்லத் தூண்டுகிறார்கள்.


இந்தியப்படை அப்பாவிகளைச் சுட்டுக் கொன்றபோதும், பாலியல் வல்லுறவுகள் புரிந்தபோதும் அதனை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளாத தங்கள் இயக்கத் தலைமைகளின் போக்கால் இயக்கங்களின் உறுப்பினர்கள் பலர் மனம் வெறுத்துப் போயினர்.

அவற்றைக் கண்டிக்காதது மட்டுமல்லாமல், நியாயப்படுத்தும் விதமாகவும் தலைமைகள் பேசியதும் உறுப்பினர்களுக்கு எதிர்பாராத அதிர்ச்சியாக இருந்தது.

இவற்றின் காரணமாகவே ஏனைய இயக்கங்களின் உட்பலம் மேலும் பலவீனமானது. மிகச் சுலபமாக புலிகளின் இலக்குகளாக மாறிப் போயின.

மறுபுறத்தில் புலிகளோ, பல்லாயிரம் இந்தியப் படைகளையும் எதிர்த்து விரட்ட முடியும் என்ற நம்பிக்கையோடு வளர்க்கப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இந்தியப் படை காலத்தில் தான் புலிகளின் பெண்கள் அணியும் மேலும் ஒரு படி வளர்ச்சி கண்டது.



இந்தியப் படைக்கு எதிரான சமரில் பலியான முதல் பெண் புலியை மிகப் பாரியளவில் புலிகள் கௌரவித்தனர்.

பலியான தம் உறுப்பினர்களுக்கு கௌரவம் செய்வதிலும் புலிகள் முன்னணியில் நின்றனர்.

அத்தனை தடைகள் மத்தியிலும் பலியான தம் உறுப்பினர்களுக்கு புலிகள் அஞ்சலி செய்தும், உருவப் படங்களைக் கொண்ட பிரசுரங்கள் வெளியிட்டும் கௌரவம் செய்து கொண்டிருந்தனர்.

புலிகளுக்கு எதிரான சமரில் பலியான தங்கள் உறுப்பினர்களைப் பற்றி ஏனைய இயக்கங்கள் கவலைப்பட்டதாகக்கூட தெரியவில்லை.


நாட்டுக்குள் இருந்து கொண்டு ஏனைய இயக்கங்களால் செய்ய முடியாத காரியங்களை காட்டுக்குள் இருந்துகொண்டு, இந்திய விமானக் குண்டு வீச்சுக்கள் மத்தியிலும் புலிகளின் தலைமையால் செய்ய முடிந்தது.

காட்டுக்குள் அலுவலகம் இயங்கியது. தட்டச்சுக்கள் அடித்தனர். செய்திகளை காட்டின் நடுவே இருந்து கொண்டு உலகெங்கும் அனுப்பியும் வைத்தனர்.

உள்நாட்டுச் செய்திகளை புலிகளின் வெளிநாட்டுக் கிளைகள் உடனுக்குடன் பெற்று பிரசுரித்தன.

**இந்தியப்படையுடன் 04.07.1989வரை நடைபெற்ற போரில் பலியான புலிகள் இயக்க பெண் உறுப்பினர்களது பெயர் விபரம்:**

| திகதி | இயக்கப் பெயர் | சொந்தப் பெயர் | சொந்த இடம் | வீரமரணமடைந்த சம்பவம் |
|---|---|---|---|---|
| 10.10.87 | 2ம் லெப்.மாலதி | சகாயசீலி | மன்னார் | கோப்பாயில் நேரடி மோதலின்போது காயமடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு |
| 19.10.87 | விஜி | கோமதி | கோண்டாவில் | கோப்பாயில் செல் தாக்குதலில் |
| 19.10.87 | ஜெனா | புஸ்பலதா | கன்னாட்டி | கோப்பாயில் செல் தாக்குதலில் |
| 03.11.87 | ரூபி | மாரியம்மா | இலுப்பைக்கடவை | கொக்குவிலில் செல் தாக்குதலில் |
| 03.11.87 | சபரி | ஹம்சா | திருநெல்வேலி | கொக்குவிலில் செல் தாக்குதலில் |
| 20.12.87 | சகிலா | றஜனி | மன்னார் | அச்செழு சுற்றி வளைப்பில் காயமடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு |
| 23.12.87 | லெ.ப்தர்ஷினி | சிவரஞ்சினி | ஓமந்தை | உரும்பிராய் நேரடி மோதலில் |
| 23.12.87 | நிதி | சிவமனோகரி | இடைக்காடு | உரும்பராய் நேரடி மோதலில் |
| 23.12.87 | நிர்மலா | ஒறின் அஜந்தி | யாழ்ப்பாணம் | உரும்பராய் நேரடி மோதலில் |
| 23.12.87 | நிகிந்தா | பிறேமலதா | சாவகச்சேரி | உரும்பராய் நேரடி மோதலில் |
| 23.12.87 | சதா | செல்வராணி | முள்ளியவளை | உரும்பராய் நேரடி மோதலில் |
| 13.03.88 | றொஷானி | சுதாங்கனி | கொடிகாமம் | வேணாவிலில் முகாம் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 13.03.88 | லெப்.இமெல்டா | மரியகோசி | கொழும்புத் துறை | வேணாவிலில் முகாம் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொன்டு |
| 13.03.88 | டொறின் | சாந்தினி | கொடிகாமம் | வேணாவிலில் முகாம் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 13.03.88 | சுகீ | துஷ்யந்தி | நீர்வேலி | வேணாவிலில் முகாம் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 13.03.88 | ஹெலன் | அநுஷியா | காரைநகர் | வேணாவிலில் முகாம் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 13.03.88 | சுரபி | மஞ்சுளாதேவி | திருநகர் | வேணாவிலில் முகாம் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 22.03.88 | லெப்.துர்க்கா | கமலாதேவி | புதுக்குடியிருப்பு | விசுவமடு முகாம் சுற்றி வளைப்பில் |
| 03.07.88 | 2ம் லெப்.மரியா | புவனேந்திர ஜோதி | வட்டுக்கோட்டை | விசுவமடு நேரடிமோதலில் |
| 03.07.88 | இராதை | விக்கினேஸ்வரி | நீர்வேலி | அலம்பில் செல் தாக்குதலில் |
| 04.07.88 | 2ம் லெப்.ஆனந்தி | காமாட்சியம்மா | பரப்புக்கடந்தான் | அலம்பில் செல் தாக்குதலில் |
| 21.11.88 | லெப்.அனிதா | ———— | மட்டக்களப்பு | களுவாஞ்சிக்குடி சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு |
| 04.07.89 | லெப்.நித்திலா | ———— | வவுனியா | வவுனியாவில் இந்திய இராணுவத் தாக்குதலில் |



நெருக்கடிகளையும், வசதியீனங்களையும் இயலாமைக்கான காரணங்களாக குறை கூறிக்கொண்டிருப்பதைவிட, அவற்றையும் சாதகமாக பயன்படுத்திக் கொள்வதே புத்திசாலித்தனம் என்பதை புலிகள் நிரூபித்தனர்.

### வை.கோ.உரை

இலங்கை அரசுடன் புலிகள் பேச்சு நடத்துவது தொடர்பாக இந்தியாவின் மத்திய மேல் சபையில் விவாதம் எழுந்தது.

வன்னியில் பிரபாகரனைச் சந்தித்து விட்டுச் சென்றதால், பேச்சுவார்த்தை தொடர்பான விவாதத்தில் வை.கோபாலசாமியின் உரையை அனைவரும் ஆவலோடு செவிமடுத்தனர்.

வை.கோபாலசாமி தனது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவின் அணுகுமுறை பயங்கரமான தவறுகள் நிறைந்ததாகும். மனிதாபிமானமும், விவேகமும் இல்லாத கண்மூடித்தனமான போக்கால் இன்றைய விபரீத நிலை ஏற்பட்டுள்ளது.

நிபந்தனையற்ற பேச்சுக்கு தயார் என்று விடுதலைப் புலிகள் உங்களுக்கு தகவல் தந்த போதெல்லாம் நிராகரித்தீர்கள். பேச்சுவார்த்தைக்கான கதவுகளை மூடிக்கொண்டீர்கள். அதனால் தான் பிரேமதாசா விடுதலைப் புலிகளோடு பேசுகின்ற நிலை உருவானது.

தமிழ்நாட்டின் தேசிய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் தளபதி கிட்டு உட்பட 157 விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

அவர்களை விடுவித்து இலங்கைக்குக் கொண்டு சென்று இந்திய இராணுவச் சிறைகளில் அடைக்கப்பட்டது குறித்து இதே மன்றத்தில் நான் கேள்வி கேட்டேன்.

இந்தியாவின் உள்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்தபோது, "விடுதலைப் புலிகளை இந்தியாவில் இருந்து அனுப்பிவிட்டோம். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியாது, என்று பொறுப்பற்ற முறையில் பதில் சொன்னார்.

**இந்தியா தனது உளவு ஸ்தாபனங்கள் மூலம், யாருடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்ததோ, எந்தத் தளபதி கிட்டுவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதோ, அந்தக் கிட்டுவையே சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் அடைத்துவிட்டு, போர் நிறுத்தம் அறிவித்ததைப் போன்ற அநியாயம் வேறு என்ன இருக்கமுடியும்?**

### பலியானோர் அதிகம்

இந்தியா பேச்சுவார்த்தை நடத்த முன்வரவில்லை. துப்பாக்கித் தத்துவத்தையே தொடர்ந்தீர்கள்.

உங்கள் வெளிநாட்டுக் கொள்கையால் எண்ணற்ற விடுதலைப் புலிகள் கொல்லப் பட்டனர். ஏராளமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். உங்கள் தவறான கொள்கையில் எத்தனை இந்திய சிப்பாய்கள் பலியாகியுள்ளனர்?

அதிகாரபூர்வமான உங்கள் தகவலின் படி 863 சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும், 2500 பேர் படுகாயமடைந்தனர் என்றும் அறிகிறோம்.

**ஆனால் பலியான இந்தியத் துருப்புக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம். பாகிஸ்தானோடு நடைபெற்ற இரண்டு யுத்தங்களிலும், சீனப் போரிலும் இந்தியத் தரப்புக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதத்தைவிட ஈழத்தில் இறந்த இந்தியச் சிப்பாய்களின் எண்ணிக்கை அதிகம்.**

முப்படைகளையும் ஏவிவிட்டு புலிகளையும், தமிழர்களையும் தாக்குகிறீர்கள். பீரங்கிகளின் ஷெல் தாக்குதல் இரவிலும் பகலிலும் 24 மணிநேரமும் நடக்கிறது.

ஈழத்தில் தமிழர்களை அழித்து நாசமாக்கும் நோக்கத்தோடு இராணுவத் தாக்குதல் நடத்தும் உங்களுக்கு உலகில் சமாதானத் தத்துவத்தைப் பற்றிப் போதிக்க என்ன தகுதி இருக்கிறது?

**மீள முடியாத சதுப்பு நிலத்தை நீங்களே ஏற்படுத்திக் கொண்டு அதில் சிக்கிக் கொண்டிருக்கிறீர்கள்."**

மேற்கண்டவாறு வை.கோபாலசாமி உரையாற்றியிருந்தார்.

### காய்நகர்த்தல்

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து நின்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சி, அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்ட வடக்கு-கிழக்குப் பிரிப்பை மட்டும் ஊக்குவிக்க முனைந்தது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு-கிழக்கு தொடர்ந்து இணைந்திருப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் சர்வசன வாக்கெடுப்பை நடத்துமாறு சுதந்திரக் கட்சி கோரியது.

அப்படி நடத்தினால் அரசு, புலிகள் பேச்சும் முறிவடையும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் பிரேமதாசா பொல்லாத விவேகி. அவரும் பதிலுக்கு காய் ஒன்றை நகர்த்தினார்.

(தொடர்ந்து வரும்)

### இராஜதந்திரியில் திருத்தம்

இராஜதந்திரியின் அலசலில் 1977இல் நடைபெற்ற பொதுத்தேர்தல் என்பதற்கு பதிலாக 1997 இல் என்றும், கூட்டணி தவிர்ந்த நாலு இயக்கங்கள் என்பதற்கு பதிலாக மூன்று இயக்கங்கள் என்றும் அச்சுக் கோர்ப்பில் தவறு நேர்ந்துள்ளது. திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது– இராஜதந்திரி

# உள்ளூராட்சித் தேர்தல்
# புறக்கணிப்பும்–புளுகுகளும்

**யா**ழ் மாவட்ட மற்றும் பச்சிலைப் பள்ளி உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன.

எதிர்பார்த்தது போலவே தமது விருப்பு வெறுப்புக்கும், நலன்களுக்கும் ஏற்ற வகையில் அரச தரப்பினர் வியாக்கியானம் செய்து வருகின்றனர்.

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை நடாத்துவதற்கு தகுந்த சூழல் உள்ளது, அங்கு நாலு இலட்சம் வாக்காளர்கள் இருக்கின்றனர் என்று கூறியே அரசாங்கம் தனது தேர்தல் நடவடிக்கைக்கு நியாயம் கற்பித்தது.

அரசாங்கத்தின் கூற்றின்படி நோக்கினால், யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் 18 வீதமான வாக்களிப்பே நடைபெற்றுள்ளது என்ற முடிவுக்குத்தான் சென்றாக வேண்டும்.

ஆனால், தேர்தல் முடிந்ததும் கரணமடித்த அரச தரப்பினர், 50 வீதத்திற்கு மேற்பட்ட மக்கள் வாக்களித்துள்ளனர் என்று கூறியுள்ளனர்.

**உள்ளூராட்சித் தேர்தலின் முன்பாக யாழ் குடாநாட்டில் உள்ளதைவிட அதிகமாக வாக்காளர் எண்ணிக்கையை கூறிய ஆட்சியாளர்கள், தேர்தல் நடந்து முடிந்த பின்னர் அங்கிருக்கும் வாக்காளர்கள் எண்ணிக்கையைவிட குறைந்த கணக்கைக் கூறத் தலைப்பட்டுள்ளனர்.**

அவ்வப்போது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தமக்கு சார்பான கருத்துக்களை இனிப்புத் தடவி கூறிக்கொண்டிருப்பதே பொதுஜன முன்னணி ஆட்சியாளரது அணுகுமுறையாக அமைந்திருக்கிறது.

**உண்மைகளைத் தேடுவது, தவறுகளைத் திருத்துவது, நேர்மையான சுயவிமர்சனங்களுக்கு தங்களை உள்ளாகிக் கொள்வது போன்ற ஆரோக்கியமான அணுகுமுறைகள் அரசியலில் அருகிவருவதையே காணக்கூடியதாகவுள்ளது.**

விருப்பமின்றியே தேர்தலில் போட்டியிடுகிறோம் எனவும் தேர்தல் நடத்துவதற்கு ஏற்ப சூழ்நிலை இல்லை என்றும் கூறிய தமிழ்க்கட்சிகளும் தேர்தல் முடிந்தபின்னர் கரணமடித்துள்ளன.

தங்கள் வெற்றி தோல்விக்கு நியாயம் கற்பிப்பதிலும், பெரும்பாலான வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர் என்று கூறத் தலைப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

இக் கட்சிகளின் அரசியல் வங்குரோத்துத்தனமே மேற்கண்ட கூற்றில் வெளிப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் கடைசியாக கணக்கிடப்பட்ட வாக்காளர் தொகை ஐந்து இலட்சத்து 71 ஆயிரத்தி 486. இவர்களில் தற்போது யாழ் குடாநாட்டில் உள்ள வாக்காளர் எண்ணிக்கை ஏறத்தாழ இரண்டு இலட்சத்து 85 ஆயிரம்பேர்.

ஏனையோர் வன்னியிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர்.

நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஒரு இலட்சத்து ஐயாயிரம் பேர்தான் வாக்களித்துள்ளனர்.

எனவே யாழ் குடாநாட்டு வாக்காளர்களில் 37 சதவீதமானோர் வாக்களித்துள்ளனர்.

**37 சதவீத வாக்குகளில் 14 வீதமானவை செல்லாத வாக்குகளாகும். செல்லாத 14 வீத வாக்குகளில் ஒன்பது சதவீதமான வாக்குகள் திட்டமிட்டு செல்லுபடியற்றதாக மாற்றப்பட்டுள்ளன. ஏனையவை தற்செயலாகவும் மற்றும் விளக்கமின்மை போன்றவற்றாலும் ஏற்பட்டவையாகும்.**

28 சதவீதமான வாக்குகள் அளிக்கப்பட்டிருப்பதை அரசு நடத்திய தேர்தலுக்கு கிடைத்த அங்கீகாரமாகவோ, இத் தேர்தலில் ஆதரவு பெற்ற கட்சிகளை யாழ் மாவட்ட மக்கள் தங்கள் தலைமைகளாக ஏற்றுள்ளதற்கான அடையாளமாகவோ கருதுவது கேலிக்கூத்தானதாகும்.

1977 பொதுத் தேர்தலில் தமிழீழக் கோரிக்கைக்கான கருத்துக் கணிப்பாக கருதி வாக்களிக்குமாறு கூட்டணியினர் தமிழ்பேசும் மக்களிடம் கோரியிருந்தனர்.

தமிழ்க் கட்சிகள் ஒரு குடையின்கீழ் ஒன்றுபட்டுவிட்டதன் அடையாளமாகவே கூட்டணி அன்று விளங்கியிருந்தது. எனவே கூட்டணிக்கு எதிராகப் போட்டியிடுவோர் துரோகிகள் என்றே கருதப்பட்டனர்.

**அதற்கு முன்னரும் அதன் பின்னர் இன்றுவரையும் இல்லாதளவுக்கு தமிழ் மக்களிடம் தங்கள் வாக்குகளை பயன்படுத்தும் ஆர்வம் 1977 இல் அலையென எழுந்திருந்தது.**

வடக்கு-கிழக்கிலும், புத்தளத்திலும் கூட்டணி போட்டியிட்டிருந்தது. புத்தளமும் தமிழீழத்தின் ஒரு பகுதி என்றே அத்தேர்தலில் கூட்டணியினர் குறிப்பிட்டிருந்தனர்.

வடக்கு-கிழக்கிலும், புத்தளத்திலும் மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகளில் 47.84 வீதமான வாக்குகளையே கூட்டணியினர் பெற்றிருந்தனர்.

**பின்னர் வடக்கு-கிழக்கிலும், புத்தளத்திலும் இருந்த சிங்கள வாக்காளர் வீதத்தை ஒழித்துவிட்டுப் பார்த்ததில் கிட்டத்தட்ட 55வீதமான வாக்குகள் ஈழக்கோரிக்கைக்கு ஆதரவாக விழுந்தன என்று கணக்கிடப்பட்டது.**

**யாழ் மாவட்டத்தில் தனியாக எடுத்து ஆராய்ந்தால், 1977ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அங்கு அளிக்கப்பட்ட வாக்குகளில் 71 வீதமான வாக்குகளை கூட்டணி பெற்றிருந்தது. 29 வீதமான வாக்குகள் எதிராக விழுந்திருந்தன.**

அதிலும், யாழ்ப்பாணம், பருத்தித்துறை உடுப்பிட்டி போன்ற தொகுதிகளில் கடும்போட்டி நிலவியிருந்தது.

**1997**ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவாகவும் எதிராகவும் தொகுதிவாரியாக யாழ் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகள்.

| தொகுதிகள் | வாக்குகள் | | நூற்று வீதாசாரம் | |
|---|---|---|---|---|
| | ஆதரவு | எதிர் | ஆதரவு | எதிர் |
| ஊர்காவற்றுறை | 17604 | 9901 | 64% | 36% |
| வட்டுக்கோட்டை | 23384 | 9937 | 70% | 30% |
| காங்கேசன்துறை | 31155 | 5322 | 85% | 15% |
| மானிப்பாய் | 27550 | 5252 | 84% | 16% |
| கோப்பாய் | 25840 | 7630 | 77% | 23% |
| உடுப்பிட்டி | 18768 | 11815 | 61% | 39% |
| பருத்தித்துறை | 12981 | 10302 | 56% | 44% |
| சாவகச்சேரி | 20028 | 11624 | 63% | 37% |
| நல்லூர் | 29858 | 3534 | 89% | 11% |
| யாழ்ப்பாணம் | 16251 | 12450 | 57% | 43% |
| | 223419 | 87767 | மொத்த வீதங்கள் | |
| அங்கீகரிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 311186 | | | 71% | 29% |
| | | | (கிட்டிய இலக்கங்களில்) | |

எனவே, மிகப் பாரிய தமிழ்த்தேசிய எழுச்சி உருவாகி, கூட்டணி சார்பான அலை எழுந்து வீசியடித்த சூழலிலும்கூட 29 வீதமான மக்கள் ஈழக் கோரிக்கையையும், கூட்டணியையும் நிராகரித்திருந்தனர்.

தமிழ் பேசும் மக்களின் பொது நிலைப்பாடுகள், உரிமைப் போராட்ட எழுச்சிகள் என்பவற்றுக்கு எதிராக குறிப்பிட்ட வீதமான வாக்குகள் எப்போதும் இருந்து வந்திருக்கின்றன. ஆனால், அத்தகையோரின் எண்ணிக்கை பெரும்பான்மையானதாக இருப்பதில்லை.

பொதுநிலைப்பாட்டுக்கு எதிரான அந்த வாக்குகளையே கடந்த காலத் தேர்தல்களில் ஆளும் கட்சிகளது தமிழ்ப் பிரமுகர்கள் குறிவைத்திருந்தனர்.

அவ்வாறான வாக்காளர்களை கவர நீண்டகால திட்டத்தோடு செயற்பட்ட ஒருவர்தான் துரையப்பா. கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பது மூலமும், சலுகைகளை பெற்றுத் தருவது ஊடாகவும், அதற்கு நன்றிக் கடனாக தனக்கு வாக்களிக்கக்கூடிய வாக்கு வங்கியொன்றை உருவாக்க முனைந்திருந்தார்.

குறிப்பிட்ட வாக்காளர்களை உடனடியாக கவரவும் ஆளும் கட்சி பிரமுகர்கள் திட்டம் வைத்திருந்தனர். தேர்தலுக்கு முதல் நாளன்று மதுவகைகளை வழங்குதல், பணம் கொடுத்து வாங்குதல், உடுதுணிகள் மற்றும் அன்பளிப்புப் பொருட்களை வழங்குதல் என்பவையே உடனடியாக கவரும் திட்டமாக அமைந்திருக்கும்.

**எனவே எக்காலத்திலும் குறிப்பிட்ட வீத வாக்காளர்கள் கொள்கைகள், கோட்பாடுகள் என்பற்றுக்கு அப்பாற்பட்ட ரீதியில் தங்கள் வாக்குகளை பயன்படுத்துகிறவர்களாகவே இருந்து வருவர்.**

மேற்கண்ட ரகத்தினரான வாக்காளர்களிலும் குறிப்பிட்ட வீதத்தினர் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். ஆகவே, இம்முறை உண்மையான சிரத்தையுடன் வாக்களித்த 28 சதவீதமானோரில் கிட்டத்தட்ட 18 வீதமானோர் வழக்கமாக பொது நிலைப்பாடுகளுக்கு எதிராக வாக்களிப்போராகும்.

மீதியான பத்துவீதமானோரில் ஏழுவீதமானோரில் தமிழ்க்கட்சிகளின் வீரமுழக்கங்களையும், பிரசார அமர்க்களங்களையும் நம்பியோரும் உள்ளனர். புலிகளால் பாதிக்கப்பட்டவர்கள், ஏனைய இயக்கங்களில் தங்கள் பிள்ளைகள் உறவினர்கள் ஆகியோர் இருந்தமையாலும், இருப்பதாலும் அவற்றை தங்கள் இயக்கங்களாக கருதுவோர் ஆகியோரும் அடங்கியுள்ளனர்.

ஏனைய மூன்று வீதமானோர் போட்டியிட்ட வேட்பாளர்களின் ஜாதி, மதம், ஊர், உறவுத் தொடர்பு ஆகியன பார்த்து வாக்களித்துள்ளனர்.

பருத்தித்துறை நகர சபையில் புளொட் அமைப்பின் தலைமை வேட்பாளராக போட்டியிட்டவர் செல்லக்கிளி. உங்கள் ஊரவன் செல்லக்கிளிக்கே உங்கள் வாக்கு என்று சுவர்களில் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

இதுபோல ஈ.பி.டி.பி.யின் சார்பாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் போட்டியிட்ட வேட்பாளரும் ஊரவன், உறவுக்காரன் என்ற அஷ்திரங்களை வீசியே வாக்குத் திரட்டியிருந்தார்.

வல்வெட்டித்துறை நகரசபை ரெலோவுக்கு கிடைப்பதற்கும் ரெலோ முதல்வர் சிவாஜிலிங்கம், ரெலோ தலைவர் வினோதலிங்கம் ஆகியோர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் என்பது சாதகமாக அமைந்திருந்தது.


தவறான நபர்களாக இருந்தாலும், அவர்களால் வாக்குகளை பெற்றுத்தர முடியுமானால் வேட்பாளராக நிறுத்த எந்தவொரு கட்சியும் பின் நிற்கவில்லை என்பது மறுக்கவியலாத உண்மையாகும்.

அதேசமயம் தேர்தலில் போட்டியிட்ட எந்தவொரு கட்சியும் விடுதலைப் புலிகளை விமர்சிக்க முன்வரவில்லை. புலிகள் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்க்கவில்லை என்றும், தாக்குதல் நடத்தும் உத்தேசம் இல்லை என்றும் மக்களுக்கு புலிகள் சார்பாக உத்தரவாதம் வழங்கவும்கூட சில கட்சிகள் தலைப்பட்டிருந்தன.

அதேசமயம் விடுதலைப் புலிகளும் தேர்தல் தொடர்பான தெளிவான நிலைப்பாடுகளை முன்வைத்திருக்கவில்லை. தமது உத்தியோகபூர்வமாக விடுதலைப் புலிகளில் பாலகுமார் தேர்தலின் நோக்கத்தை அம்பலப்படுத்தியிருந்தார். வேட்பாளர்களை கிண்டல் செய்து வியாசன் என்ற பெயரில் நீண்ட கவிதையும் விடுதலைப் புலிகளில் வெளியாகியிருந்தது. முரசும் அவற்றில் ஒரு பகுதியை பிரசுரித்திருந்தது.

எனினும், தேர்தலை கண்டித்தனரே தவிர, பகிஷ்கரிக்குமாறோ, வாக்களிக்க வேண்டாம் எனக் கோரியோ புலிகள் தமது பெயரில் உத்தியோகபூர்வமாக கருத்து எதனையும் வெளியிட்டிருக்கவில்லை.

தமிழ் ஈழ விழிப்புக்குழு என்ற பெயரில் வேட்பாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்து புலிகளால் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அப்பிரசுரம் புலிகளுடையது அல்ல என்று தமிழ்க்கட்சிகள் சில கூறியதுடன், சில வேட்பாளர்களின் முகவரிகளுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் தொடர்பாகவும் மூச்சுவிடாமல் இருந்துவிட்டனர்.



**தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கூறினால் வாக்காளர்களது கட்டாயப்படுத்தி வாக்களிக்கச் செய்தல், கள்ள வாக்குளை நிரப்புதல் போன்றவை மூலம் படையினர் பதில் நடவடிக்கை எடுக்க சாத்தியம் இருந்தமையால்தான் புலிகள் பகிரங்கமாக பகிஷ்கரிப்பு கோரிக்கை எதனையும் உத்தியோகபூர்வமாக முன்வைத்திருக்கவில்லை.**

அரச சார்பற்ற தமிழ்ப் பத்திரிகைகளும், விமர்சகர்களும் மட்டுமே இம்முறை உள்ளூராட்சித் தேர்தலுக்கு எதிரான நிலைப்பாடுகளை மிகப் பரந்தளவிலும், காத்திரமாகவும் மக்களிடம் எடுத்துச் சென்றிருந்தனர்.

**எனவே, நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலை புலிகளுக்கு எதிரான தேர்தலாகவோ, அல்லது தமிழ் பேசும் மக்களின் அரச சார்புப் போக்காகவோ அரசாங்கம் சித்தரிப்பது திட்டமிட்ட பொய்ப் பிரசாரமாகவே அமைந்திருக்கிறது.**

ஐந்து தமிழ்க் கட்சிகள் மக்களை வாக்களிக்குமாறு பிரசாரம் செய்தன. தேர்தல் நாளன்று புலிகளின் பாரிய தாக்குதல்கள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. குருநகரில் மட்டும் அடையாளத் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தனர்.

வாக்காளர் அட்டை இல்லாதோரும் தமது பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்தால் வாக்களிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் தேர்தல் தினத்தன்று தங்கள் வாகனங்களில் ஆயிரக்கணக்கான வாக்காளர்களை வாக்குச் சாவடிகளுக்கு கொண்டு சென்று வாக்களிக்கச் செய்திருந்தன.

**அவ்வாறிருந்தும் 28 சதவீத வாக்குகளையே நான்கு கட்சிகளாலும் அரசின் நலனுக்கு ஏற்ப திரட்டிக் கொடுக்க முடிந்திருக்கிறது. தேர்தலில் போட்டியிட்டுள்ள தமிழ்க் கட்சிகளுக்கு எதிராகவே பெரும்பான்மையான தமிழ்பேசும் மக்களின் நிலைப்பாடுகள் அமைந்திருக்கின்றன.**

யாழ் குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை வலிகாமம் பகுதிகளைவிட குறைவானதே. அப்படியிருந்தும் வடமராட்சி தென்மராட்சி பகுதிகளில் குறைந்தளவு வாக்காளர்களே வாக்களித்துள்ளனர்.

**மறுபுறத்தில் பிரசார பலம், ஆட்பலம் என்பவை இல்லாமல் தாம் போட்டியிட்ட இரு சபைகளிலும் கூட்டணி வெற்றியீட்டியுள்ளது. மாநகர சபையில் அறுதிப் பெரும்பான்மை பெறமுடியாவிட்டாலும் கூட்டணியின் வெற்றி முன்னாள் போராளிகளான இந்நாள் தமிழ்க் கட்சிகளுக்கு அபாய எச்சரிக்கையாகவே அமைந்திருக்கிறது.**

அதேசமயம் தேர்தல் என்றால் சில குறுக்கு முயற்சிகள் அவசியம்தான். சலுகை ஆசைகள், மற்றும் அன்பளிப்புக்கள் கொடுத்து மக்களை மயக்குவது நியாயம்தான் என்று ஏனைய தமிழ்க் கட்சித் தலைமைகள் நினைப்பதும் தவறு என்பதையும் கூட்டணியின் வெற்றி உணர்த்தியுள்ளது.

**கூட்டணிக்கு முன்பிருந்த செல்வாக்கு தற்போது இல்லாமல் போயிருக்கலாம். ஆனால் தமிழ் அரசியல் கட்சிகளுக்குள் நிரந்தர வாக்கு வங்கி உள்ள கட்சி கூட்டணி மட்டும்தான். கூட்டணியின் தவறுகளும், குத்துக்கரணங்களும் அந்த வாக்கு வங்கியின் ஒரு பகுதியை இழக்கச் செய்தாலும், இன்னமும் கூட்டணிக்கு அடித்தளம் இருக்கிறது.**

குறைந்தகாலப் பிரசாரம், குறைந்த ஆட்பலம், மிகக் குறைந்த பணபலம் என்பவற்றோடு களமிறங்கிய கூட்டணியை காப்பாற்றியது அந்த அடித்தளம்தான். மிக முக்கியமாக ஏனைய தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை இன்மையும், சுயநல மோதல்களும் கூட்டணிக்கு வாய்ப்பாகி இருக்கிறது.

**ஆனாலும், கூட்டணியினரின் வெற்றியை மிதவாதப்போக்குக்கு கிடைத்துள்ள ஆதரவாகவும், போராளிகளை மக்கள் வெறுப்பதன் அடையாளமாகவும் சித்தரிக்க அரச பிரசார சாதனங்கள் முனைகின்றன.**

ஆனால், அக் கருத்து மேலோட்டமான ஒன்றேயாகும். போட்டியிட்ட இரு சபைகளிலும் கூட்டணி வெற்றி பெற்றிருக்கிறது. சகல சபைகளிலும் கூட்டணி போட்டியிட்டிருந்தால் அதிக சபைகளை கைப்பற்றியும் இருக்கக்கூடும்.

ஆனால், கூட்டணிக்கு முன்பிருந்த செல்வாக்கும், ஆதரவுத் தளமும் சரிந்திருப்பதையும் மறைக்க முடியாமலும் இருந்திருக்கும். அரச சார்பான போக்குக் காரணமாகவே அந்தச் சரிவு ஏற்பட்டுள்ளது.

**யாழ் மாநகர சபையில் கூட்டணிக்கு கிடைத்துள்ள வாக்குகள் 3 ஆயிரத்தி 540. முன்னாள் போராளிகளான ஏனைய மூன்று தமிழ்க் கட்சிகளுக்கும் கிடைத்துள்ள மொத்த வாக்குகள்; ஏழாயிரத்தி 250. (கூட்டணிக்கு- 9, ஏனைய மூன்றுக்கும் 12 ஆசனங்கள்.)**

**வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கூட்டணிக்கு கிடைத்துள்ள வாக்குகள் 2 ஆயிரத்தி 821. ஏனைய மூன்று கட்சிகளுக்கு கிடைத்துள்ள வாக்குகள் 3 ஆயிரத்தி 287. (கூட்டணி-6, ஏனையவை-4 ஆசனங்கள்)**

எனவே, ஏனைய தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் பிரிந்து நிற்பதும், கூட்டணிப் பாணியில் தாங்களும் செல்ல நினைத்தபடி கூட்டணியை கிண்டலடிக்கும் போக்குகளுமே கூட்டணிக்கு சாதகமாக அமைந்துள்ளன.

இப் போக்குகளை தமிழ்க் கட்சிகள் தொடருமானால் எதிர்காலத்தில் இக் கட்சிகளின் வீழ்ச்சி மிகப் பயங்கரமாக இருக்கும் என்பதையும் யாழ் குட்டித் தேர்தல் ஏனைய தமிழ்க் கட்சித் தலைமைகளுக்கு குட்டி உரைத்திருக்கிறது.

இதனை உணரத்தவறினால் எதிர்வரும் தேர்தல்களில் கூட்டணி தவிர்ந்த கட்சிகள் மக்களால் எட்டி உதைக்கப்படும் என்பது உறுதி. ■

## சந்திக்கு வராத சங்கதிகள்

### நக்கீரன்

**யா**ழ் குடாநாட்டு உள்ளூராட்சித் தேர்தலில் சாராய ஆறு பெருக்கெடுத்து ஓடும் எனக் கூறியிருந்தேன் அல்லவா. ஓடியது உடைப்பெடுத்த கடல்போல ஓடியது.

மக்களுக்கு அன்பளிப்பு வழங்குவதில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினர் தான் முன்வரிசையில் நின்றனர். நங்கூரம் சின்னங்களுடன் தொப்பி, சாவி வளையம், ரீசேர்ட் போன்றவை விநியோகிக்கப்பட்டன. காலண்டர்கள், டயறிகள், டென்னிஸ் பந்துகள் போன்றவையும் வழங்கப்பட்டன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். சாவி வளையமும், காலண்டர்களும் விநியோகித்தது. ஈ.பி.டி.பி. பொக்கெட் காலண்டர்களை விநியோகித்தது. வர்ணச் சுவரொட்டிகளை ஒட்டி வெளுத்து வாங்கியதில் ஈ.பி.டி.பிதான் முன்னணியில் நின்றது.

ரெலோ விசேஷமான வழங்கல் எதிலும் ஈடுபடவில்லை.

போட்டியிட்ட ஐந்து கட்சிகளில் மிக எளிமையான கட்சியாக இருந்தது கூட்டணி மட்டும்தான். தங்கியது குறைந்த வாடகையில் குமரன் விடுதியில். வாடகை ஓட்டோவில் பிரசாரம். சில பகுதிகளில் மாவை சேனாதி ராசாவும், ஆனந்த சங்கரியும் தமது ஆதர வாளர் புடை சூழ நடந்து திரிந்தனர்.

சகல கட்சிகளும் சிறு சிறு கூட்டங்களை நடத்தியிருந்தன. ஆனாலும் கூட்டணியினர் நடத்திய கூட்டங்களுக்கே அதிக கூட்டம் சேர்ந்தது.

மிகமுக்கியமான விஷயம் யாதெனில், யாழில் தற்போது வாக்குரிமை உள்ளவர்கள் கூட்டணிக் கூட்டங்களில் அதிகமாக கலந்து கொண்டதுதான். அநேகமாக 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் சமூகமளித்திருந்தனர். 'முரசை' திரு. ஆனந்த சங்கரி திட்டித் தீர்த்தபோதும் கரகோசம் எழுந்தது. (எமது நிருபர் மட்டும் திருதிருவென முழித்துக் கொண்டிருந்தார்.)

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு குரல் கொடுப்பது தமது கட்சி என்று கூட்டணியினர் கூறினர். அம்பாறையை பிரிக்க சம்மதம் தெரிவித்தமை பற்றி மூச்சுக்காட்டவில்லை. அதுமட்டும்தான் கூட்டணியின் அரசியல் நேர்மையீனமான பிரசார உத்தியாக இருந்தது.

மற்றப்படி, அன்பளிப்புக்கள் வழங்க

## அநாமதேயப் பிரசுரங்கள் பிரசார குலைப்புக்கள்




வில்லை, ஆடம்பரம் இல்லை. வாக்காளர்களை வாக்குச்சாவடிகளுக்கு அழைத்துச் செல்ல வில்லை, அநாமதேயப் பிரசுரங்கள் வெளியிட வில்லை. பகிரங்க அரசியலில் கண்ணியமான போக்கை கூட்டணியிடம் இருந்து ஏனைய கட்சிகள் கற்றுக்கொள்ளலாம்.

கூட்டணி செய்யாத, மேலே கூறிய அனைத்தையும் ஏனைய கட்சிகள் அமோக மாகச் செய்திருந்தன.

அநாமதேயப் பிரசுரங்கள் வெளியிடுவதில் கழகம்தான் முன்னணி வகித்தது.

கழக உட்கொலைகள் பற்றி ஏனைய இயக்கங்கள் பிரசாரம் செய்தன. அதனால் ஏனைய இயக்கங்களிலும் உட்கொலைகள் நடந்தது என்று கற்பனை யில் ஒரு பட்டியல் போட்டு அநாமதேய பிரசுரம் விட்டிருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் உளவுப் பிரிவினரால் 1984–85ல் பலர் கொல்லப்பட்டனர் என்று பிரசுரத்தில் கூறப்பட்டிருந்தது. 1987வரை, அதாவது இந்தியப் படை காலம்வரை உட்கொலை இல்லாத ஒரே ஒரு இயக்கம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். மட்டும்தான்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவப் பிரிவில் இருந்த இருவர் தனிப்பட்ட கொள்ளைகளில் ஈடுபட்டதற்காக உளவுப்பிரிவால் கைதான பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர். இந்தியப் படை காலத்தில்தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தன் முன்னைய புரட்சிகர ஜனநாயகப் போக்குகளை கைவிட்டது.

எனவே எள்ளளவும் உண்மை இல்லாத அநாமதேயப் பிரசுரங்களே உலாவின.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கமும் அநாமதேய பிரசுரங்களை வெளியிட்டிருந்தது. சர்வதேச மனித உரிமை சபை ரெலோ, புளொட் இயக்கங்களின் நடவடிக்கைகள் பற்றி வெளியிட்ட அறிக்கையின் பகுதிகளை ஈ.பி.டி.பி. தேடிப்பிடித்து வெளியிட்டிருந்தது.

கடைசிநேர அநாமதேயப் பிரசுரங்களும், ஏட்டிக்குப் போட்டியாக ஒலி பெருக்கிகள் மூலம் இயக்கங்கள் செய்த பிரசார குலைப்புக்களும் யாழ் மக்களை முகம் சுளிக்கச் செய்திருந்தன.

உட்கொலைகள், சகோதரப் படுகொலைகள் என்பவை யாழ் மக்கள் அறிந்ததுதான். ஆனால் சில இயக்கங்களோ மிகக் கீழ்த்தரமான பிரசாரங்களிலும் இறங்கி தங்களுக்கும், தங்கள் சக இயக்கங்ளுக்கும் சேர்த்து மண் அள்ளிப் போட்டுக் கொண்டதுதான் பரிதாபம். ■


படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி

**81**

தருவது **ரசிகன்**



**கடந்த வாரம்**

**பாபா முஸ்தக்குவீமும் அவரது கூட்டத்தினரும் தஸ்தாம்பூர் என்னும் கிராமத்தில் வைத்து பொலிசாரால் கொல்லப்பட்டனர். அந்தக் கிராமத்தினரே காட்டிக் கொடுத்தனர். அதனால் பாபாவின் சகோதரன் முஸ்லிமும் பூலான் கோஷ்டியினரும் அக்கிராமத்திற்குள் புகுந்து சுட்டுத் தள்ளுகின்றனர். இனி...**

**த**ஸ்தாம்பூர் கிராமத்தினர் பலர் தலைதெறிக்க ஓடியதால் தப்பித்துக் கொண்டனர்.

பாபாவை காட்டிக்கொடுத்தோர் என்று இனம் காணப்பட்டோரின் வீடுகள் பற்றி எரிந்து கொண்டிருந்தன.

17 பேர் துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாக்கப்பட்டு செத்துக் கிடந்தனர்.

'பழிக்குப் பழி'

'பாபா முஸ்தக்குவீம் வாழ்க'

என்று கோஷமிட்டபடி பூலான் கோஷ்டியினரும், முஸ்லிமும் அந்தக் கிராமத்தைவிட்டு வெளியேறினர்.

பெஹ்மாய் கிராம படுகொலையை அடுத்து மிகப் பயங்கரமான படுகொலையாக தஸ்தாம்பூர் படுகொலையை விபரித்தன பத்திரிகைகள்.

"உத்தர பிரதேச முதல்வர் வி.பி.சிங் பதவியை ராஜினாமாச் செய்யவேண்டும்' என்று அறிக்கை விட்டன எதிர்க்கட்சிகள்.

வி.பி.சிங் கொள்ளைக் கோஷ்டிகளை ஒடுக்க பல நடவடிக்கைகளை எடுத்திருந்தார். (பின்னர் இந்தியப் பிரதமராக இருந்தவர் இவர்தான்)

கொள்ளைக் கூட்டத்தினர் பதுங்கியிருக்கும் கணவாய்களில் தண்ணீரை அதிகமாகப் பாய்ச்சினால், கொள்ளையர்கள் வெளியே வருவார்கள், பிடித்துவிடலாம் என்ற கருத்தை முன்வைத்தார்.

வி.பி.சிங்கின் நம்பிக்கைக்குரிய பொலிஸ் அதிகாரி ஒருவர் இன்னொரு யோசனை கூறினார்.

"பொலிஸ் நாய்களைப் பழக்குவது போல், சிறுத்தைப் புலிகளை பழக்கி கணவாய்களில் ஏவினால், அவை கொள்ளையர்களைப் பிடித்துவிடும்" என்று கூறினார்.

"கணவாய்கள்மீது விமானப்படையினர் குண்டுகளை வீசவேண்டும்" என்று மற்றொரு அதிகாரி யோசனை கூறியிருந்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டங்களைத் தொடர்ந்து பொலிசாருக்கு நவீனரக ஆயுதங்களை வழங்க முடிவு செய்யப்பட்டது.

கொள்ளையர்களிடம் நவீன ஆயுதங்கள் இருக்கின்றன. எனவே பொலிசாருக்கும் அதற்கு ஈடான ஆயுதங்கள் தேவை என்று அதிகாரிகள் கேட்டிருந்தனர்.

எஸ்.எல்.ஆர் துப்பாக்கிகள்-600, இலகு இயந்திரத் துப்பாக்கிகள்-150, மோட்டார் லோஞ்சர்கள்-20 மற்றும் அவற்றுக்கான வெடிபொருட்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்ய 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

முதல்வர் வி.பி.சிங்கின் சகோதரரான நீதிபதி சந்திரசேகர் பிரசாத்தும், அவருடைய 12 வயது மகனான அஜித் பிரதாப் சிங் மற்றும் அவர்களது வேலையாள் ஒருவரும் 1982 மார்ச் மாதத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வேட்டைக்குச் சென்றுவிட்டு தமது ஜீப்பில் அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர்.

ஜீப்பைக் கண்டதும் பொலிசார் என்று நினைத்து கொள்ளையர்கள் சுட்டதில்தான் அவர்கள் பலியாகினர். அதற்கும் பூலான் கோஷ்டிக்கும் ஒரு தொடர்பும் கிடையாது.

அதனால் கொள்ளையர்கள்மீது கடும் கோபம் கொண்டிருந்தார் வி.பி.சிங்.

தன்னுடைய பதவிக் காலத்தில் கொள்ளைக் கோஷ்டியை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்று முயன்றார் வி.பி.சிங்.

ஆனால், தஸ்தாம்பூர் படுகொலைகள் அவரது பதவிக்கும், கனவுக்கும் சவாலாக மாறின.

தனது முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார் வி.பி.சிங்.

அதற்கு முன்னர் தஸ்தாம்பூரில் பலியானோரின் இறுதிச் சடங்கில் சென்று கலந்து கொண்டார்.

உத்தரப்பிரதேசத்தில் அப்போது காங்கிரஸ் கட்சி செல்வாக்குடன் இருந்தது. தொடர் படுகொலைகள் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கையும் சேர்த்து சரிக்கத் தொடங்கிவிட்டன.

கொள்ளையர்களை ஒடுக்க முடியாத கையாலாகாத அரசு என்று நாடு முழுவதும் கண்டனங்கள் எழுந்தன.

தஸ்தாம்பூர் படுகொலை அதனால் முக்கியவத்துமிக்க ஒன்றானது.

இந்திய ஜனாதிபதி ஜெயில் சிங்கும் நேரடியாகச் சென்று இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டார்.

தஸ்தாம்பூர் படுகொலையில் தப்பியவர்கள், பூலானும், முஸ்லிமும் தங்களை வேட்டையாடிய குழுவில் காணப்பட்டனர் என்ற தகவலைப் பொலிசாருக்கு தெரிவித்தனர்.

"கொள்ளைக் கோஷ்டிகளை பிடிப்பதற்கான முயற்சிகள் ஒருபுறம் நடக்கட்டும். அவர்கள் சரணடைய விரும்பினால் மன்னிப்புத் தரப்படும் என்பதையும் தெரிவியுங்கள்" என்று புதுடில்லி ஆட்சி பொலிசாருக்கு கட்டளையிட்டது.

பூலானும், மான் சிங்கும் சகல செய்திகளையும் தங்களிடமுள்ள சிறிய வானொலி மூலம் தினசரி கேட்டறிந்தனர்.

தனது குழுவினரை பூலான் அழைத்தாள். அவர்களை நோக்கி திடமான குரலில்:

"சரணடைந்தால் மன்னிப்புத் தரப்படும் என்று பொலிசார் ஆசை காட்டுகிறார்கள். பொலிஸ் நாய்களை நான் நம்பமாட்டேன். அவர்கள் கையில் நாம் மாட்டிக்கொள்ளும் வரைதான் அன்பொழுகப் பேசுவார்கள். மாட்டிக்கொண்டோம் என்றால், பின்னர் எஜமானர்களாகிவிடுவார்கள். உங்களில் யாருக்காவது சரணடையும் எண்ணம் இருந்தால், தாராளமாக சரணடையலாம். நான் தடுக்க மாட்டேன்."

சொல்லிவிட்டு அனைவர் முகங்களையும் பார்வையால் அலசினாள்.

சிலர் ஊசலாடுகின்றனர் என்பது முகங்களில் தெரிந்தது. வேறு சிலர் பதில் சொல்ல அவகாசம் தேவை என்பதுபோல தலையைச் சொறிந்தனர்.

மான் சிங்கும், மூன்று நான்கு பேரும் தான்: "நீங்கள் எடுக்கும் முடிவுக்கு நாங்கள் கட்டுப்படுவோம்" என்று கூறினார்கள்.

"இன்றும், நாளையும் நன்றாக யோசியுங்கள். பின்னர் நாம் பேசலாம்." என்றாள் பூலான்.

அன்றிரவு பூலானுக்கு தூக்கம் வர மறுத்தது.

வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டுவிட்டது போன்று மனதுக்குள் அந்தரமாக இருந்தது.

புரண்டு புரண்டு படுத்தாள். இருளில் ஒரு உருவம் தன்னை நோக்கி வருவதை பூலான் கண்டாள்.

அது மான் சிங்தான் என்று கண்டறிவது அவளுக்கு கஷ்டமாக இருக்கவில்லை.

அவளுக்கு அருகே அமைதியாக உட்கார்ந்தான் மான்சிங். துப்பாக்கியை மடியில் வைத்துக் கொண்டான்.

அவன் மடியில் கிடந்த துப்பாக்கியை எடுத்து, ஒருபுறமாக கீழே வைத்துவிட்டு, அவனது மடியில் தலைவைத்து படுத்துக் கொண்டாள் பூலான்.

அவளுக்கு ஆறுதல் தேவைப்பட்டது. அவளுக்கு அரவணைப்பு தேவையாக இருந்தது.

திடீரென்று தான் ஒரு தனிமனிசியாகி விட்டதாக ஒரு பிரமை, அச்சம் பூலானின் மனதை பிடித்தாட்டியது.

தன் மடியில் தலைவைத்துப் படுத்தவளின் நெற்றியில் குனிந்து தன் உதடுகளை ஒற்றினான் மான்சிங்.

பின்னர் பூலானின் உதடுகளை அவன் உதடுகள் தேடிக் கீழிறங்கின.

அவன் கைகளில் ஒன்றை இழுத்து தன் மார்பில் வைத்துக் கொண்டு, "மான்சிங் நீயும் என்னை விட்டுப் போய்விடுவாயா?" என்ற போது, மான்சிங்கும் கலங்கித்தான் போனான்.

பதிலேதும் சொல்லாமல் தன் உதடுகளால் அவளின் உதடுகளை மூடினான். ஆவேசம் வந்தவளாய் பூலான் அவன் உதடுகளை இம்சித்தாள்.

காலையில் மற்றொரு சோர்வான தகவல் பூலானுக்கு கிடைத்தது. அகில இந்திய வானொலி அந்தச் செய்தியை வெளியிட்டது.

பூலானைக் கொல்ல சோப்ரானை ஏவியவனும், பாபாவின் இடத்தை அடைய ஆசைப்பட்டவனுமான மல்கான் சிங் பொலிசாரிடம் சரணடைந்துவிட்டான்.

சரணடையும்போது அவனுக்கு 38 வயது. மல்கான் சிங் எப்படிச் சரணடைந்தான் என்பதையும் வானொலிச் செய்தியில் விபரித்திருந்தனர்.

சரணடைவதற்கு சில நிபந்தனைகளை விதித்தான் மல்கான் சிங்.

உத்தரப் பிரதேச பொலிசாரிடம் சரணடைய முடியாது. பிந்த் நகரில் உள்ள பொலிஸ் அதிகாரியான ராஜேந்திர சதுர்வேதி என்பவரிடம்தான் சரணடைவேன் என்று கூறினான். பிந்த் நகரம் மத்திய பிரதேசத்தில் இருக்கிறது.

சரணடைய முன்னர் தனது பிறந்த கிராமமான பிவெளக்குச் சென்றான்.



தஸ்தாம்பூர் கிராமத்தில் பலியானோரின் கிரியைகள். ஜெயில் சிங், வி.பி.சிங் ஆகியோர் கலந்துகொண்ட காட்சி.

அங்கு கிராம மக்கள் ஒன்றுகூடி பலத்த வர வேற்பு அளித்தனர். வயதான பெண்கள் சிலர் அவனுக்கு நெற்றித் திலகம் இட்டனர்.

ஆயுதம் எதுவும் இல்லாமல் பொலிசார் வர வேண்டும். அவர்கள் முன்பாக நான் சரணடவேன் என்று பொலிஸ் அதிகாரிக்கு தகவல் அனுப்பினான் மல்கான்சிங்.

அவ்வாறே பொலிசார் அங்கு வந்து சேர்ந்தனர்.

கிராம மக்களுக்கு பணமும், நகைகளும் பரிசளித்தான் மல்கான் சிங்.

இறுதியாக சகல விருந்துபசாரங்களும் முடிந்த பின்னர் மல்கான் சிங்கும், அவனது ஆட்களும் தங்கள் துப்பாக்கிகளால் வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

பிந்த் நகர பொலிஸ் நிலையம் வரை கிராம மக்கள் மல்கான் சிங்குடன் ஊர்வலமாகச் சென்றனர்.

பத்திரிகைகளிலும் மல்கான் சிங் சரணடைந்த காட்சிகள் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரமாகின.

செய்திகளையும், புகைப்படங்களையும் பார்த்த பூலானின் ஆட்கள் சிலர் மனம் பேதலித்தனர்.

தயக்கத்தோடு பூலானிடம் வந்து, தாங்கள் இந்த வாழ்க்கையில் இருந்து விலக விரும்புவதாகத் தெரிவித்தனர்.

பூலான் உடனே விடை கொடுத்தாள். தன்னிடம் இருந்த பணத்தில் அவர்களுக்கு பிரித்துக் கொடுத்தாள்.

அதேசமயம் மல்கான் சிங்கின் ஆள் என்றும், பூலானிடம் ஒரு தகவல் கூறவேண்டும் என்றும் ஒருத்தன் தேடி வந்தான்.

மான் சிங்குக்கு அவன்மீது சந்தேகம் ஏற்பட்டது.

அதனால் பூலானை சந்திக்க அவனை அனுமதிக்காமல், தானே நேரடியாக அவனை விசாரித்தான்.

அவன் மான்சிங் எதிர்பாராத நேரத்தில் கைத்துப்பாக்கியை எடுத்து நீட்டினான்.

(தொடர்ந்து வரும்)

## கடைசி நாட்கள்

சூட்டோடு சூடாக டயானாவின் கதையை படமாக்கப் போகிறார்கள். டயானாவாக நடிக்கவைக்க உலக அழகி சுஷ்மிதா



சென்னை முதலில் அணுகினார்கள்.

அவரது தோற்றம் பொருத்தம் இல்லை என்பதால், நடிகை தேடும் படலம் நடந்தது.

இறுதியாகச் சிக்கிவிட்டார் பொருத்தமான நடிகை. அவரது பெயர் ஆமி செமகோம்வே. டோடி ஃபயட்டாக நடிக்கவும் தோற்றப் பொருத்தமுள்ள நடிகர் கிடைத்தார். ஜியார்ஜ் ஜேக்கோச். இருவருமே நூற்றுக்கு 90 வீதம் பொருத்தமான தெரிவு என்பதை இங்கு பிரசுரமாகியுள்ள படம் மூலம் அறியலாம்.

தொலைக்காட்சி தொடராகத் தயாரிக்கப்படும் இப் படத்தின் படப்பிடிப்புக்கள் ஸ்பெயின் நாட்டில் ஆரம்பமாகியுள்ளன.

டயானா-டோடி காதலும், டயானாவின் கடைசிக்கால வாழ்க்கைச் சம்பவங்களும்தான் காட்டப்படும். டயானாவும், டோடியும் உல்லாசத் தீவில் முத்தமிட்டபடி உள்ள படங்கள் பயன்படுத்தப்படும். அரச குடும்பம் பற்றி படத்தில் எதுவும் இருக்காதாம்.

## காது நறுக்

**இ**னிமேல் டாக்டர்கள் சற்று விழிப்பாகத்தான் இருக்கவேண்டும். சவுதி அரேபியாவில் டாக்டர் ஒருவரின் காதை 'நறுக்' என்று கடித்துவிட்டார் நோயாளி ஒருவர்.

மருத்துவமனைக்கு வரவேண்டிய நேரத்தைவிட ஆறுமணி நேரம் தாமதமாக வந்தாராம் ஒரு நோயாளி. அதனால் அவரை உள்ளேவிட மறுத்தாராம் டாக்டர்.

டாக்டருடன் தர்க்கப்பட்டார் நோயாளி. டாக்டர் கண்டிப்பாக நின்றதால் அவர்மீது பாய்ந்து காதை ஒரே கடியாகக் கடித்துவிட்டார்.



கடிபட்ட காதின் துண்டு நோயாளியின் வாயில் இருந்தது. மருத்துவமனை ஊழியர்கள் டாக்டரை மீட்டதோடு, நோயாளியின் வாயிலிருந்த காதையும் மீட்டனர். மீட்கப்பட்ட துண்டுக் காதுடன் அவசர சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டார் டாக்டர். சவுதியில் மெக்காவில் உள்ள மருத்துவமனை ஒன்றில்தான் இச் சம்பவம் நடந்திருக்கிறது.

## கில்லாடி கிளின்ரன்

**கா**தல்லீலை பற்றிய புகார்களால் கிளின்ரனின் பதவியை ஆளாளுக்கு பந்தாடத் தொடங்கியுள்ளனர்.

முன்னர் பவுலா ஜோன்ஸ் உட்பட சில பெண்கள் கிளின்ரன்மீது புகார் கூறி இருந்தனர். பரபரப்பாக்கினர்.

அந்தப் புகார்களில் இருந்து மெல்ல மெல்ல மீண்டு கொண்டிருக்கையில் மோனிகா என்னும் பெண் புகாரோடு கிளம்பியிருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதிகளில் பெண்கள் விஷயத்தில் கில்லாடியாகக் கருதப்பட்டவர் கென்னடி.

பேட்டி எடுக்கச் சென்ற பத்திரிகையாளரான பெண்களைக்கூட தன் காதல்லீலைகளுக்கு இசையவைத்தவர்.

கென்னடிக்குப் பின்னர் பெண்கள் விவகாரத்தில் அதிகப் பிரபலமாகி இருப்பவர் கிளின்ரன்தான்.

கென்னடியின் லீலைகள் உலகப் பிரசித்தமானவை. அதனால் அமெரிக்க ஜனாதிபதிகள் பற்றிய தப்பான அபிப்பிராயங்கள் ஏற்பட்டுவிட்டன. இனிமேல் வரும் ஜனாதிபதிகள் பதவியில் இருக்கும் காலத்திலாவது நல்ல பிள்ளைகளாக இருக்கவேண்டும் என்று அமெரிக்கர்கள் விரும்பினார்கள்.

அதனால் கென்னடிக்குப் பின் வந்த அமெரிக்க ஜனாதிபதிகள் மிக ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டி இருந்தது.

கிளின்ரன் எப்படியோ மாட்டிக் கொண்டார். கவர்னராக இருந்த காலத்திலேயே கிளின்ரன் பெண்களுடன் ஜாலியான ஆசாமிதான் என்று தகவல்.

அது ஒன்றும் பெரிய காரியமல்ல. ஜனாதிபதி பதவிக்குரிய காலத்தில் விளையாட்டுப் பிள்ளையாக இருந்ததுதான் தப்பு என்பது அமெரிக்கர்களின் அபிப்பிராயம்.

அதுவும் கடைசியாக கிளம்பியுள்ள புகார் ஆபத்தானது. வெள்ளை மாளிகைக்குள் காதல் லீலைகளை அரங்கேற்றக்கூடாது என்பது கண்டிப்பான விதி.

ஆனால், அங்கு வைத்துத்தான் கிளின்ரன் தன்னுடன் உறவு கொண்டார் என்று கூறுகிறார் மோனிகா.

கிளின்ரனின் பாரியாரான கிலாரியைத் தவிர, அமெரிக்கர்கள் பலருக்கு கிளின்ரனில் சந்தேகம் வளர்ந்துவிட்டது.

மோனிகாவின் புகார் பொய்யாகக்கூட இருக்கலாம். ஆனால் கிளின்ரனின் செல்வாக்கில் பாதிப்பு ஏற்பட்டிருப்பது உண்மை.

அழகான, இளமையான மோனிகாவின் புகார் அமெரிக்கர்களை கவர்கிறது. மோனிகாவின் அழகையும், இளமையையும் பார்ப்பவர்கள் கிளின்ரன் சலனப்பட்டிருப்பாரோ என்று நினைப்பதுதான் புகாருக்குப் பலம்.



கிளின்ரன்-கிலாரி

## துரத்தியதால் துறப்பு



**இ**ங்கிலாந்து இளவரசி டயானாவை துரத்தியதற்காகப் பத்திரிகைகளை திட்டித் தீர்த்தவர்கள் அந்த நாட்டு மக்கள்.

அதே மக்கள் பத்திரிகையாளர்களை பாராட்டுகிறார்கள். இங்கிலாந்து எம்.பி ஒருவரை நிழலாகத் தொடர்ந்து, அவரது காதல் லீலைகளை புகைப்படம் எடுத்து வெளியிட்டன பத்திரிகைகள்.

எம்.பியின் பெயர் பியர்ஸ் மெர்ச்சன்ட். வயது 46. முன்னர் ஆளும் கட்சியாக இருந்த கன்சர்வேடிவ் கட்சியின் முக்கிய தலைவர்.

அன்னா என்ற காபரே நடன அழகியின் பின்னால் அலைந்தார் பியர்ஸ் மெர்ச்சண்ட்.

'சன்', 'சண்டே மிரர்' போன்ற பத்திரிகைகள் மோப்பம் பிடித்தன. அழகியும் அவரும் பூங்காக்களில் புதர் மறைவுகளுக்குள் கிளுகிளுப்பாக இருந்த காட்சிகளை சுடச்சுட கமராவால் பதிவு செய்து வெளியிட்டுவிட்டன.

பத்திரிகைகளில் புகைப்படம் வெளியானதும் பெரும் பரபரப்பு. அவரை எம்.பி பதவியைத் துறக்குமாறு கூறிவிட்டார் முன்னாள் பிரமரும் கன்சர்வேடிவ் கட்சித் தலைவருமான ஜோன் மேஜர். கலக்கல்தான்.





வாரமலர் தினமுரசு

பெப்.08–14,1998

படிப்பகம்

www.padippakam.com




## குட்டி ஆனால் சுட்டி

← பார்த்தால் சிறிசு, பறந்தால் வலிசு. அதாகப்பட்டது வலியது. உலகில் ஜெட் என்ஜின் பொருத்தப்பட்டுள்ள விமானங்களில் மிகச் சிறிய விமானம் இதுதான். மணிக்கு 260 கிலோமீட்டர் வேகத்தில் காற்றைக் கிழித்துக்கொண்டு சீறிப் பாயும்.

மேற்கு ஃபிரான்ஸ் பகுதியில் ரென்னஸ் நகரில் வெள்ளோட்டம் விட்டுப் பார்த்துள்ளனர். இதன் எடை 74 கிலோ. விமான ஓட்டுநரைவிட விமானத்தின் எடை குறைவு.

ஆனால் ஓட்டுநர் பாரத்தை சுகமாகச் சுமந்தபடி பறந்துவிடும். கெட்டிக்கார குட்டி விமானம். ■

தகவல் பெட்டி

## மீன் உலகம்

↓ மீன் தொட்டிகளில் மீன் வளர்ப்பதைப் பார்த்திருப்பீர்கள். வீடுகளிலும் வளர்க்கிறார்கள். ஆனால் நிலத்திற்கு கீழே உள்ள மீன் காட்சியகத்தில் உள்ள மீன்களைப் பார்த்திருக்கிறீர்களா?


கடலுக்குள்ளேயே சென்று நேரில் பார்ப்பது போல இருக்கும்.

கடல் நீரை அல்லது நன்னீரை பெரிய குளம் போலத் தேக்கி அதற்குள் மீன்களை வளர்ப்பர்.

பார்வையாளர்கள் மீனுக்கு சமீபமாக சென்று அதன் இயல்பான உயிரோட்டத்தை காணக்கூடிய வாறு நிலத்துக்கீழே செல்ல சுரங்கங்கள் அமைக்கப் பட்டிருக்கும். கண்ணாடித் தடுப்புக்களும் அமைக் கப்பட்டிருக்கும்.

இன்று நிலக்கீழ் மீன் காட்சியகங்கள் உலகெங்கும் உள்ளன. ஆனால் முதன் முதலாக அமெரிக்க புளோரிடா மாநிலத்தில் 1938ல் உருவாக்கப்பட்டது. அப்போது 'கிளிக்' செய்யப்பட்ட படம்தான் இது. இந்தப் படத்திற்கும், காட்சியகத் திற்கும் இப்போது வயது 60. தமக்கு உணவாக அந்த மீன் கிடைக்காதா என்று மூன்று பூனைக் குட்டிகள் காத்திருப்பதும் படத்தில் பதிவாகியுள்ளது.

பாவம் அப்பாவிப் பூனைகள். புள்ளடி போட்ட வாக்காளர்கள்போல ஏமாறப்போகின்றன.



## முதலாவது காலடி

↓ நிலா நிலா ஓடிவா என்று நாமெல்லாம் சும்மா பாடிக்கொண்டிருந்தோம். நமக்கு எல்லாமே இருந்த இடம் தேடி வரவேண்டும். உரிமைகள், உலக அதிசயங்கள், இலட்சியங்கள், இயற்கையின் அபூர்வங்கள் அனைத்துமே இணையற்ற முயற்சிகளால்தான் அடையப்பட் டுள்ளன. கண்டறியப்பட்டுள்ளன.

தோல்விகளைக் கண்டு சளைத்தவர்கள் வெற்றிச் சிகரங்களை எட்டிப்பிடித்ததே இல்லை. நிலா கூப்பிட்டால் வராது. நாம்தான் அதனைத் தேடிச் செல்லவேண்டும் என்று அமெரிக்காக் காரனும், ரசியாக்காரனும் பலத்த முயற்சியில் ஈடுபட்டனர். அமெரிக்காக்காரன் முந்தினான்.


முதன் முதலில் சந்திர னில் காலடி வைத்து மனித குலத்தை வியப்பின் உச்சியில் நிறுத்தினார் நீல் ஆம்ஸ் ரோங்.

முதன் முதலாக சந்திர னில் காலடி வைத்தவர் நீல் ஆம்ஸ்ரோங் என்பது தெரிந்த சங்கதிதான். முதன் முதலாக வைக்கப்பட்ட கால் தடத்தை அநேகமானோர் கண்ணால் பார்த்திருக்க மாட்டார்கள். படத்தில் இருக் கிறது பாருங்கள். அதுதான் சந்திரனில் முதலில் ஆம்ஸ் ரோங் எடுத்துவைத்த கால் தடம். உடனே படமாக்கி சரித்திர அடையாளமாகவும், உலகப் புகழ்பெற்ற புகைப் படமாகவும் பாதுகாக்கப் பட்டு வருகிறது.

அப்போலா 11, என்ற விண்கலத்தில் 1969 ஜூலை 21ம் திகதி அன்று சந்திரனில் இந்த முதல் காலடி எடுத்துவைக்கப்பட்டது. நீல் ஆம்ஸ்ரோங்குடன் எட்வின் அல்டரின் என்பவரும் சென்றார். ஆனால் முதலில் காலடிவைக்கும் பாக்யம் பெற்றவர் நீல் ஆம்ஸ்ரோங் தான்.



நீல் ஆம்ஸ்ரோங் சந்திரனில் இறங்க முன்பாக விண்வெளியில் முதன் முதலாக இறங்கியவர் ரசியரான யூரி ககாரின். 1961 ஏப்ரல் 12ல் அவர் இறங்கினார். ■



## காலணிக் கார்

← சூப்பர் ஸ்ரைலுடன் உலாப்போகும் இக் கார் காண்போரை கவர்கிறது. சப்பாத்துப் போன்ற வடிவத்தில் மிகக் கச்சிதமாக இக் காரை உருவாக்கியுள்ளார்.

காலணி ஒன்று சக்கரங்களில் அமர்ந்து நகர்ந்து வருவது போல இருக்கும். ஜோயார்ஜியா வைச் சேர்ந்த கிளைலேண்ட் என்பவர்தான் இந்த புதுமையான வடிவக்காரை உருவாக்கி வெள்ளோட்டம் விட்டுப் பார்க்கிறார். அவருடைய மகன்களும் கூடச் செல்கின்றனர். சோக்குத்தான்! ■

## மன்னார் கடலில்

↓ இது நம்நாட்டில் பதிவான அதிசயக் காட்சி. மன்னாரில் பேசாலை வடகடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர் களுக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

இழுக்க இழுக்க வலை வரவில்லை. கடலில் வீசப்பட்ட மனித உடல் ஏதாவது சிக்கியிருக்குமோ என்று பயத்தோடு, பலத்த முயற்சியால் இழுத்தபோது அட.. இராட்சத மீன்.

இழுவைப் படகு மூலம் கரைக்கு கொண்டுவந்து சேர்த்தனர். சுறா வகையைச் சேர்ந்த இந்த மீனின் எடை கிட்டத்தட்ட இரண்டாயிரம் கிலோ. நீளம் 23அடி. நடுப்புறச் சுற்றளவு 14 அடி (நல்ல வாட்டசாட்டம்) வாயின் நீளம் மூன்றரை அடி. (லபக் கென்று கவ்வ வசதி) தகவல் மற்றும் பட உதவி: கி.டெஸ்மன்குலாஸ், பேசாலை. ■





படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 41

# புன்னகை நடிகையின் சோக வாழ்க்கை

## நிறத்தால் பறிபோன வாய்ப்பு

புன்னகைக்கு பெயர் பெற்ற நடிகை அவர். எம்.ஜி.ஆர், சிவாஜி ஆகியோருடனும் ஜோடியாக நடித்தவர்.

அந்த நடிகைக்கும் மூன்றெழுத்து பட நிறுவன அதிபருக்கும் இடையே பலமான நட்பு இருந்தது.

படநிறுவன அதிபர் பெரும் செல்வந்தர். அவருக்கு ஏற்கனவே இரண்டு மனைவிகள். நடிகையின் புன்னகையில் மயங்கினார் அதிபர்.

புன்னகையுடன் சாகசங்களை வழங்கி படநிறுவன அதிபரை தன் பிடிக்குள் வைத்திருந்தார் நடிகை. சிலகாலமே நட்பு இருந்தது. ஆனால், நடிகை பெற்ற பலனோ ஏராளம்.

பின்னர் வேறு பல பிரபல தொழிலதிபர்களும் நடிகையுடன் நட்புத் தேடத் தொடங்கினார்கள். நடிகையும் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள ஆரம்பித்தார் ஏராளமான வருமானம்.

வெளிநாடுகளுக்கு சென்றும் புன்னகையுடன் கலைச்சேவை புரிந்தார். தனியாக விமானம் வாங்குமளவுக்கு கொடிகட்டிப் பறக்க தொடங்கிய நடிகை அவர்தான்.

பிரபல தொழிலதிபர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோருடன் நடிகைக்கு நெருக்கம் இருந்ததால் நடிகர்கள் பலர் வழக்கமான சில்மிஷங்களை அவரிடம் வைத்துக்கொள்வதில்லை. ஒதுங்கியே இருப்பார்கள்.

பின்னர் நடிகைக்கு திருமணமானது. கணவர் நடிகையின் தனிப்பட்ட விவகாரங்களை கண்டும் காணாமல் இருந்துகொள்வார். நடிகையின் சொத்துமீதே அவர் கண் வைத்திருந்தார்.

நடிகை தன் பிரபல புள்ளிகளுடன் ஜாலியாக இருக்க, கணவரோ நடிகையின் சம்பாத்தியத்தில் வேறு பெண்களை தேடிப் போகத்தொடங்கினார்.

கணவரது செலவுகள் கட்டுமீறிப் போனதால் கொதித்து எழுந்தார் நடிகை. சில காலம் கணவரை வீட்டை விட்டு விரட்டிவிட்டார்.

செலவுக்கு பணம் இல்லாமல் அலைந்த கணவர், மறுபடியும் நடிகையிடமே சரணடைந்தார்.

திரையில் புன்னகையால் மக்களைக் கவர்ந்த நடிகையின் சொந்த வாழ்க்கை படிப்படியாக சில பிரபல புள்ளிகளால் சிதைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

இறுதியில் அரசியல் செல்வாக்குள்ள நடிகர் ஒருவரிடம் தன் சொந்த சோகங்களை கொட்டினார் நடிகை.

இசகு பிசகான சில புகைப்படங்களை நடிகையின் ஆரம்ப காலத்தில் சில புகைப்படப் பிடிப்பாளர்கள் எடுத்து வைத்திருந்தனர்.

அவர்களும் நடிகையை மிரட்டிப் பணம் கறந்து கொண்டிருந்தனர். அனைத்தையும் பொறுமையாகக் கேட்ட பெரிய நடிகர், தன் ஆட்களை சம்பந்தப்பட்ட ஆட்களிடம் அனுப்பிவைத்தார்.

அவர்கள் பேசவேண்டிய முறையில் பேசி பெரும் புள்ளிகளை நடிகையிடம் இருந்து ஒதுங்கச் செய்தனர். புகைப்படப் பிடிப்பாளர்களிடம் இருந்து பிலிம்ரோலையே பறித்து வந்து பெரிய நடிகரின் கையில் தந்தனர்.

அதன் பின்னர்தான் நடிகைக்கு நிம்மதி ஏற்பட்டது. தனது படம் ஒன்றிலும் நடிகையை தனது ஜோடியாக நடிக்கவைத்தார் நடிகர்.

### மறுத்தார் நடிகை

இன்றைய சூப்பர் நடிகர் நடிக்க வந்த புதிதில், 'ஜெய' நடிகையுடன் ஜோடியாக நடிக்க ஒப்பந்தம் செய்தனர்.

பந்தாவும், பகட்டும், எம்.ஜி.ஆர், சிவாஜி போன்றோரின் ஜோடியாக நடித்தவர் என்ற பெருமையும் கொண்டவர் நடிகை.

தன்னுடன் ஜோடியாக நடிக்கும் புது நடிகரை தன் வீட்டுக்கு அனுப்புமாறும், அவரைப் பார்த்துவிட்டு முடிவு செய்வதாகவும் நடிகை தயாரிப்பாளரிடம் கூறினார்.

நடிகரும் ஸ்கூட்டரில் நடிகை வீட்டுக்குச் சென்றார். நடிகையும் சாதாரணமாக அவருடன் பேசி அனுப்பிவைத்தார்.

நடிகரும் நம்பிக்கையுடன் காத்திருந்தார். பிரபலமான அந்த நடிகையுடன் ஜோடியாக நடிப்பதை நினைத்து நடிகருக்கு தூக்கமே வரவில்லை.

மறுநாள் அதிர்ச்சியான தகவல் எட்டியது. நடிகை மறுத்துவிட்டார். மறுப்பைவிட நடிகை சொன்ன காரணம்தான் நடிகரை கவலைக்கு உள்ளாக்கியது. ஜெய நடிகை ஜோடியாக நடிக்க மறுத்த காரணம் வேறொன்றுமில்லை. நடிகரின் நிறம்.

## சேரனின் ரோஜா

'பொற்காலம்' சூப்பர் ஹிட். அதற்கு முன்னதாக பாரதி கண்ணம்மாவும் சூப்பர்ஹிட். இயக்குநர் சேரனின் காட்டில் சோவென்று அடை மழை. தயாரிப்பாளர்கள் துரத்தித் திரிகிறார்கள்.

'காதலி' படத்தை தயாரித்த தாரா கிரியேஷன்ஸ் நிறுவனத்திற்குத்தான் சேரனின் சம்மதம் கிடைத்திருக்கிறது. சேரன் இயக்கப்போகும் புதுப்படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'பாரசீக ரோஜா.' புனிதமான காதல் கதைதான் கரு.

கதாநாயகன் முரளி. கதாநாயகி மீனா அல்ல. தொடர்ந்து மீனாவை இயக்கினால் தங்களுக்குள் உள்ள தொடர்பு ஊர்ஜிதமாகும் என்பதால், புது நடிகை ஒருவரை அறிமுகம் செய்யும் யோசனையில் இருக்கிறார்.

மணிவண்ணன், தலைவாசல் விஜய், செந்தில் இவர்களுடன் பிரபல இந்தி நடிகர் ஷம்மி கபூர் நடிக்கிறார். இசை: தேவா. பாடல்கள்: வைரமுத்து. சுவிற்ஸர்லாந்து, இங்கிலாந்து, துபாய் ஆகிய நாடுகளுக்கும் பறந்து சென்று படமாக்க இருக்கிறார் சேரன்

## மினி சி...

* 'சூர்யவம்சம்' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்த பிரியாராமன், 'பொன்மனம்' படத்திலும் இரண்டாவது கதாநாயகியாகவே நடித்தார். அத்துடன் இவர் தற்போது நடிக்கும் 'அரிச்சந்திரா', 'சிம்மராசி' ஆகிய படங்களிலும் இரண்டாவது கதாநாயகிதான்.
* 'லவ்டுடே' பாலசேகரன் இயக்கத்தில் திருப்பூர் மணி தயாரிக்கும் படத்திற்கு 'காதல் சுகமானது' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதில் திருப்பூர் மணியின் மகன் விவேகானந்த் கதாநாயகனாக அறிமுகமாகிறார்.
* மணிவண்ணன், சி.சுந்தர் ஆகியோரிடம் உதவி இயக்குநராக இருந்த செல்வபாரதி தற்போது விஜய் நடிக்கும் 'நினைத்தேன் வந்தாய்' என்ற படத்தை இயக்கி வருகிறார். இவர் இப்படத்திற்காக ஒரு பாடலையும் இயற்றியிருக்கிறார்.
* டி.ராஜேந்தரின் 'மோனிஷா' படத்தின் கதாநாயகனாக அறிமுகமாகிறார் ஆனந்தகுமார் என்னும் புதுமுகம். இவர் ஒரு பல் வைத்தியர்.
* 'ராமன் அப்துல்லா' பட நாயகி ஈஸ்வரிராவ் இப்போது விக்னேஷுடன் நடித்து வரும் படம் 'காதல் வந்திரிச்சு.' இதை அடுத்து இவர் நடிக்கவிருக்கும் படம் 'கவுண்டரம்மா.' இப்படத்திலும் விக்னேஷ்தான் கதாநாயகன்.
* கே.பாலச்சந்தரின் உதவியாளர் சரண் முதன்



சீமா பிஸ்வாஸ்



ரமேஷ் அரவிந்த்-நிவேதிதா ஜெயின்
படம்: உயிரினும் மேலாக

## காதலும் — காமமும்

எனக்குப் பிடித்த விஷயங்களில் சற்று நேரம் அதிகம் சஞ்சரிப்பது உண்டு. காதல் எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. காதல் உணர்வும் கலந்தால் மட்டுமே உன்னதம். அந்த உணர்வு எனக்கு ஆரம்பம் முதல் இருப்பதால் காதல் இல்லாத காமம் மட்டுமேயான சில வாய்ப்புக்களை தவிர்த்து இழந்திருக்கிறேன்.

பலரை நான் காதலித்தேன். அதில் ஒரு சிலரே என்னைப் பதிலுக்கு காதலித்தார்கள். பல கனவுகள் கண்டிருக்கிறேன். அதில் மிகச் சிலவே பலித்தன" இப்படிச் சொல்லியிருப்பவர் கமல்ஹாசன்.

## விஜயசாந்தி ஸ்டைல்

தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக உள்ளார் விஜயசாந்தி. ஆனால் அதிரடியெல்லாம் சினிமாவோடு ச... பிரசாரத்தில் படு சா... பாரதிய ஜன... வாக்குப் போடுமா... ஏனைய கட்சிகளை... டேன். யாருடைய... கொட்டிக்கொ... இல்லை...

### திட்டமிட்டு

"திட்டமிட்டு செயற்படுபவர்கள் என்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்" என்கிறார் சிம்ரான். 'அப்பாஸ் திட்டமிடத் தெரியாத ஆள்' என்றும் சின்னதாகச் சீண்டுகிறார்.

இந்தியில் பட வாய்ப்புக்கள் பல வந்தும், தமிழ்ப்படங்களுக்கே முதலிடம் கொடுக்கிறாராம்.

### தாத்தா பச்சன்

இந்திப் படவுலகின் நேற்றைய சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன். இப்போது மறுபடியும் படங்களில் தொடங்கி... பிரமாண்டமான படங்களில் நடிக்கத் தொடங்கியிருக்கிறார்.

அமிதாப்பச்சனின் மகள் ஸ்வேதாவுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது. தாத்தாவாகியிருக்கிறார் அமிதாப்பச்சன்.

### விளம்பர தீப்தி

தர்மசக்கரம் படத்தில் விஜயகாந்த் ஜோடியாக நடித்தவர் தீப்திபட்நாகர். அப்படம் தோல்வி கண்டதால் தமிழுக்கு 'வணக்கம்' போட்டுவிட்டார்.

இந்தியில் வாய்ப்புக் குறைவு என்பதால், விளம்பரப் படங்களில் தூள் கிளப்புகிறார். உண்மையான கவர்ச்சிக்கும், எடுப்பான உடல்வாகுக்கும் விளம்பரத்துறைதான் ஏற்ற இடம் என்கிறார் தீப்தி.

தீப்தியைப் பார்க்கும்போது அவரை சரியாக உபயோகப்படுத்தாமல்விட்டது திரையுலகத் தப்புப்போல் படுகிறதுதானே?

### நக்மா ஆசை

நக்மாவுக்கும் எண்ணற்ற சின்னச் சின்ன ஆசைகள். அதில் ஒன்று செந்தமிழர் பாணியில் வேட்டி கட்டி நடிக்க வேண்டும் என்பது. குறைந்த பட்சம் ஒரு புகைப்படமாவது வேட்டியுடன் எடுத்துக் கொள்ள விரும்பினார்.

'வேட்டிய மடிச்சுக்கட்டு' படத்தில் அவரது ஆசையை தீர்த்து வைத்திருக்கிறார் பாக்யராஜ். தலையில் முண்டாசு கட்டி, மையால் மீசை வரைந்து, வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, கையில் பீடியுடன் ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டாராம்.

### அப்பாவைப் பிடி

நடிகர் சூர்யாவை நடிக்க வைக்க வேண்டுமானால் அப்பா சிவகுமாருக்குத்தான் முதலில் கதை சொல்ல வேண்டும்.

அப்பாசுக்கு கதை பிடித்து ஓ.கே சொன்னால் தான் சூர்யா ரெடியாவார்.

### வசந்தமாளிகை

நடிகை ரோஜா தன் காதலர் செல்வமணிக்காகவும், தனக்காகவும் கட்டி வரும் பங்களா பெங்களூரில் இருக்கிறது.


நீச்சல் தடாகம், நூல் நிலையம், தோட்டம் என்பவற்றுடன், செல்வமணி நிம்மதியாக இருந்து சிந்திக்கவும் அழகான அறை ஒன்று கட்டப்படுகிறதாம்.

தன் காதலனுக்காக ரோஜா கட்டும் வசந்த மாளிகை அதுதானோ?!

### போதும் நடிப்பு

திருமணமாகி, போதைப் பழக்கத்திற்கும் அடிமையாகி, பல்வேறு பிரச்சனைகளுக்கு உள்ளாகி மறுபடி தாயாருடன் இணைந்திருப்பவர் ஐஸ்வர்யா. இடைக்கிடையே போதைப் பழக்கம் எட்டிப் பார்த்தாலும், அம்மா லட்சுமி கடும் கண்டிப்பாம். அதனால் போதையை மறந்து வருகிறார். குழந்தையும் நலமாம்.

சில படங்களில் நடிக்க வந்த வாய்ப்பையும் மறுத்திருக்கிறார். கம்பியூட்டர் கற்று வருகிறார்.



கமல்-சௌந்தர்யா-ரம்பா-பிரபுதேவா
படம்: காதலா காதலா



படிப்பகம்

www.padippakam.com

முதலாக இயக்கும் 'காதல் மன்னன்' முடிவுறும் நிலையில் இருக்கிறது. இதை அடுத்து இவர் கார்த்திக் நடிக்கும் படமொன்றை இயக்கவுள் ளார். இப்படத்தையும் பாலச்சந்தரே தயாரிக்கிறார்.

* வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'காதலுக்கு மரியாதை' இந்தியில் தயாராக ...தியில் விஜய் வேடத்தில் அக்ஷய் கன்னாவும், ...ந்தில் நக்மாவின் கடைசித் தங்கை ஜோதிகாவும் ...ர்கள்.

... பாண்டியன்', 'அண்ணன்' ஆகிய படங்களில் ... சுவாதி, 'மலபாரில் நின்னொரு மனமாரன்' ...ளப் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். ...் கதாநாயகனாக நடிக்கிறார்.

...வுடன் 'இனியெல்லாம் ...் நடித்து வரும் லக்ஷி, ... சோனு என்ற ...லயாளத்தில் ப்ரீத்தி ...ரிலும் நடித்து

...டை வேடத் ...ம் 'சுந்தர ...படத்தில் ...சதாம் ... ஏழு ...ில் ...து



# காதோடு சொல்லுகிறோம்

ஐஸ் நடிகை பழைய பழக்கத்தில் முக்கியமானதை கைவிட்டுவிட்டார். சிலதை மட்டும் கைவிட முடியவில்லையாம். நடிக்கும்போது உயிர்த்தோழிகளாக இருந்த நடிகைகளை அடிக்கடி தன் வீட்டுக்கே அழைத்து சந்திக்கிறாராம். நடிக்கப் போனால் மறுபடி கெட்டுப் போவாரோ என்று பயந்துதான் தடைச் சட்டம் போட்டிருக்கிறாராம் நடிகையான தாய்க்குலம்.

கனக நடிகை தான் நடிக்கும் படங்களில் தரப்படும் உடைகளை சுருட்டிக் கொண்டு போய்விடுவாராம். நடிகையின் தாய்க்குலம் கற்றுக்கொடுத்த பாடம் அது என்கிறார்கள். அவரும் பிரபல நடிகையாக இருந்தபோது இப்படித்தான் சுருட்டிக் கொண்டு போய்விடுவாராம்.

சுந்தர இயக்குநரின் படத்தில் 'ரம்ப' நடிகை தகராறு செய்ததால் அவரது இடத்திற்கு வந்தார் இன்னொரு நடிகை. அந்த நடிகையும் நடிகரும் படப்பிடிப்பு இடைவேளையில் தலைமறைவாகினர். இடைவேளை முடிந்துவந்த இயக்குநர் நடிகையைத் தேடினார். உதவியாளர்கள் தகவல் கூறினர். உடனே செல்போனில் நடிகையைப் பிடித்து, பிடித்தாராம் ஒரு பிடி. பத்து நிமிடத்தில் பறந்துவந்து நல்ல பிள்ளையாக நடித்தாராம் நடிகை.

தனது உடன்பிறப்பு நடிகையை கவர்ச்சியாக நடிக்கவைத்து, அவரது இளமையை பயன்படுத்துமாறு இயக்குநர்களுக்கு ஆலோசனை கூறுகிறாராம் 'நக்' நடிகை.

# சுல்தானா தில்லானா

மம்முட்டி, நெப்போலியன் நடிக்கும் 'எதிரும் புதிரும்' படத்தில் பிரபுதேவாவின் சகோதரர் ராஜுசுந்தரமும் சிம்ரானும் ஆடிப்பாடும் பாடல் ஒன்று இப்படித் தொடங்குகிறது;

'தொட்டு தொட்டு பேசும் சுல்தானா தொட்டவுடன் நெஞ்சில் தில்லானா...'

இசை: வித்யாசாகர். நாட்டுப்புற பாடல்களைப் பாடும் புஷ்பவனம் குப்புசாமியும் பாடலுக்கு பின்னணிக் குரல் கொடுத்திருக்கிறார்.

# சரத்குமார் எம்.பி?

நடிகர் சரத்குமார் இம்முறை தேர்தலில் சற்று ஒதுங்கியிருக்கத்தான் நினைத்தார்.

ரஜினிகாந்த்தை ஜெயலலிதா சீண்டினார். சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தார். அதனால் ரஜினி வாய்திறந்தார். தி.மு.க, த.மா.க.கூட்டணிக்கு வாக்குப் போடுமாறு தன் ரசிகர்களிடம் கூறினார்.

அதன் பின்னர் சரத்குமாருக்கும் புதுத் தெம்பு வந்துவிட்டது. தி.மு.க கூட்டணிக்கு ஆதரவுக்கரம் நீட்டினார். பதிலுக்கு அவரது கையில் தொகுதி ஒன்றை நீட்டி தேர்தலில் போட்டியிடவைத்துவிட்டனர். திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடுகிறார் சரத்குமார். எம்.பியாகும் வாய்ப்பு இல்லாமலில்லை.

# அப்பாஸிடம் கலாட்டா

'இனியெல்லாம் சுகமே' படப்பிடிப்பில் அப்பாஸிடம் கல்லூரிப் பெண்கள் சிலர் செம கலாட்டா செய்துவிட்டனர்.

மாணவிகள் அப்பாஸிடம் பேசியவற்றில் சிறு துளிகள்:

"இரவில் எங்கள் தூக்கத்தைக் கெடுக்கிறீர்கள்".

"தினமும் உடற்பயிற்சி செய்கிறீர்களா அப்பாஸ்?"

"ஹீரோயினைக் கட்டிப் பிடிச்சு நடிச்சா ஜாலியாக இருக்கும்தானே?"

"சிம்ரனின் தொப்புளில் மண்ணைப் போட்டு நிரப்பினீர்களே. அவரை நீங்க லவ் பண்ணினீங்கதானே?"

அய்யோ ஆளைவிடுங்க என்று தப்பியோடினாராம் அப்பாஸ்.

# 'காதலைத் திருடாதே'

'இதயத்தை திருடாதே' என்று முன்னர் ஒரு படம் வந்தது. 'இப்போது காதலைத் திருடாதே' என்ற பெயரில் படம் ஒன்று தயாராகிவருகிறது.

'இதுதாண்டா பொலிஸ்' 'பொலிஸ் லாக்கப்' போன்ற தடாலடிப் படங்களைத் தந்த இயக்குநர் கோடி ராமகிருஷ்ணா கிளு கிளுவாக இயக்கும் படம் இது.

கதாநாயகன் சுரேஸ். ஜோடிகளாக செளந்தர்யாவும், ரீத்துசிங்கும் நடிக்கின்றனர். வஞ்சகமில்லாமல் கவர்ச்சி காட்டியுள்ளாராம் ரீத்துசிங். மும்பாய் அழகியான ரீத்துசிங் வெளியிட்டுள்ள திடுக்கிடும் அறிவிப்பு: "ஆணுறை விளம்பரங்களில் நடிக்க நான் தயார். எய்ட்ஸ் ஒழிப்புக்கு என்னாலான உதவியாக அதனைக் கருதுகிறேன்."

# விஜய் உதவி

தொடர் வெற்றிகளால் சுறுசுறுப்பாக இருக்கிறார் விஜய்.

'காதலுக்கு மரியாதை' படத்தை அடுத்து 'பிரியமுடன்' படமும் வெற்றியாக அமையும் என்று நம்பியிருக்கிறார்.

மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னூறு மூட்டை அரிசி வாங்கி சென்னை மாநகர முதல்வரிடம் கையளித்தாராம்.

"இதை என்னுடைய பிரபலத்திற்காக செய்யவில்லை. சமுதாயத்தில் ஏழை மக்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும். அதுதான் இக்காரியத்தைச் செய்தேன்" என்கிறார் அடக்கமாக.




ரம்பா
படம்: நினைத்தேன் வந்தாய்

# நிழல் பூலான் தேவி

தீப்தி பட்நாகர்

பூலான் தேவியாக நடித்தவர் சீமா பிஸ்வாஸ். மேக அப் இல்லாமல் பார்த்தால்கூட பூலானின் இளம் வயதுத் தோற்றம் போல தெரிகிறார் அல்லவா.

பூலானை கிராமத்தில் நிர்வாணமாக ஓடவைக்கும் காட்சியிலும், பூலான் தன் காதலனுடன் மேலிருந்து உறவு கொள்ளும் காட்சியிலும் தான் நடிக்கவில்லை என்று சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டதாம்.

வேறு ஒரு துணை நடிகையைத்தான் அக் காட்சிகளில் நடிக்க வைத்தனர் என்று சொன்னாலும் யாரும் நம்புகிறார்கள் இல்லையாம்.

பூலான்தேவியாக நடித்த பின்னர் சீமா பிஸ்வாசுக்கு மனநிறைவைத் தந்த அடுத்தபடம் காமோஷி. நானா பட்டேகர் தான் ஜோடி. பூலான் தேவியாக நடித்த பண்டிட் குயின் வெளியான பின்னர் சில காலம் சங்கடமாக இருந்தது உண்மை. இப்போது சகஜமாகிவிட்டது என்கிறார்.

உண்மைக் கதையைத்தான் சொன்னார்கள். அதில் என்ன வக்கிரம் இருக்கிறது. நான் ஏன் வெட்கப்படவேண்டும். சம்பந்தப்பட்ட பூலான்தேவியே எம்.பியாக இருக்கிறார்" என்கிறார் சீமா பிஸ்வாஸ்.

இளையராஜா இசையில் பாரதிராஜா இயக்கத்தில் உருவான படம் கடலோரக் கவிதைகள்.

# கடலோரக் காதல்

இளையராஜா இசையில், வி.எம்.சி. ஹனீபா இயக்கத்தில் உருவாகப்போகும் படம் கடலோரக் காதல்.

கதாநாயகன் தமிழுக்கு புதுமுகம். மலையாளப் படங்களில் கதாநாயகனாக நடிக்கும் சஞ்சய் மித்ராதான் அறிமுகமாகிறார். மஞ்சு என்ற பெயரில் புதுமுகம் கதாநாயகியாக நடிக்கிறார்

கவுண்டமணி, செந்தில், ஒரு விரல் கிருஷ்ணராவ், ஓமக்குச்சி நரசிம்மன், ஷர்மிலி ஆகியோரும் நடிக்கின்றனர்.



முகப்பில்
சரத்குமார்
படம்:
மூவேந்தர்

மோகினி
விஜயசாந்தி
படம்:
வேட்டைக்காரி




பிரபுதேவா-மீனா
படம்: நாம் இருவர் நமக்கு இருவர்

# மீனா பொருத்தம்

வி.ஐ.பி. படத்தின் பின்னர் பிரபுதேவா நடிப்பில் வந்திருப்பது 'நாம் இருவர் நமக்கு இருவர்.' எதிர்பார்த்தளவு படம் இல்லை என்று அபிப்பிராயம்.

பிரபு தேவாவுக்கு ஜோடி மீனாவும், மகேஸ்வரியும். மீனாதான் கலக்குகிறார். மகேஸ்வரியும் சளைக்காமல் உருண்டு புரண்டாலும் பிரபு தேவாவுக்கு ஈடுகொடுப்பது மீனாதான் என்பது ஜொள்ளர்கள் சிலரது ஆழ்ந்த கருத்து.

பிரபுதேவாவைவிட மீனா சீனியர். ஆனாலும் இன்னமும் சின்னப் பெண்ணாக மீனா துள்ளுகிறார்.

# இந்தியில் அவர்

பிரகாஷ்ராஜ், தேவயாணி நடித்துள்ள படம்: 'சொர்ணமுகி'. இயக்கம்: அதியமான். இதனை இந்தியில் எடுக்கப் போகிறார்கள்.

அதியமான் இயக்கிய தொட்டாச்சிணுங்கி படமும் இந்தியில் எடுக்கப்பட்டிருந்தது.

இந்தியில் சொர்ணமுகிக்கு என்ன பெயர் வைப்பது என்பது இன்னமும் முடிவாகவில்லை.

தமிழில் சொர்ணமுகிக்கு இசை: ஸ்வரராஜ். இந்தியில் இசையமைக்கப்போவது: இளையராஜா.


படிப்பகம்

www.padippakam.com

## விருந்தோ விருந்து

திருமண நாள், பிறந்தநாள், பதவி உயர்வு போன்ற சந்தோஷமான ஒவ்வொரு நிகழ்ச்சியையும் உற்றார், உறவினர், நண்பர்களோடு கொண்டாட விருந்துகள் நடத்துவதுண்டு.

விருந்துகளில் ஏற்படும் சின்னச் சின்னத் தவறுகள்கூட பிரச்சனைக்குரியவைகளாக மாறிவிடும்.

குறைகளின்றி விருந்து நடத்துவது எப்படி?

* யார் யாரை அழைப்பது என்பதை முதலில் முடிவு செய்யுங்கள். எவ்வளவு பேருக்கு உணவுப் பொருட்கள் தயாரிப்பது, இருக்கை வசதிகள் ஏற்படுத்துவது என்பன போன்றவைகளை முன்கூட்டியே திட்டமிட அவை உதவும்.
* உள்ளூர் நண்பர்கள் உறவினர்கள் என்றால் குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்பாகவே அவர்களுக்கு அழைப்பிதழை அனுப்பி விடுங்கள்.
* விருந்துக்கு உணவு தயரிக்க அனுபவமுள்ளவர்களின் ஆலோசனையைப் பெற்றிருங்கள். அந்த ஆலோசனை உணவுத் தட்டுப்பாட்டையோ, உணவு மிச்சத்தையோ ஏற்படாமல் செய்யும்.
* விருந்திற்கு வருகிறவர்கள் எல்லாம் சாப்பிடத்தான் வருகிறார்கள் என்று கருதி விடாதீர்கள். அதனால் அவர்களுக்குச் சாப்பாடு கொடுப்பதில் மட்டும் அக்கறை காட்டாமல் அவர்களை அன்பாக வரவேற்கவும், உபசரிக்கவும், வழியனுப்பவும் அக்கறை காட்டுங்கள்.
* விருந்து நிகழ்ச்சிக்கு வருகிறவர்கள் அனைவரிடமும் பேதம் காட்டாமல் எல்லாரையும்



ஒரே மாதிரி உபசரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.
* ஒருவருக்கு மட்டும் அதிக முன்னுரிமை கொடுப்பதும் மற்றவர்கள் மனதை நோகச் செய்யும்.
* விருந்து நடத்துபவரானால் அனைவரையும் ஒரு சேரக் கவனிக்க முடியாது. அதனால் இனிமையாகப் பழகும் உறவினர்கள், நண்பர்களையும் அப்பணியில் ஈடுபடுத்துங்கள்.
* விருந்தினர் விடைபெறும்போது அவர்களுக்கு உங்கள் நன்றியினை வெளிப்படுத்துங்கள்.

## எந்த மை அழகு

கண்களின் அழகுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் பெண்கள் கண்மை போடுவார்கள்.

கடைகளில் கண் மை டப்பாக்கள் கிடைக்கும். இதனை வீட்டிலேயே தயாரிப்பது நல்லது.

வீட்டிலே கண் மை தயாரிக்கும்முறை இதோ:

குலை வாழையின் தண்டைச் சுற்றி இருக்கும் பளபளப்பான மடலை ஒரு அடி நீளம், அரை அடி அகலத்தில் வெட்டி எடுத் துக்கொள்ளுங்கள். சுத்தமான வெள்ளைத் துணியால்



முறுக்கி, தேங் காய் எண்ணெயில் வைத்து திரியைக் கொழுத்துங்கள். திரி எரியும் போது, அதன் மேல் வாழை மடலைக் கவிழ்த்துப் பிடியுங்கள். திரி எரிந்து முடியும்போது, வாழை மடலில் கரி நிறையப் படிந்திருக்கும். அதனை அப்படியே தட்டி எடுத்துப் பாதுகாத்திடுங்கள்.

தேவையானபோது, அவ்வப்போது எடுத்து, தேங்காய் எண்ணெயில் கலந்து கண் மை இடுங்கள்.

## முரசு-அருள் ஜுவலர்ஸ் தங்கமாலை பரிசுப் போட்டி அதிஷ்டசாலிகள் இவர்கள்

**ஆறுதல் பரிசுபெறும் மேலும் பத்து அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

36. சம்சுதீன் நஜ்மா
02, தக்வா நகர், லவ் லேன்,
திருமலை.
37. ஜே. லூஸியா லேன்
17/4, புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.
38. ச.ஃபீனா இப்ராஹீம்
7, யூ.சி.ரி.போல்ஸ் வீதி, புத்தளம்.
39. செல்வி.எஸ். தமயந்தி
49, லோவர் கிங்ஸ்ரீட், பதுளை.
40. செல்வி எஸ். வனிதா
செண்ட் லெனாட்ஸ் கொலனி,
ஹல்கரனோயா.
41. ஃபரீதா
219, ரத்தோட்டை வீதி,
களுதாவெல, மாத்தளை.
42. எஸ். அமுதா
தியனிலகல பஸார்,லிந்துல.
43. எஸ். வாணி
44/14,டீ சொய்சா லேன்,கொழும்பு-2.
44. ஏ.ஆர். ஹமீஸா
64, பி, ஜயந்தி மாவத்தை,
அநுராதபுரம்.
45. திருமதி எம்.எஸ். ஸபினாஸ்
இலங்கை வங்கி வீதி,
அக்கரைப்பற்று-02.

ஆறுதல் பரிசு பெறும் ஏனையோரது பெயர் விபரங்களும் அடுத்த வாரம் வெளியாகும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** DD

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................
கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: **14-02-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள் (21)

புவனா

அரச குடும்பத்தினரின் பொழுது போக்குகளில் ஒன்று பனிச்சறுக்கு விளையாட்டு.

1987ல் பனிச்சறுக்கு விளையாட்டுக்காக சுவிற்ஸர்லாந்துக்கு சாள்ஸ்-டயானா, ஆண்ட்ரு-சாரா ஆகியோர் ஜோடிகளாகச் சென்றனர்.

அரச குடும்ப உதவியாளர்கள் சிலரும் அவர்களுடன் சென்றனர். அவர்களில் ஒருவர் ஹியூ லின்ட்சே.

அரண்மனைக்கு வந்த பின்னர் அங்குள்ள உதவியாளர்கள் சிலரை தன் கைக்குள் போட்டு வைத்திருந்தாள் சாரா.

அவர்களில் முதன்மையானவர் ஹியூ லின்ட்சே.சாராவுடன் அவர் நெருக்கமாக பழகியதை டயானாவே சில சமயம் கண்டிருக்கிறாள்.

"பயங்கரமான ஜொள்ளுப் பார்ட்டி" என்று சாரா அவரைப்பற்றி டயானாவிடம் சொல்லியும் இருக்கிறாள்.

பனிச்சறுக்கு விளையாட்டில் டயானாவால் தொடர்ந்து ஈடுபடமுடியவில்லை. ஃப்ளுஜுரம் ஏற்பட்டதால் இரண்டு நாட்கள் படுக்கையில் இருந்தார்.

மரத்தால் செய்யப்பட்ட குடிசை ஒன்றில் அவர்கள் தங்கியிருந்தனர். இடையிலே சிறு தடுப்பு இருந்தது. இரவு நேரத்தில் ஆண்ட்ரு-சாரா இருவரும் சந்தோசமாக இருப்பதற்கான அறிகுறிகளை தடுப்பையும் மீறி அறியக்கூடியதாக இருக்கும்.

சாரா வேண்டுமென்றே சற்று உரத்து முனகுகிறாளோ என்று டயானா நினைத்துக் கொள்வார். தன்னைப்பற்றி பிறர் பெருமையாக நினைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் சாரா எப்போதுமே அக்கறை கொண்டிருந்தாள்.

படுபயங்கரமான தன்னலவாதி என்று சாராவைப் பற்றி மதிப்பிட்டிருந்தாள் டயானா.

சாள்ஸ் தூங்கிப் போய்விடுவார். டயானா மட்டும் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருப்பாள்.

சாராவின் முனகலும், அங்கிருந்து கேட்கும் ஓசைகளும், உரசல்களும் டயானாவை வதைக்கும்.

'எப்போதடா இங்கிருந்து போகப் போகிறோம்' என்று நினைக்க ஆரம்பித்துவிட்டார் டயானா.

அப்போதுதான் அந்தச் சம்பவம் நடைபெற்றது. குடிசைக் கதவைத் தள்ளிக் கொண்டு முகத்தில் கிலியோடு சாரா புகுந்தாள்.

என்ன விஷயம், என்று டயானா கேட்டபோது சாரா முதலில் மழுப்பலாக பதில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

அதேசமயம் ஹெலிக்கொப்டர் ஒன்று குடிசைக்கு மேலாகப் பறந்து சென்றது.

டயானாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. சாராவை உலுக்கி, "உண்மையைச் சொல்! என்ன பிரச்சனை?"

சாரா அச்சம் மாறாத குரலில், "பனிப்பாறை ஒன்று உடைந்துவிட்டது. அதனால் ஏதோ விபத்து நடந்துவிட்டது போலிருக்கிறது,"



### டயானா கொடுத்த அதிர்ச்சி

என்றாள்.

அப்போதுதான் சாராவின் முழங்கையில் சிராய்ப்புக் காயங்கள் இருப்பதை கவனித்தார் டயானா. சந்தேகம் வந்தது.

"இது என்ன காயம்?"

"விபத்தில் நானும்தான் சிக்கிக்கொண்டேன். தலைகீழாகப் புரண்டுபோனேன்!"

டயானா சந்தேகத்தோடு சாராவை பார்க்க, அந்தப் பார்வையின் வீச்சில் இருந்து தப்பிக்க எழுந்து வெளியே போனாள் சாரா.

டயானாவும் அவள் பின்னால் சென்றார். வெளியே ஒரே பரபரப்பாக இருந்தது. உதவியாளர்கள் அங்குமிங்கும் ஓடித்திரிந்தனர்.

உதவியாளர் ஒருவரை அழைத்து விசாரித்தபோது, உண்மை தெரியவர, டயானா திகைத்துப் போனார். அதே திகைப்போடு சாராவை திரும்பிப் பார்க்க, சாரா அங்கில்லை, முன்னரே நழுவிப் போய் ஆண்ட்ருவின் பக்கத்தில் நின்றிருந்தாள்.

"ஹியூ லின்ட்சே விபத்தில் செத்துப் போய்விட்டார்." என்ற தகவலைத்தான் உதவியாளன் மூலம் அறிந்து திகைத்தார் டயானா.

டயானாவால் நம்பவும் முடியவில்லை. நம்பாமலிருக்கவும் முடியவில்லை.

ஹியூவின் உடலை ஹெலிகொப்டரில் கொண்டு செல்ல ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன.

சாராவை அவளுக்குத் தெரியாமல் அவதானித்தார் டயானா.

முகத்தில் எவ்வித சலனமும் இல்லாமல்-காட்டாமல்- இறந்தவரை முன்பின் தெரியாத ஒருத்தி போல நின்றுகொண்டிருந்தாள் சாரா.

சாராவைப் பற்றிய வெறுப்பு முதன் முதலாக டயானாவின் மனதில் தோன்றியது அப்போதுதான்.

சாராவும் டயானாவும் நேருக்கு நேர் பார்க்க நேர்ந்தபோது, தன் பார்வையாலேயே சாராவை அறைந்தார் டயானா.

ஹியூ லின்ட்சேயின் மரணம் தற்செயலான விபத்தால் ஏற்பட்டதா? அல்லது திட்டமிட்ட விபத்தா? என்றுகூட டயானாவால் கண்டறிய முடியவில்லை.

அன்றும் சரி, அதன்பின்னரும் சரி அந்த விபத்துப்பற்றி சாரா வாய்திறந்து பேசவேயில்லை.

ஹியூ லின்ட்சே திருமணமானவர். அவரது உடலை மனைவியுடம் கொண்டு சென்று ஒப்படைக்க யாரும் முன்வரவில்லை.

சாள்ஸும், ஆண்ட்ருவும் உடலை அனுப்பிவைப்பதுடன் தமது கடமை முடிந்தது என்பது போன்றே நடந்து கொண்டனர்.

டயானாவுக்கு பொறுக்கவில்லை. "நானே போகிறேன்! உடலை ஒப்படைத்து ஆறுதல் கூறிவிட்டு வருகிறேன்! அதுதான் சரியாக இருக்கும்!" என்று திடமாக டயானா கூறியதால், வேண்டா வெறுப்பாக சம்மதித்தார் சாள்ஸ்.

லின்ட்சேயின் உடலுடன் நொதோலற் விமானத் தளத்தை சென்றடைந்தபோது, அவரது மனைவி வந்திருந்தாள்.

அவள் கதறி அழுததைப் பார்க்க டயானாவுக்கும் பெரும் தவிப்பாக இருந்தது.

அவர்கள் திருமணம் முடித்து ஒருவருடம் கூட ஆகவில்லை. அவள் ஆறுமாதக் கர்ப்பிணியாக இருந்தாள்.

அன்றிரவு முழுவதும் டயானா லின்ட்சேயின் மனைவியுடன் ஹைகுரோவ் மாளிகையில் தங்கிருந்தார்.

டயானாவின் இத்தகைய குணங்களால்



சாள்ஸ், ஆண்ட்ரு-சாராவுடன் டயானா.

அரண்மனை ஊழியர்கள் மத்தியில் டயானாமீது மதிப்பும் மரியாதையும் வளரலாயிற்று.

சாராவின் திடீர் செல்வாக்கு மெல்ல மெல்ல சரியத் தொடங்கியது. ஆண்ட்ரு, சாரா இருவரும் அடிக்கடி சண்டைபோடவும் ஆரம்பித்தனர்.

### நேருக்குநேர்

இளவரசர் சாள்ஸுக்கும் கமீலாவுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றிய செய்திகள் டயானாவுக்கு பழக்கமாகிவிட்டன.

சில சமயங்களில் பொல்லாத ஆத்திரமாக இருக்கும். பின்னர் தணிந்து போய்விடுவாள்.

கமீலாவின் சகோதரியின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு டயானாவையும் அழைத்திருந்தார்கள்.

டயானா வரமாட்டார் என்று நினைத்தாலும், ஒரு மரியாதைக்காக அழைப்பு விடுத்திருந்தனர்.

அவர்களது எதிர்பார்ப்புக்கு மாறாக டயானாவின் முடிவு அமைந்தது.

"பிறந்தநாள் விழாவுக்கு நானும் வருகிறேன்!" என்று டயானா சொன்னபோது சாள்ஸின் வியப்பை முகம் காட்டிக்கொடுத்தது.

சாள்ஸுடன் ஜோடியாக வந்த டயானாவைக் கண்டதும், கமீலாவின் முகமும் கறுத்துத்துப்போனது.

அந்தக் கொண்டாட்டத்தில் தனக்கு ஏற்பட்ட அனுபவம் தொடர்பாக டயானா பின்னர் இவ்வாறுதான் நினைவு கூருகிறார்:

"வரவேற்பின் முகப்பிலேயே கமீலா நின்றிருந்தாள். வேண்டுமென்றே முகத்தில் மகிழ்ச்சிக் கோலம் காட்டிக்கொண்டு கமீலாவுக்கு கை கொடுத்தேன்.

மாடியில் விருந்து நடந்து முடிந்ததும் ஒவ்வொருவரும் கூடிக் கலந்து பேசிக் கொண்டிருந்தனர்.

இவர்களுள் சாள்சையும் கமிலாவையும் தேடினேன்- காணவில்லை.

கீழே இறங்கி இருப்பார்களோ என்று எண்ணி, படிகளில் இறங்கும்போது சிலர் நாசூக்காகத் தடுக்க முயன்றனர். நான் பிடிவாதமாக கீழே சென்றேன்.

எதிர்பார்த்தபடி ஒருமூலையில் சாள்ஸ், கமீலா ஆகியோர் கலகலப்பாக சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுடன் இன்னொருவர் நின்றிருந்தார்.

நான் எதையும் காட்டிக் கொள்ளாமல்- "என்ன இங்கேயா நிற்கிறீர்கள்? எல்லோரும்



நீங்கள் எங்கே என்று கேட்டு என்னைத் துளைத்துவிட்டார்கள். அதுதான் தேடிவந்தேன். மேலே போகலாமா?" என்றேன்.

சாள்ஸ் அதனை எதிர்பார்க்கவில்லை. அவர் சமாளித்துக்கொண்டார். கட்டாயமாக தருவிக்கப்பட்ட சிரிப்புடன், விடுவிடுவென்று படிகளில் ஏறி மேலே சென்றார்.

கமீலா நழுவப்பார்க்க, நான் அவளது கையைப் பற்றிக்கொண்டேன்.

கமீலா துணுக்குற்றாள். கடந்த சில மாதங்களாக என்னைச் சந்திப்பதையும், பேசுவதையும் கமீலா தவிர்த்தே வந்தாள்.

குற்றமுள்ள மனது குறுகுறுக்கிறதாக்கும் என்று நானும் நினைத்துக் கொள்வேன்.

இன்று நேரிலேயே பார்த்தாகிவிட்டது. "உம்மோடு தனியாகப் பேசலாமா?" என்று கேட்டேன்.

அங்கிருந்த சோபா ஒன்றில் அமர்ந்தோம். கமீலா சங்கடத்தால் நெளிந்தாள். நான் என்ன பேசப்போகிறேன், என்பதை ஊகிப்பது அவளுக்கு ஒன்றும் கடினமாக இருந்திருக்காது.

என்ன விதமாகப் பேசப்போகிறேன் என்பதைத்தான் அவளால் ஊகிக்க முடியாமல் இருந்திருக்கும்.

அவளது சங்கடத்தையும், அவள் முகம் கறுத்துச் சுருங்குவதையும் நான் உள்ளூர இரசித்தேன்.

மேலும் தாமதித்தால் அவள் எழுந்து ஓடியே போய்விடுவாளோ, என்று நினைத்து, நேரடியாக விஷயத்திற்கு வந்தேன்.

"கமீலா! உமக்கும் என் கணவருக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று நினைக்க வேண்டாம்!"

அந்த வார்த்தைகள் மிகத் தெளிவாக புறப்பட்டுச்சென்று அவள் கன்னத்தில் அறைந்திருக்க வேண்டும். அவள் தடுமாறினாள்.

நான் தொடர்ந்தும் மிகத் தெளிவான-சுருக்கமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து அவளை நோக்கி வீசினேன். நான் நேற்றுப் பிறந்த குழந்தையல்ல. இவ்வாறு வெளிப்படையாகக் கூறுவதற்காக என்னை மன்னித்துவிடு, என்னை ஒரு முட்டாள் என்றுமட்டும் நினைத்துவிடாதே!"

கமீலா பதில் சொல்ல வார்த்தைகளைத் தேடினாள். கிடைக்காமல் தவித்தாள்.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கலகெதர வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

பாத்திமா ஸஃப்ரா,
20, கல்லூரி வீதி, மடிகே, கலகெதர.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com

## சுதந்திரப் பொன்விழாவைப் போற்றும்

சுதந்திரம் ஏதுக்கடி- பூருங்காய்
சுதந்திரம் ஏதுக்கடி?

இனம் பார்த்து மொழி பார்த்து
எமக்கு குள்ளே முரண் பட்டு
மனு வாழ்வை மாய்க கின்ற
மறம் கொண்ட புவி மீதில

சுதந்திரம் ஏதுக்கடி- பூருங்காய்
சுதந்திரம் ஏதுக்கடி?

சாந்தம் அமைதி அன்பே கடவுள்
சாற்றும் நெறியை சடங்காய் கீதத்தி
வாதம் புரிந்து வன்மை வளர்க்கும்
வேதம் படிப்போர் வாழும் புவியில்

சுதந்திரம் ஏதுக்கடி- பூருங்காய்
சுதந்திரம் ஏதுக்கடி?

அரும் உறங்கும் இருள் சாமம்
பிருத்தி தனியாய்ப் போகாமல்
வாலும் தலையும் கதைக் காகும்
வரட்டு மதியோர் வாழ் நிலத்தில

சுதந்திரம் ஏதுக்கடி- பூருங்காய்
சுதந்திரம் ஏதுக்கடி?

உழைக்கும் மாந்தர் மிடி வாழ்வை
உறக்க என்றோர் கொடுங் கூட்டம்
விலையைக் கூட்டி வரி கூட்டி
வதைத்தே மேன்மை புரி நிலத்தில்

சுதந்திரம் ஏதுக்கடி- பூருங்காய்
சுதந்திரம் ஏதுக்கடி?

காசு கொண்டார் மேல் மாந்தர்
காசே அற்றோர் கேவல மாய்
வேசம் பூண்டோர் வாழ்வோங்க
வாழும் மண்ணில் சீர் தினமாம்

சுதந்திரம் ஏதுக்கடி- பூருங்காய்
சுதந்திரம் ஏதுக்கடி?

கொல்லும் போரில் தலைகாக்க
கோவில் மன்றில் ஒளிந்தாலும்
செல்லும் வாணம் உயிர்போக்கு
சாற்றல் வெற்றிக் களிப்பென்றால்

சுதந்திரம் ஏதுக்கடி- பூருங்காய்
சுதந்திரம் ஏதுக்கடி?

இருக்கும் சொத்தை விற்றுமெசகு
இரவல் துடைப்பம் கடன் வாங்கி
பெருத்த விழாவைக் காட்டுதலால்
புதைக்கும் மனிதம் தொடா மண்ணில்

சுதந்திரம் ஏதுக்கடி- பூருங்காய்
சுதந்திரம் ஏதுக்கடி??!

மாவை- வரோதயன்.

## பிரிவு

என்றாயினும் ஒரு நாள்
நாம் பிரிய வேண்டியவர்களே.
நாளை அன்றி
நாளைகளுக்கு நாளையாயினும்...!
▫▫▫
உறவினரால், மரணத்தால்
மாறாய்,
நம்மால் கூட
அந்தப் பிரிவு நிகழலாம்!
ஒளியை நிலவு இழப்பது மாதிரி
உன்னை நானோ...
என்னை நீயோ...
என்றாயினும் ஒரு நாள்
அது நிகழ்ந்து போகலாம்!
▫▫▫
சில அஞ்சல்களாலும், அழுவதனாலும்
முத்தங்களாலும்
ஸ்பரிசித்த ஞாபகங்களை-மீள
ஸ்பரிசித்துப் பார்ப்பதனாலும்
வெற்றுப் பிரார்த்தனைகளாலும்
நிகழாமலிருக்கப் போவதில்லை அது!
▫▫▫
என்றாயினும் அது நிகழும்
நாளை அன்றி
நாளைகளுக்கு நாளையாயினும்!
▫▫▫
கண்ணீர் உகுப்பாயா அவ்வேளை?
அன்றி
முன்பெல்லாம் உன்மேல் பூத்தூவிய
அதே தேவதைகளை
சாபமிட்டுத் தொலைப்பாயா?
▫▫▫
மெல்லிய தென்றலுக்கே உதிர்ந்து போகும்
அதிமெல்லியதொரு பூவின் இதழுதிர்வாய்...
இந்த பிர பஞ்சத்தின்
தவிர்க்க முடியாத சில சலனங்களில்
நம் பிரிவு அது நிகழ்ந்தே தீரும்!
▫▫▫
உறவினரால், மரணத்தால் ;
மாறாய
நம்மால் கூட
அந்தப் பிரிவு நிகழலாம்.
விரும்பி,
சிலவேளை
நாம் விரும்பாமலும்கூட!
▫▫▫
அழுகை, புலம்பல், சாபம்
இவைகளாலான திரை நீக்கி
திறந்து பார்க்கின்...
வந்தே தீருமென்றானதொன்றை
வரவேற்று....
..................
பிரிவும் ஓர் அனுபவமாய்
அறிந்து கொள்ளுமோ மனம்!?
▫▫▫
அப்போ,
நேசங்களை ஞாபகித்து
ஞாபகங்களை நேசிக்க...
உறவும், பிரிவும் காதலிலே
ஒன்றென்றறிவாய் நீ...!

அட்டாளைச்சேனை யூயெல் மப்றூக்.

## என் பயணம் உன் பாதைகளில்.....!

ஆர்ப்பரிக்கும் உன்
அத்தனை
நினைவுகளுக்கு மத்தியிலும்
அமைதியாய் இருக்க
என்னால் முடிவதில்லை!
அன்பானவனே!
நீயாவது
அமைதியாக இருக்கிறாயா?
oo
சகி...என்
அமாவாசை இரவுகளுக்கு
சந்திரனாய் ஆனாய்!
இத்தனை சீக்கிரம்
மின்னலாய் ஏனடி
மறைந்து போனாய்!?
oo
சம்யுக்தா!
எப்போதடி உன்னை
மறுபடி சந்திப்பது?
oo
யாரிடம் கேட்பேன்...!
உன் வாழ்வின்
உயிரோட்டம் பற்றி
யாரிடம் கேட்பேன்?
உயிரே! நீ
உயிரோடுதான் இருக்கிறாயா?
oo
அடங்கிப் போகாமலே
ஆர்ப்பரிக்கும் உன்
அத்தனை நினைவுகளும்
என்னை
அலைக்கழிக்கின்றன!
அன்பானவனே...
நீயாவது
அமைதியாக இருக்கிறாயா?
oo
என் திசைகளெல்லாம்
அழுதுகொள்கின்றன!
இருந்தாலும்- நான்
தேற்றிக் கொள்கிறேன்-
என் சூரியன்
தொலைந்து விடவில்லை!
oo
ஆண்டவனே!
அசுரர்களின் போர்க்களத்தில்
அநாதையாய் விடப்பட்ட
அந்த
ஒற்றை ரோஜாவை
நான் எங்கு தேடுவேன்!?
oo
ஐயோ...!
யாராவது சொல்லுங்களேன்-
அவள் எங்கேயாவது
வாழ்ந்து கொண்டிருப்பதாய்!
oo
கண்மணி!
எனக்கான வாழ்க்கை
எப்போதோ தீர்ந்து போயிற்று!
எப்போதாவது உன்னை
காண்பேன் என்கிற
ஒரு
கனமான நம்பிக்கையில்தான்
நான்
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்!

கம்மல் துறை-
எம்.எல்.ஸர்ஹான்.

## தேன் கிண்ணம்

## யாருக்கு யார் சொல்வது...?

கட்டுகள்
தளர்வுறுமா?
↔
இறுக்கமாக மிக
இறுக்கமாக
கட்டப்பட்டு
கவலைப்பட்டு!
↔
மிகவும் அழுத்தி
அழுத்தி
சிறிதாக்க முயற்சி
↔
தண்ணிரை அழுத்தி
நிறைக்க முடியுமா?
↔
ஒரு பக்கம் அழுத்த
மறுபக்கம்
எட்டிப்பார்க்கும்!
↔
இயற்கை விதியும்
இதுதானே!
↔
வெட்டி துண்டாக்க
நினைக்காதீர்
ஒன்று இரண்டாகும்!
↔
முளையிலேயே கிள்ளி
எறிந்திருந்தால்
வளர்ந்திருக்குமா?
↔
இன்றுகூட
நினைத்தால்
இது முறைதான்.
↔
இருக்கும் வரை
அழிக்க
நினைப்பு வரும்
↔
அழியும் வரை
எதிர்க்க
நினைக்கும்!
↔
எறும்புகூட
கடிக்காது போனால்
அதன்
இருப்பே தெரியாது!

சுபா வரன்- கண்டி.

## உலகப் புகழ்பெற்ற படம்



இரண்டாம் உலகப் போர் தொடர்பான புகழ்பெற்ற புகைப்படங்களில் இதுவும் ஒன்று. வானில் இருந்து குண்டு வீசி மக்கள் படுகொலை செய்யப்பட்டுவந்த நேரத்தில் இங்கிலாந்தில் இந்தப் படம் எடுக்கப்பட்டது. விமானக் குண்டு வீச்சில் இருந்து தப்புவதற்காக பதுங்கு குழியினுள் அச்சத்துடன் அடைக்கலம் புகுந்துள்ளார்கள் இந்தக் குழந்தைகள். இவர்கள் இம்மாதிரி பதுங்கு குழியினுள் பதுங்குவது தினசரி வாழ்க்கையில் பழக்கமாகிப் போனதாலோ என்னவோ சில சிறுவர்கள் முகத்தில் புன்முறுவலுடன் இருக்கிறார்கள். இந்தப்படம் தோப்ஹோம் என்ற புகைப்படப் பிடிப்பாளரால் பிடிக்கப்பட்டது.

## பேனா நண்பர்கள்



பெயர்:
எஸ். பிரபா,
வயது: 21
முகவரி:
தியனகல பிரிவு,
கிளனன் பின்,
பதுளை.
பொழுது போக்கு:
கவிதை எழுதுதல்.



பெயர்:
எம். நளீம்,
வயது: 26
முகவரி:
கொட்டம்பிட்டிய,
ஹெட்டிப்பொல.
பொழுது போக்கு:
வானொலி.



பெயர்:
எஸ். சுகிர்தமலர்,
வயது: 16
முகவரி: சிவன் கோவில் வீதி, செட்டிபாளையம்,
மட்டக்களப்பு.
பொழுது போக்கு:
கதைப்புத்தகம், ரீ.வி.



பெயர்:
ஆ. யோகேந்தினி
வயது: 23
முகவரி:
30/5, டி.எம். கொலம்பகே மாவத்தை, கொழும்பு-5.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.

## இந்த வாரம் உங்கள் பலன்

(08.02.1998 தொடக்கம் 14.02.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், புதன். |
| கும்பம் | - வியாழன், கேது, செவ்வாய். |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |
| தனு | - வெள்ளி (வக்கரகம்) |

★ சந்திரன்- மிதுனம், கர்க்கடகம், சிங்கம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், பெரியோர் பகை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பண முடங்கல். | மு.ப. 10 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தேகசுகம் பாதிப்பு, மனக் கிலேசம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| சனி- இனசன விரோதம், கௌரவக் குறைவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, காரியானுகூலம். | மு.ப. 9 மணி |
| புதன்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- வீண் அலைச்சல், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| சனி- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவதிகம். | மு.ப. 10 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண் விரோதம், கடன்தொல்லை. | பகல் 12 மணி |
| புதன்- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனக்கவலை நீங்கும். | பகல் 11 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| சனி- இனசன மகிழ்ச்சி, குடும்ப நன்மை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, மனக் கலக்கம். | பகல் 11 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், மனக் கிலேசம். | பி.ப. 2 மணி |
| புதன்- இனசன மகிழ்ச்சி, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| சனி- துயர் நீங்கும், பெரியோர் உதவி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் 11 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் சகவாசம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| புதன்- வீண் முயற்சி, பொருள் நஷ்டம். | பகல் 11 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- கடன்தொல்லை, உறவினர் பகை. | பி.ப. 2 மணி |
| சனி- துயர் நீங்கும், பண வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, பலவித பேறு. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பகல் 11 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| புதன் - பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| சனி- வீண் பிரயாணம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பகல் 11 மணி |
| சனி- வீண் விரயம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### தனு

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| புதன்- இனசன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கௌரவம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- அந்நியர்பகை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| சனி- முயற்சி தடை, மனக் கிலேசம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், வீண் அலைச்சல். | பி.ப. 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, வெளியிடப் பயணம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| புதன்- மறைமுக எதிர்ப்பு, தேக சுகம் குறைவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், உயர்ந்த எண்ணம். | பி.ப. 1 மணி |
| சனி- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| சனி- மன மகிழ்ச்சி தொழில் உயர்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, தொழில் உயர்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- காரியானுகூலம், பெரியோர் உதவி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், பயனற்ற செயல். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவுமிகுதி. | பி.ப. 1 மணி |
| சனி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7



படிப்பகம்





வீதிக் கதவை அடைப்பதும்,
கீழ்த்திசை
விம்மிடும் சங்கொலியும்,
வாதுகள் பேசிடு மாந்தர்
குரலும்,
மதலை யழுங் குரலும்;
-சுப்பிரமணிய பாரதியார்.

# ஒற்றுமையே நலம்

## பாப்பா முரசு சிறுகதை

ஒருநாள் உடலில் உள்ள உறுப்புகளுக்குள் வாக்கு வாதம் ஏற்பட்டது.

"நாங்கள்தான் எல்லா இடமும் ஓடியாடி, அலைந்து திரிந்து வருகிறோம். நாங்கள் சும்மா இருந்தால் என்ன ஆகும் தெரியுமா? அப்படிப்பட்ட உடலின் முக்கிய உறுப்புக்கள்தான் நாங்கள்!" என்று கால்கள் சொல்லின.

"கால்களாகிய நீங்கள் ஓடியாடி, அலைந்து திரிந்தால் மட்டும் போதுமா? நாங்கள்தான் உழைக்கிறோம்," என்றன கைகள்.

"நாங்கள் இல்லாவிட்டால், உங்களால் ஓடியாடி, அலைந்து திரியவும் முடியாது, உழைக்கவும் முடியாது," என்று கண்கள் கூறின.

இவ்வாறு வாய், மூக்கு, காது என்று ஒவ்வொன்றும் தங்களைப் பற்றிக் கூறின. ஆனால் வயிறு மட்டும் எதுவும் பேசாமல் இருந்தது.

எதுவும் பேசாமல் இருந்த வயிற்றைப் பார்த்த மற்ற உறுப்புக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து,

"வயிறே! நாங்கள் எல்லாரும் கஷ்டப் பட்டு உணவு தேடி வருகிறோம். நீ அதை சும்மா இருந்து சுகமாகச் சாப்பிடுகிறாய். இனி நாங்கள் உன்னோடு ஒத்துழைக்க மாட்டோம். நீயே உனக்குத் தேவையான உணவைத் தேடிக் கொள!" என்று கூறின.

இதைக் கேட்ட வயிறு, 'இவர்களுக்கு நான் செய்யும் வேலையை எப்படி விளக்கு வேன்' என்று மிகவும் வருந்தியது.

இரண்டு நாட்கள் எந்த உறுப்புக்களும் வேலை செய்யவில்லை.

"சோம்பேறியாக இருக்கும் வயிற்றுக்கு இதுதான் சரியான பாடம்," என்று சொல்லி யது கை.

"கொஞ்ச நேரத்தில் 'பசி பசி'யென்று கெஞ்சப் போகிறது வயிறு!" என்று கால் சொல்லியது.

ஆனால் வயிறு பேசாமல் இருந்தது. சிறிது நேரத்தில்,

"ஐயோ எமக்கு என்ன ஆயிற்று? என் னால் அசைய முடியவில்லையே!" என்றன கைகள்.

"ஐயோ எனக்கும் சக்தி குறைந்துவிட்டது. என்னாலும் நடக்க முடியவில்லையே" என்றன கால்கள்.

இப்படி எல்லா உறுப்புக்களும் எதுவும் செய்ய முடியாமல் சோர்ந்து விழுந்தன. அவை மெதுவாக வயிற்றிடம் சென்று,

"உன்னைப் பட்டினி போட்டதால், எமக்குத்தான் ஆபத்து வந்திருக்கிறது. நீதான் உணவை உண்டு, அதன் சக்தியை எங்கள் ஒவ்வொருவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கிறாய்.

இதைப் புரிந்து கொள்ளாமல் உன்னைச் சோம்பேறி என்று பழிசுமத்தி விட்டோமே!" என்று எல்லா உறுப்புக் களும் அதனிடம் மன்னிப்புக் கேட்டன.

"நண்பர்களே! இப்போதாவது என்னைப் புரிந்து கொண்டீர்களே. நீங்கள் உங்கள் வேலையை நிறுத்தி னாலும் சரி, நான் என் வேலையை நிறுத்தினாலும் சரி, நஷ்டம் எல் லோருக்கும்தான்!" என்று சொன்னது வயிறு.

"நீ சொல்வது மிகவும் சரி. இனிமேல் நாம் எங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்து ஒற்றுமையாக இருப்போம்!" என்று கூறின மற்ற உறுப்புக்கள்.



# அதிசயம் - ஆனால் உண்மை!




**புனிதப் பயணிகள்:**
துருக்கியில் கேவஸ் என்ற இடத்தில் உள்ள பாறைகள் முஸ்லிம் புனிதப் பயணிகள் போல இயற்கையாக அமைந்துள்ளன.

**துர்ப்பாக்கியசாலி:**



கோர்ன்வோலைச் சேர்ந்த டாக்டர் பெடரிக் ஃபோர்ட் என்பவர் 22 குழந்தைகளுக்குத் தந்தையாக இருந்தார். ஆனால் அவற்றில் 21 குழந்தைகள் சிறுவயதிலேயே இறந்துவிட்டன.





**நீல நண்டு:**
செங்கடலில் உள்ள ஸினாய் தீபகற்பத்தில் காணப்படும் நீல நண்டு நீரில் இருந்து வெளியே எடுத்த 2 நிமிடத்தில் இறந்துவிடும்.

**அகேவ் செடி:**
பிரஸல்ஸ் நாட்டில் உள்ள இச்செடியின் இலைகள் நிலத்தில் இருக்கும். இலைக்கு மேலாக வரும் தண்டு 30 அடி உயரத்துக்கு வளரும். இதன்பின் இச்செடி வாடிவிடும்.

# வாரம் ஒரு நாடு



## கொங்கோ

**தலைநகர்–** பிரேஸாவில்லே
**பரப்பு–** 3,42,000 சதுரகிலோமீட்டர்
**மக்கள் தொகை–** 26 இலட்சம்
**மொழி –** ஃபிரெஞ்சு, லிங்காலா, கொங்கோ
**எழுத்தறிவு –** 57%
**சமயம் –** பழங்குடி, கிறிஸ்தவம்
**நாணயம் –** ஃபிராங்க்.
**தனி நபர் வருமானம்–** 1070 டொலர்

**அமைவிடம்:**
மேற்கு மத்திய ஆபிரிக்கநாடு. கொங்கோ தனது தென்மேற்கே அட்லாண்டிக் கடலில் கடற்கரைப் பகுதியைக் கொண்டுள்ளது. மேற்கில் காபோனும், தெற்கில் அங்கோலா வும், கிழக்கில் ஸயரும், வடக்கில் மத்திய ஆபிரிக்கக் குடியரசு மற்றும் காமரூனும் இதன் எல்லைகள்.

**வரலாறு:**
ஃபிரான்ஸிடமிருந்து 1960ல் சுதந்திரம் பெற்றது. 1969ல் புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. ஒரு கட்சி ஆட்சி நடைபெறுகிறது.

**பொருளாதாரம்:**
தாவர எண்ணெய், வச்சிரம், நிலக் கடலை போன்றவை ஏற்றுமதி செய்யப் படுகின்றன. அன்னாசிப்பழம், ஏத்தன் பழம், நெல் போன்றவை முக்கிய விளை பொருட்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14.02.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 231
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 229

பரிசுக்குரியவர்:
கீத்தா தவபால்,
இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வன் றொஸான் சவ்மி, ஸம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை. | ஏ.எம். ஸவ்பீக், பு/ எருக்கலம்பிட்டி, மு.ம.வி, பாலாவி. |
| கே. பவித்ரா, புனித கெபிரியல் மகளிர் ம.வி., ஹட்டன். | எஸ். கே. யருஷனன், திருத்துவக் கல்லூரி, கண்டி. |
| நஸ்ரினா இஸான், கு-அல் அஷ்ரக் மு.ம.வி, தல்கஸ்பிடிய. | மும்தாஜ் யூசுப், அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலை, அக்குறணை. |
| செல்வி பிரியமயூரி தேவரெட்னம், விபுலானந்த வீதி, வாழைச்சேனை. | எஸ். சதீஷ்குமார், வட்டக்களி, சிலாபம், |
| ஜி. சுமதி, இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா. | ஃபாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்ஃபோட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. |

# அன்டீஸ் மலைத்தொடர்

**★ அன்டீஸ் மலைத் தொடர் எங்குள்ளது?**
தென்னமெரிக்காவின் வடக்கு கடற்கரை யோரப் பகுதியில் அமைந்துள்ளது.




**★ இந்த மலைத் தொடரின் நீளம் என்ன?**
உலகிலேயே மிகவும் நீளமான மலைத் தொடர் இதுதான். இதன் நீளம் 7 ஆயிரத்து 240 கிலோ மீட்டர்.

**★ எத்தனை நாடுகள் வழியாக இம்மலைத் தொடர் செல்கிறது?**
7 நாடுகள். வட வெனிசுலாவில் ஆரம் பித்து, தெற்கு ஆர்ஜென்டினாவில் முடி கிறது.

**★ அன்டீஸ் மலைத் தொடரில் மிகவும் உயரமான சிகரம் எது?**
பனி படர்ந்த உயரமான சிகரங்கள் அதிகம் இருப்பினும், கன்காகுவா சிகரமே மிக உயர்ந்த சிகரமாகும். இதன் உயரம் 6959 மீட்டர் ஆகும்.

**★ அன்டீஸ் என்ற பெயர் இதற்கு எப்படி வந்தது?**
இன்கா மொழியில் அன்டி என்பதற்கு கந்தகம் என்று பொருள். இம்மலையில் நிறைய கந்தகம் கிடைப்பதால் இப்பெயர் வந்தது. இம்மலைத் தொடரில் கந்தகம் மட்டுமன்றி தங்கம், வெள்ளி, ஈயம், தகரம் போன்ற கனிவளங்களும் அதிகளவில் உள்ளன.

# கொடிகள் (FLAGS)



கொடிகளை முதலில் பயன்படுத்தி யது எப்போது என்று சரிவரச் சொல்ல முடியாது. பழங்குடி மக்கள்தான் விலங்குகளின் தோலையும், பறவைகளின் இறகுகளையும் இணைத்து கொடிகளாக முதலில் பயன்படுத்தினார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது.

கி.மு.1100ல் தோலுக்குப் பதிலாக துணி யும், நிறங்களும் கொடிகளில் பயன் படுத் தப்பட்டன. இவ்வாறு துணியில் கொடி களை அறிமுகப்படுத்தியவர்கள் சீனர்கள்.

நீண்டகாலமாக ஒரே விதமான கொடியைப் பயன்படுத்தும் நாடு டென்மார்க். 1219 முதல் அது மாறாமல் இருந்து வருகிறது.

லிபியா நாட்டுக் கொடிதான் மிகவும் எளிமையானது. பச்சை நிற நீண்ட சது ரத் துணியே அதன் கொடி. இக்கொடி யில் சின்னங்கள் எதுவுமில்லை.

சைப்பிரஸ் நாட்டுக் கொடி ஒன்றில் மட்டுமே அந்நாட்டின் வரைபடம் இடம் பெற்றுள்ளது.

## ஒரு வரிச் செய்திகள்

★ ஏலக்காய் உற்பத்தியில் உலக நாடுகளில் முதலிடம் வகிப்பது கௌதமாலா ஆகும்.
★ உலகிலேயே அதிகளவில் காய்கறிகள் உற்பத்தியில் சீனா முதலிடம் வகிக்கிறது.
★ சொக்கிலேட் மற்றும் கொக்கோ பானம் தயாரிக்கப் பயன்படும் கொக்கோ உற்பத்தியில் முதலிடம் வகிப்பது ஐவரி கோஸ்ட்.
★ தேங்காய் உற்பத்தியில் உலகில் முத லிடம் பெறுவது பிலிப்பைன்ஸ்.
★ உலகிலேயே அதிகளவில் சீனி உற்பத்தி செய்யும் நாடு கியூபா.

## முக்கிய மொழிகள்

உலகில் பேசப்படும் முக்கியமான 10 மொழிகள் வருமாறு:

| | |
|---|---|
| 1. மாண்டரின் | 6. அரபி |
| 2. ஆங்கிலம் | 7. பெங்காலி |
| 3. இந்தி | 8. போர்த்துக்கீஸ் |
| 4. ஸ்பானிஷ் | 9. மலாய் |
| 5. ரஷ்யன் | 10. ஜப்பானிஷ் |

# ஐக்கிய நாடுகள் சபை

★ ஐக்கிய நாடுகள் சபை என்ற பெயர் உருவாகக் காரணமாக இருந்தவர், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஃபிராங்கிளின் ரூஸ்வெல்ட்.
★ ஐக்கிய நாடுகள் சபை ஒப்பந்த சட்டதிட்டக் கோட்பாட்டிற்கு முன்னுரை அமையக் காரணமாக இருந்தவர் ஃபீல்ட்மார்ஷல் ஸ்மட்ஸ்.
★ ஐக்கிய நாடுகள் சபை ஒப்பந்தப்பத்திரத் தில் அச்சபை நிறுவியதன் நோக்கம், நோக்கத்தை அடையக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் அடங்கி யுள்ளன.
★ ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலு வலகம் நியூயோர்க்கில் அமைந்துள்ளது.
★ பொதுச் சபை, பாதுகாப்புச் சபை,



பொருளாதார சமூக சபை, நிதிச் சபை, சர்வதேச நீதிமன்றம், பொதுச் செயலகம் என்று ஆறு உள்ளமைப்புக் களைக் கொண்டுள்ளது.

## விடுகதைகளும் விடைகளும்

1) வேட்டையாடுவான், ஆனால் உண்ண மாட்டான்.
அவன் யார்?
2) உருவத்தில் சிறியவன், ஆனால் உழைப்பில் பெரியவன்.
அவன் யார்?
3) மழையில் நனையும், வெயிலில் காயும், வெளியில் மலரும், வீட்டில் சுருங்கும்.
அது என்ன?
4) சேர்த்து வைத்துக்கொள் என்றால் கேட்காது, அவ்வப்போது கேட்டு அடம் பிடிக்கும்.
அது என்ன?
5) எவ்வளவு அடித்தாலும் அழ மாட்டான். அவன் யார்?

**விடைகள்**
1) துப்பாக்கி 2) எறும்பு
3) குடை 4) வயிறு 5) பந்து

தொகுப்பு: எம்.ரில்வான்,
சாஹிரா தேசிய பாடசாலை, மாத்தளை.

www.padippakam.com

# புதிய தொடர் 9

எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி 'சஸ்பென்ஸ்' கலந்து எழுதிய விறு விறு நாவல்.

# இனி என் முறை

ஈரம் பட்டு பிரிக்க சிரமமாய் இருந்தது. உட்கார்ந்து கவனமாய் பிரித்தான். கவிதை போல் எழுதியிருந்தது. வெளிச்சத்துக்கு வந்து படித்தான்.

அ
மு
தா என்கிற வரிசையில் தலைப்பிடப் பட்டிருந்தது.

அழகென்பது அழிவென்று புத்தன் சொன்னான்
முன்னோரில் பல பேரும் அதையே சொன்னார்
தான்தோன்றி காமத்தை தீமை என்றார்!

அடங்காத காமத்தை உள்ளே வைத்து
முட்கிரீட உபதேசம் பலவும் சொல்ல
தாங்காமல் தடுமாறும் வார்த்தை சிலுவை.

அடிமரத்தை நுனிநின்று வெட்டும் செய்கை
முட்டாளே செய்யாதே பெண்கள் எல்லாம்
தாயாக நினைக்கின்ற பாதை செல்க

அம்மாவைத் தேடித்தான் அலையுது காமம்
முயற்சித்த திருவினைகள் தோற்றுப்போக
தாயன்பு தேடித்தான் உள்ளே கதறல்.

அழுகின்ற எவருக்கும் அம்மா வேண்டும்
முகமெல்லாம் முடிமுளைத்த வயதில் கூட
தாவி எனைத் தழுவிக் கொள் ஸ்நேகம் வேண்டும்!

அழகான அம்மாவை என் நீச்சல் குளத்தில்
முதன் முதலாய் சந்தித்த கணத்திலிருந்து
தாளாத வேதனையில் தவிக்கும் என்னை

அமுதா புரிந்துகொள், நானும் குழந்தை,
முனை முறிந்த அம்பு, முடவம் நெஞ்சு
தாளகதி தப்பெனினும் இது–
உயிரின் துடிப்பு!

முகம் வெளிறிற்று. 'அமுதாதான்–அமுதாவா? யார் இது? கவனித்தவன் காதலித்திருக்கிறானா? காதலித்தவன் மடக்கி துணி அவிழ்த்தானா....? போட்டோ எடுத்தானா? யார் கையெழுத்து இது? இவன் என் எதிரியா? அமுதாவின் காதலனா? என்னை பயமுறுத்தவா? அமுதாவை ஆள்வதா?

கவிதை எழுதியவன்தான் மடக்கியிருக்கிறான். எனில் கற்பழிக்கப்படவில்லையே. காரணம் என்ன? எய்ம் என்னவாயிருக்கும்? துன்புறுத்தவில்லையே. அமுதாவுக்கு இந்தக் கவிதை பற்றி தெரியுமா? இது யார்? ஸ்விம்மிங் கோச்சா? வேறு ஆளா?' இன்னும் கிளற. பிரிஸ்டல், சிகரெட் பாக்கெட். இது சென்னையில் விற்பனை இல்லை. டெல்லியில், பம்பாயில் உண்டு. கோச் சிகரெட் பிடிப்பானா? பான் பராக் பொட்டலங்கள். டாய்லெட் பேப்பர்கள். வாழைப்பழத் தோல். பிரித்துப் பார்த்தான். நுனி விடப்பட்டு கடிக்கப்பட்டிருந்தது. பல் தடம் இருக்கிறது 'உபயோகப்படுமா?' காக்கி கவரை அப்படியே எடுத்துக் கொண்டான்.

மறுபடி ரிஸப்ஷனுக்கு வந்தான். ஸ்விம்மிங் கோச் பற்றி விசாரித்தான். வீட்டுக்குப் போய்விட்டாராம். "எங்கே தங்கியிருந்தார்?" அறைக்கதவு திறந்து விட்டார்கள்.

என்ன தேடுகிறீர்கள் என்று விசாரித்தார்கள்.

செல்வா பதில் சொல்லவில்லை.

'இங்கு... இங்குதான் அமுதா நிர்வாணமாய் இருந்திருக்கிறாள். இந்தப் படுக்கையில்தான் படுத்திருக்கிறாள். மூன்று ஆண்கள் பார்க்க மல்லாந்து...' நெஞ்சில் வேதனை பொங்கிற்று. 'யார்....யார் அது?'

கார்ப்பெட்டில் பல கால் தடங்கள் இருந்தன. தெளிவாகவில்லை. 'காலைக் கட்டின கயிறு எங்கே... காணவில்லை. எங்கே? தேட வேண்டும்.' மெல்லியதாய் ஒரு பேப்பர் இரண்டங்குல நீளத்துக்கு நோட் புக்கிலிருந்து கிழிபட நடுப்பகுதி நூல் பகுதியில் உள்ள காகிதம் எகிறுமே, அப்படி ஒரு பேப்பர் கிடந்தது. எடுத்து பர்ஸில் அப்படியே வைத்து மூடினான். ரிஸப்ஷனுக்கு வந்து வாசுதேவன் விலாசம் கேட்டான். கொடுத்தார்கள். நன்றி சொல்லி கிளம்பினான்.

வாசுதேவன் பெட்ரோல் பங்கில் இருப்பான் என்கிறார்கள். பெரிய வீடு. கீழே அறைகளைத் தடுத்து பல போர்ஷனாக மாற்றப்பட்டிருந்தது. வயதான பெண்மணி–தாயாராம். பதில் சொன்னாள். பெட்ரோல் பங்க் போனான். "இப்பத்தான் டாக்டர் வீட்டுக்குப் போனாரு. அட்மிட் ஆயிடப் போறேன்னாரு."

"எந்த டாக்டர்?"

சொன்னார்கள். ஆஸ்பத்திரியில் நின்றான். உள்ளே போய் பெயர் சொல்லிக் கேட்டான்.

"சேலைன் ஏத்தறாங்க. காம்போஸோட தூங்கறாரு. நீங்க யாரு?"

"ரூம் நெம்பர் ஏழு." உள்ளே நகர்ந்தான்.

கட்டிலில் மெல்லியதாய் வாய் பிளந்து அவன் கிடந்தான்.

'இவன்–இவனா? எல்லாவற்றுக்கும் காரணம்? என் ஒரு பிடிக்கு அடங்குவாயா?' மெல்ல முகத்தில் கை வைத்தான். சூடு இருந்தது. விழிப்பு வரவில்லை. சட்டை ஹேங்கரில் தொங்கவிடப்பட்டிருந்தது. சட்டையில் பர்ஸ் இருந்தது. பிரித்தான். விலாசம், கொஞ்சம் காசு. அலமாரி திறந்தான்.

"யாரு?" நர்ஸ் உள்ளே வந்து கேட்டாள்.

அடையாளக் கார்டைப் பிரித்துக்காட்டினான்.

"பொலிஸா?"

"ம். என்ன இவருக்கு?"

"ஃபுட் பாய்ஸன்."

"என்ன மாதிரி பாய்ஸன்?"

"நாளைக்குத் தெரியும். லேபுக்குக் கொடுத்திருக்கோம்."

அலமாரியில் சட்டைத் துணிகள் இருந்தன. நகர்த்த சின்னதாய் கால் அங்குல ஈயக் குண்டு உருண்டது. புல்லட். ரிவால்வர் புல்லட். இவன் ஏன் இதை வைத்திருக்கிறான், கால்பக்கம். தலைப்பக்கம் பச்சை உறைத் தலையணை. கைபக்கம், ட்ரிப் ஏற்றிய கைப்பக்கம் வெள்ளைத் தலையணை. "அது யாருடையது?" தலையணையை சுட்டிக் காட்டினான்.

"பேஷண்ட் எடுத்து வந்தது."

"பார்க்கலாமா?"

"கை நகர்த்த வேண்டும், நகர்த்தினால் ட்ரிப்ஸ் நீடில் அசையும்- வலிக்கும்."

"வலிக்காது எடுப்போம்."

"அவசியமா?"

செல்வா பதில் சொல்லவில்லை.

மெல்ல வாசுவின் கை தூக்கினான். இடது கையால் தலையணையை இழுத்தான். நோட்டுப் புத்தகம் விழுந்தது. தலையணையைப் புரட்டினால் துளை தெரிந்தது. ஆக... இது ஓட்டல் தலையணை. தலையணையை மறுபடி அண்டக் கொடுத்து விட்டு குனிந்து புத்தகம் எடுத்தான்.

மீனில் கண்ணீர் என்று எழுதப்பட்டிருந்தது. அதே கையெழுத்து நடுப்பக்கம் வேகமாகப் பிரித்தான் கிழிக்கப்பட்டிருந்தது.

அமுதாவை இவன் காதலித்திருக்கிறான். என் அமுதாவை இவன் மடக்கியிருக்கிறான். இது நிஜமா பொய்யா? இந்தத் தூக்கம் தப்பித்தலுக்கா?

"ஏய் எழுந்திரு!"

"எதற்கு எழுப்பறீங்க?"

"விசாரிக்க."

"ப்ளீஸ் வெயிட். டாக்டரைக் கூப்பிடுகிறேன்." நர்ஸ் வெளியே ஓடினாள்.

டாக்டருடன் மறுபடி உள்ளே நுழைந்தாள்.

ஸி.பி.ஐ.? டாக்டர் புருவம் சுருக்கினார். "இவரை எனக்கு நன்கு தெரியும். நல்ல இளைஞன். உண்மையாகவே நேற்று பிற்பகலிலிருந்து வயிற்று உபாதையால் அவதிப்படுகிறார். நான்தான் அட்மிட் ஆகும்படி சொன்னேன்."

"இவரால் ஓடியிருக்க முடியுமா?"

"நிச்சயம் முடிந்திருக்காது. பல்ஸ் ரேட் மிக அதிகமாக இருந்தது. டீஹைடிரேஷன் நாக்கில் உதட்டில் தெரிந்தது. நிச்சயம் இவர் ஓடக்கூடிய நிலையில் இருந்திருக்க முடியாது."

'ஓட முடியாதவன் ரேப் செய்யத் துணிவானா? ரேப் செய்யவில்லையே? போட்டோ மட்டும்தானே எடுத்தான்?'

"இந்தப் புத்தகம் மட்டும் எடுத்துப் போறேன். இவர் விழித்தால் என் விலாசம், ஃபோன் நம்பர் இது. சொல்லுங்கள் அவருக்கு. என் உத்தரவில்லாமல் இவர் எங்கும் போகக்கூடாது. மீறினால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று சொல்லுங்கள். நன்றி"

'யார்...யார்...புரியவில்லையே? தாடி ஆட்கள்... இரண்டு ஆட்கள்.... அமுதாவிடம் கவிதை காட்டலாமா? இல்லை மேலும் கேள்விகள் கேட்கலாமா?

என்ன கேட்பது? 'மறைக்காமல் சொல் அமுதா! நீ வாசுதேவனை லவ்...சே... அமுதா... நீ இன்னொருத்தனை மனசுள் வளர்ப்பாயா? என்னை விட்டு விலகி விட்டாயா? போர் போர் என்கிறாயே. அமுதா நான் போரடித்து விட்டேனா? அலுத்து விட்டேனா? உண்மையைச் சொல் அமுதா. நீ வாசுதேவனை...?

அமுதா கேட்பாள், 'என்ன செய்தீர்கள் என்று, என்ன சொல்வது? ஒன்றும் புரியவில்லை என்றா?' வீட்டு வாசலுக்கு வந்து மெல்ல ஹார்ன் அடித்தான். அமுதா அவசரமாய் கதவு திறந்தாள். அக்கம் பக்கம் பார்த்தாள்.

"ப்ளீஸ் சீக்கிரம் வாங்க" குரல் கொடுத்தாள்.

செல்வா பளிச்சென்று வெளியே வந்தான். வீட்டுக்குள் புகுந்தான். கதவு சாத்தினான். அமுதா அவனிடம் ஒரு கவர் நீட்டினாள். "இது வாசல்ல கிடந்தது. அப்படியே கர்ச்சீப்ல எடுத்து மேஜைல வச்சுட்டேன். துணியில பிடிச்சு பிரிச்சேன். என் தாலிக் கொடி இருக்கு. மோதிரம், வளையல் இருக்கு, லெட்டர் இருக்கு. பிரிக்கலை."

செல்வா பீரோ திறந்து க்ளவுஸ் எடுத்து மாட்டி ப்ளாஸ்டிக் பை திறந்தான். மெல்ல கவிழ்த்தான். தாலிக்கொடியும், மோதிரமும் வளையலும் மேஜையில் விழுந்தன. மேஜை ட்ராயரைத் திறந்து லென்ஸை எடுத்தான் முகப்பவுடரைத் தூவினான். ஊதினான். ரேகைகள் இல்லை. சுத்தமாய் துடைக்கப்பட்டிருந்தது.

கவர் பிரித்து கடிதம் எடுத்தான். இடது கையால் எழுதப்பட்ட ஆங்கில எழுத்துக்கள்.

"நடந்தவை தெரிந்திருக்கும். உன்னால் முற்றிலும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். பாதிப்புக்கு பதில் பாதிப்பு ஏற்படுத்தலாம். லாபமில்லை. நஷ்ட ஈடு தர வேண்டியிருக்கும். காசு முக்கியமில்லை. இன்று நடுநிசியில் பேரம் பேசலாம். ஸி.பி.ஐ. வேலை காட்ட



எழுத்துச் சித்தர் பாலகுமாரன்

வேண்டாம். உன் மனைவியின் அழகு உன் தெருவில் எல்லோருக்கும் போஸ்டில் அனுப்பப்படும். உனக்கும்."

செல்வா கடிதம் தூக்கி விளக்கொளியில் பார்த்தான். பாண்ட் பேப்பர். ஸ்வஸ்திக் சின்னம். பயனீர் பேப்பர் மில்ஸ். இதுல கைரேகை தெரியுமா? ஃபிரான்ஸிக் டிபார்ட்மென்ட் போவோமா? தன்னால் மட்டுமே சமாளிக்க முடியுமா? இரவுபேரம் பேசுவோம். உன்னால் முற்றிலும் பாதிக்கப்பட்டிருக்கிறோம்!'

'யார் இது கந்தசாமியா? அவன் வேலையா? சாராய லைசென்ஸ் கேஸால கோபமா?'

"நான் தாலிக் கொடி எடுத்துக்கட்டுமா?"

"ம்...ம்...."

"நீங்க போட்டு வுட்டுர்றீங்களா. இரண்டையும்?"

செல்வா மெல்ல எடுத்து அதை அவள் கழுத்தில் போட்டான். மோதிரத்தை விரலில் மாட்டினான். மோதிரம் அணிந்த கைகளைப் பற்றிக் கொண்டான்.

"ஸாரி அமுதா. இது எனக்கு வச்ச குறி."

அமுதா தலை குனிந்தாள். "நானும் தனியா ஓட்டலுக்குள்ள போயிருக்க வேண்டாம்தான். என்ன கேட்கப் போறாங்க?"

"தெரியலை."

"நீங்க ஏதாவது தேடினீங்களா?"

"ம்."

"கிடைச்சுதா எதாவது?"

"வாசுதேவனைத் தேடிப்போனேன். அட்மிட் ஆயிருக்காரு."

"எங்க?"

"ஒரு ப்ரைவேட் நர்ஸிங் ஹோம். சேலைன் கொடுக்கறாங்க."

"ஐயோ... எப்படி இருக்கு... பார்த்தீங்களா?"

'இது காதலா? அமுதா அவனை நீ நேசிக்கிறாயா?'

"உனக்கு அவன் ஏதாவது லெட்டர் எழுதியிருக்கானா?"

"யார்?"

"வாசுதேவன்."

"லெட்டரா?"

"காதலிக்கற மாதிரி."

"ச்சே...ச்சே... ஏன் கேட்கறீங்க?"

"சந்தேகம்."

"எம் பேர்லியா?"

"தெரியலை அமுதா."

"செல்வா! ப்ளீஸ், நான் வெளிப்படையாத்தான் பேசினேன். நம்புங்க. நீங்களும் அதுமாதிரி பேசுங்க. எம்மேலயா சந்தேகம்?"

"கொஞ்சம் அதிகம் பழகிட்ட."

"யார் கிட்ட?"

"வாசுதேவன் கிட்ட."

"நான்ஸென்ஸ்."

"அலட்டாத அமுதா! தேவைக்கு அதிகமா நீ வாசுதேவன்கிட்ட பேசியிருக்க."

"சுட்டா செத்துப் போறதவிட்டு அவுத்துப்போட்டு ஏண்டி நின்னன்னு, செருப்பால அடிங்க. வாங்கிக்கறேன். ஆனா என்னை அசிங்கமா பேசாதீங்க. உங்களுக்காக டெக்கரேட் வாழ்க்கை நடத்திக்கிட்டிருக்கேன். என்மனசை– உடம்பைக் கல்லாக் கிட்டிருக்கேன்."

"கொஞ்சம் கல் இளகியிருக்கு."

"எப்படி சொல்றீங்க?"

"டெக்கரேடிவ்வா இருந்திருக்க."

"எங்க?"

"ஸ்விம்மிங் பூல்ல."

"யார் சொன்னது?"

(தொடர்ந்து வரும்)

---

# அனுபவம் புதுமை

# அந்த இறுதி நாட்கள்

காந்திஜியின் கடைசி உண்ணாவிரதம் 1948 ஜனவரி 13ம் திகதி ஆரம்பித்தது. உண்ணாவிரதத்தைக் கைவிட அவர் விதித்த 6 நிபந்தனைகளில் முக்கியமானது: 'இந்தியா, பாகிஸ்தானுக்கு தர வேண்டிய 54 கோடி ரூபாயை உடனடியாகத் தர வேண்டும்' என்பது.

பூனா நகரில் 'இந்துராஷ்டிரா' பத்திரிகை அலுவலகத்தில், வரும் செய்திகளை கவனித்துக்கொண்டிருந்த அதன் ஆசிரியர் நாதுராம் கோட்சேயும், பதிப்பாளர் நாராயண ஆப்தேயும் டெலிபிரிண்டர் செய்தி கண்டு திடுக்கிட்டனர். 'பாகிஸ்தானுக்கு பணம் தர வேண்டுமென்று காந்திஜி உண்ணாவிரதம் இருக்கிறார்' என்ற ஒரு அம்சத்தை மட்டும் சீரியஸாக எடுத்துக்கொண்டு ஆத்திரப்பட்டனர்.

காந்திஜியைக் கொலை செய்வது என்று முடிவு செய்தனர்.

நாதுராம் வினாயக் கோட்சே, கோபால் கோட்சே, நாராயண ஆப்தே, திகம்பர் பட்கே, மதன் லால் பாலா, விஷ்ணு காக்கரே ஆகிய ஆறு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

ஜனவரி 21ம் திகதி காலை 10 மணி சுமாருக்கு நாராயண ஆப்தேவும், காவி உடையிலிருந்த திகம்பர் பட்கேவும் பிர்லா மாளிகைக்குள் நுழைந்து நோட்டமிட்டனர். காந்திஜி பிரார்த்தனை நடத்தும் இடத்திற்கு பின்புறமாக வேலைக்காரர்கள் தங்கும் விடுதிகள் இருந்தன. விடுதிக்கான கதவு அடுத்த பக்கத்தில் இருந்ததால், இந்தப் பக்கம் நடமாட்டம் இல்லை.



காந்தி

காந்திஜி அமரும் மேடைக்குப் பின்னால் இருக்கும் அறை மட்டும் கிடைத்தால்.... நாராயண ஆப்தே யோசித்தான்.

அந்த அறையில் வசித்த வேலைக்காரனைக் கண்டுபிடித்து, அன்று ஒரு நாள் மட்டும் அந்த அறை தனது உபயோகத்திற்கு வேண்டும் என்று ஏதோ காரணத்தைக் கூறிக்கேட்டான். அந்த ஒரு நாள் மாலை உபயோகத்திற்கு 10 ரூபாய் கிடைக்கும் என்கிற விஷயம் அந்த வேலைக்காரனைக் கவர்ந்தது. அவன் ஒப்புக் கொண்டான்.

காந்திஜி வழக்கம் போல் மாலையில் வந்தார். பிரார்த்தனையை தொடங்கினார்.

கோபால் கோட்சே பின்னாலிருந்த வேலைக்காரன் அறையினுள் நுழைந்து வென்ட்டிலேட்டரை நெருங்கினான். அவனுக்கு திடீரென்று ஆத்திரமும், வெறுப்பும் ஏற்பட்டது. ஏனென்றால் வென்ட்டிலேட்டர் தரையிலிருந்து எட்டடி உயரத்தில் இருந்தது. 'என்ன மடையன் இந்த ஆப்தே! ஏன் இதைக் கவனிக்கவில்லை?' என்று சலித்துக்கொண்டான்.



கோட்சே

அந்த அறையில் ஒரு கயிற்றுக் கட்டில் இருந்தது.

அதை வென்ட்டிலேட்டர் அருகில் இழுத்து அதில் ஏறி நின்றான். கயிறு உள்ளே அதிகமாகத் தொய்ந்து ஆடியது. அப்போதும் துவாரம் கைக்கு எட்டும் தூரத்தில் இருந்ததே தவிர, வெளியே பார்க்க முடியவில்லை. குண்டை இலக்கு இல்லாமல் எப்படி எறிவது என்று சலிப்படைந்த கோபால் கோட்சே, அந்த முயற்சியைக் கைவிட்டு வெளியேறினான்.

அந்த அறைக்கு வெளியே செடிகளுக்கிடையே பதுக்கி வைத்திருந்த குண்டின் திரியை பற்ற வைப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த மதன்லால் பாலா, 'ஏன் இன்னும் வென்ட்டிலேட்டர் மூலமாக குண்டு மேடை நோக்கி எறியப்படவில்லை?' என்று பொறுமையிழந்து காத்திருந்தான்.

முன்பக்கம் ஜனங்களோடு கூட்டத்தில் நின்றிருந்த கார்க்கரே. கால் சட்டைப் பையில் வைத்திருந்த கையெறி குண்டை தடவிப் பார்த்தவாறு வென்ட்டிலேட்டரிலிருந்து குண்டு வெளி வருவதை எதிர்பார்த்துக் காத்திருந்தான். வெகுநேரம் காத்திருந்தும் குண்டு வருகிற அடையாளமே இல்லை என்றதும், 'ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்திருக்கிறது' என்று ஊகித்து, தனது குண்டை பையிலிருந்து எடுக்காமல் சற்று விலகிப் போய் நின்று கொண்டான்.

ஆனால், பஞ்சாபி இளைஞனான மதன்லால் பாலா பொறுமை இழந்தான். 'இவ்வளவு நேரம் என்ன செய்கிறான்? இந்த கோபால் கோட்சே?

ஒருவேளை நான் குண்டை வெடித்ததும், அவன் குண்டை எறியலாம் என்றிருக்கிறானோ' என்று யோசித்தான். உடனே தீப்பெட்டியை எடுத்து, தன் குண்டைப் பற்றவைத்து விட்டு வேகமாக நகர்ந்தான்.

ஆனால், இதை அங்கிருந்த தோட்டக்காரப் பெண்மணி பார்த்து விட்டாள்.

குண்டு பெரிய சப்தத்துடன் வெடித்தது. ஜனங்கள் சிதறி ஓட ஆரம்பித்தனர்.

தோட்டக்காரி அடையாளம் காட்ட, மதன்லால் பாலா பிடிபட்டான்.

மற்ற இருவரும் தப்பி, தலைமறைவாயினர், மதன்லால் விசாரணையில் அனைத்தையும் ஒப்புக்கொண்டான்.

குற்றவாளிகளைப் பிடிக்க டில்லி பொலிஸ் பூனாவுக்கு விரைந்தது. ஆனால், மற்ற இருவரும் மும்பை தாணா ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் ஒரு வீட்டில் தங்கி, அடுத்த திட்டம் தீட்டினர்.

அதன்படி, அடுத்த 9 நாளில் காந்தியை அதே இடத்தில் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான் நாதுராம் கோட்சே!

**காந்தியின் கடைசி நாட்கள் நூலிலிருந்து.**



படிப்பகம்

www.padippakam.com

"அவர் கண்டிப்பாக என்னிடமிருந்து பணத்தை எதிர்பார்ப்பவராக இருக்கக் கூடாது. என் மனதை மதிக்க வேண்டும். சில நடிகைகளின் திருமண வாழ்வில் ஏற்படும் விவாகரத்து போன்ற பிரச்சனைகள் ஏற்பட விடமாட்டேன். திருமண விஷயத்தில் ரொம்பவும் ஜாக்கிரதையாக செயல்படுவேன்."

–நடிகை ரம்பா ஒரு பேட்டியில்... 'பொம்மை' ஜுன், 97 இதழில்.

# மேக்கப் புன்னகை



**16**

## பட்டுக்கோட்டை பிரபாகர்

தான் சொன்ன பதிலால் சந்திரசேகரின் முகம் சட்டென்று வாடிப் போனதைக் கவனித்த சாரி சங்கடப்பட்டார். தன் அபிப்பிராயத்தை இப்படி வெளிப்படையாகச் சொல்லி இருக்கக் கூடாதோ, என்று ஒரு குறுகுறுப்பு அவர் மனதில் ஏற்பட்டது.

"தம்பி!" என்றார் நிதானமாக.

"சொல்லுங்கள் சார்," என்றான் பேப்பர் வெயிட்டை மெதுவாக உருட்டிக் கொண்டிருந்த சந்திரசேகர்.

"நீங்க எம்.பி.ஏ. படிச்சவர். இவ்வளவு பெரிய தொழிலை திறமையா நிர்வாகம் பண்றவர். இந்தத் தொழில்ல ஏற்படற பலவிதமான பிரச்சனைகளுக்கு பதற்றமே இல்லாம பளிச்சுன்னு புத்திசாலித்தனமா தீர்வு கண்டு செயல்படுத்தறவர்.

"எனக்குத் தர்மசங்கடமா இருக்கு தம்பி."

"சும்மா சொல்லுங்க. உங்க மனசுல பட்டதை தைரியமா சொல்லுங்க; எனக்குக் கோபம் வராது. இது ஒரு வெளிப்படையான விவாதம்தான்."

"சினிமா பொம்பளைங்க அவ்வளவு சுத்தமானவங்க இல்லை தம்பி."

"சுத்தம்னு நீங்க சொலறது உடம்பையா, மனசையா? நீங்க உடம்பைக் குறிப்பிடறதா இருந்தா இன்னைக்கு எவ்வளவோ கல்யாணமாகாத காலேஜ் பொண்ணுங்களும், ஆபிசுக்குப் போற பொண்ணுங்களும்கூட சுத்தமில்லை சாரி சார். சரி எத்தனை ஆம்பளைங்க சுத்தம்? வெளிப்படையா சொல்லணும்னா உங்க கோணத்துல நான் கூட சுத்தமில்லை சார். சில செக்ஸ் அனுபவங்கள் எனக்கும் உண்டு. இதுக்கென்ன சொல்றீங்க?"

"என்ன சொல்றதுன்னு எனக்குப் புரியலை. நான் அந்தக்காலத்து ஆசாமி.



என்னதான் எனக்கு அனுபவம் ஒரு பலமா இருந்தாலும்–உங்க புத்திசாலித்தனத்தையும் சாமர்த்தியத்தையும் பார்த்துப் பல சமயம் பிரமிச்சுப் போயிருக்கேன். வீட்ல என் பிள்ளைங்களுக்கு அட்வைஸ் பண்றப்போ, உங்களைத்தான் உதாரணம் காட்டிச் சொல்வேன். அப்படி உங்க மேல மதிப்பும், மரியாதையும் நான் வெச்சிருக்கிறதாலதான் உரிமையோட உங்க முடிவை நிராகரிக்கச் சொன்னேன்."

"சாரி சார், எனக்கு ஆலோசனை சொல்றதுக்கும், தேவைப்பட்டா கண்டிக்கிறதுக்குக்கூட உங்களுக்கு உரிமை உண்டு சார். உங்களை நான் என் அப்பா ஸ்தானத்திலதான் மனசுல வெச்சிருக்கேன். அதனாலதான் இந்தப் பர்சனல் மேட்டரை உங்ககிட்ட பேசினேன். என் கருத்துக்கு எதிரா பேசறதுக்காக நீங்க தயக்கம் காட்டத் தேவையில்லை."

"வேணா தம்பி. இந்த யோசனையை மனசிலேர்ந்து கழுவிடுங்க."

"மதுமிதாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா என் வாழ்க்கைல நிம்மதி போயிடும்னு எதனால சார் சொன்னீங்க? காரணத்தைச் சொல்ல முடியுமா?"

இப்படி அணுகுண்டு போடறமாதிரி அதிர்ச்சியா பேசத் தெரியாது."

"உண்மையான உண்மையைப் பேச ஆரம்பிச்சா, அது பல சமயம் அதிர்ச்சியாதான் இருக்கும் சாரி சார். மதுமிதாவோட வெளி அழகுதான் முதல்ல என்னை அவளோட பழகத் தூண்டிச்சு. ஆனா அவளை என் மனசு நேசிக்க ஆரம்பிச்சது அவளோட உள் அழகை உணர ஆரம்பிச்சதுக்கப்புறம்தான்."

"உங்களோட பணக்காரப் பின்னணி தெரிஞ்சதும், உங்களை வளைச்சிப் போடறதுக்காக அவ ஜாலமாப் பேசியிருக்கலாம் தம்பி. உங்களுக்குப் பிடிச்ச மாதிரியெல்லாம் நடந்திருக்கலாம். கேமிராவுக்கு முன்னாடி நடிக்கத் தெரிஞ்சவங்களுக்கு கேமிரா இல்லாதப்பவும் நடிக்கிறதென்ன கஷ்டமா?"

"நோ! சினிமாக்காரங்கன்னாலே தப்பானவங்க, அடுத்தவங்களை ஏமாத்தறதுக்கு சந்தர்ப்பம் பார்க்கிறவங்கன்னு உங்க மனசுல எண்ணம் பதிவாயிடுச்சு. விதிவிலக்குகள் இருக்கலாம்னு ஏத்துக்க மாட்டேங்கறீங்களே. ஏன்? மதுமிதாவோட அம்மா துர்க்கா இருக்காங்களே, அவங்க வாழ்க்கைலயும் நடிக்கறவங்க. ஆனா மதுமிதா அப்படி இல்லை சார். நீங்க பேட்டிகள்லயும், போஸ்டர்லயும் பார்க்கற மதுமிதா வேற சார்! அது எல்லாம் மேக்கப் சார். நிஜமான மதுமிதாவை பழகிப் பார்த்தாத்தான் புரிஞ்சுக்க முடியும்."

"நீங்க இளமை மயக்கத்திலேயே பேசறீங்க. மனசுல காதல் வந்துட்டா புத்தி வேலை செய்யறதை நிறுத்திடும். அந்தப் பொண்ணோட கவர்ச்சி உங்களை ஆட்டிப் படைக்குது. இப்படியெல்லாம் பேச வைக்குது."

சந்திரசேகர் வாய்விட்டுச் சிரித்தான்.

"அந்த வயசை நான் கடந்துட்டேன் சார். இது பருவச் சலனம் இல்லை. பக்குவமான நேசம். மதுமிதாவோட ஒரிஜினல் டைமென்ஷன் புரிஞ்சதால ஏற்பட்ட நேசம். அவளுக்குள்ளே ஒரு நல்ல மனுஷி சிறைப் பட்டிருக்கா சார். இந்த சமுதாயத்துக்கு ரொம்ப உபயோகமுள்ள மனுஷி சார். ஒரு எழுத்தாளர், அந்த மனுஷிக்குள்ளே உண்டு... ஒரு பத்திரிகையாளர் உண்டு... சமூக சேவகி உண்டு. அவ சினிமாவில நுழையாம இருந்திருந்தா வேற ஒரு உன்னதமான நிலையில் இருப்பா சார். நான் சொல்றதெல்லாம் உங்களுக்கு மிகையாப்படலாம். ஆனா இது உண்மை. அவளுக்குள்ளே இருக்கிற அந்த நிஜ மனுஷிக்கு விடுதலை கொடுக்கணுங்கற துடிப்புலதான் சார் நான் கல்யாணம் செஞ்சுக்கற முடிவெடுத்தேன்."

"தம்பி, நான் மதுமிதாவை நேர்ல, தூரத்திலேர்ந்து கூடப் பார்த்ததில்லை. நீங்க நெருக்கமா பழகியிருக்கீங்க. நமக்குள்ளே வயசு வித்தியாசம் இருக்கு. அனுபவ வித்தியாசம் இருக்கு. அதனால அபிப்பிராயத்திலயும் வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். தீர்க்கமா நூறு தடவை யோசனை செஞ்சி முடிவெடுங்க. இதுக்கு மேல நான் என்ன சொல்றது?"

சில வினாடிகள் அவரையே உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரசேகர்,

"மதுமிதாவைக் கல்யாணம் செய்துக்கிற என் முடிவில் மாற்றம் இல்லை சார். கல்யாணத்துக்கப்புறம் அவ நடிக்கப்போறதில்லை. அப்போ நான் சொன்ன மனுஷியை நீங்க மட்டுமில்லை, உங்களை மாதிரியே அபிப்பிராயம் வச்சிருக்கிற இந்த சமூகத்தில உள்ள பலரும் புரிஞ்சுக்குவாங்க. நீங்க உங்க சீட்டுக்குப் போங்க," என்றான்.

அவர் மேற்கொண்டு எதுவும் பேசாமல் ஒரு பெருமூச்சை வெளியேற்றிவிட்டு அமைதியாக எழுந்து சென்றதும், மற்றொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான்.

* * *

அந்த ஆங்கிலக் கவிதைப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள் மதுமிதா.

ஒரு கவிதையின் இரண்டு வரிகள் அவளை ஈர்த்தன.

'மகரந்தத் தூளைக் காற்றில் கலக்க விட்ட அந்த மலருக்கு தன் மூலம் கருத்தரித்த மனைவி மலர்களை அடையாளம் தெரியுமா?' என்கின்ற அர்த்தத்தில் எழுதப்பட்ட அந்தக் கவிதை அவளைப் புத்தகம் மூடி யோசிக்க வைத்தது.

மலருக்கு மட்டுமா இந்தக் கேள்வி? மனிதர்களுக்குக் கூடத்தான் பொருந்தும்!

சில யுத்தங்களின் போது, எதிரி நாட்டின் பெண்களைச் சில போர் வீரர்கள் பலாத்காரம் செய்கிறார்களே... பிறகு அந்த முகங்களை நினைத்துப் பார்ப்பார்களா? அவர்கள் கருத்தரித்தார்களா? பிரசவித்தார்களா? கர்ப்பம் கலைத்தார்களா, கழுத்தில் சுருக்கிட்டு உயிரை மாய்த்துக் கொண்டார்களா? என்றெல்லாம் அந்தக்காமவெறியர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களா?

"மே ஐ கமின் மது?"

கதவில் தட்டியபடி கேட்டுவிட்டு உள்ளே வந்தான் சந்திரசேகர்.

கொண்டு வந்த பழங்கள் நிறைந்த வலைக் கூடையை ஓரமாக வைத்துவிட்டு, கட்டுப் போட்டு படுக்கையிலிருந்து ஒரு அடி உயரத்தில் கயிறுபோட்டு உயர்த்தி தொங்கவிடப்பட்டிருந்த அவள் காலைப் பார்த்துக் கண்கலங்கினான்.

"மைகாட்! இந்த அளவுக்கா?" ஸ்டூலில் அமர்ந்தான்.

"அதனால்தான் டாக்டர் இருபது நாளைக்கு இங்கேயே, இப்படியே இருந்தாகணும்னு சொல்றார்."

"ஒண்ணும் பிராப்ளம் இல்லையே? அப்புறம் சரியாயிடும் இல்லை? நார்மலாயிடும் இல்லை?"

"ஓடலாம். குதிக்கலாம். பாண்டி விளையாடலாம். உதைக்கலாம். எப்பவும் போல இருக்கலாம்னு சொல்லிட்டாரு. ஆனா இருபது நாளைக்கப்புறம்."

"அவர் இருபது நாள் சொன்னாலும், நீ ரெண்டு மாசம் ரெஸ்ட் எடுக்கணும் மது."

"அது சரி படம் எல்லாம் முடிச்சுக் கொடுக்க வேணாமா? இப்பவே புரொடியூசர்ஸ் எல்லாம் அழுதுட்டிருக்காங்க தெரியுமா? கோயில்ல அர்ச்சனை பண்ணி பிரசாதம் கொண்டு வர்றாங்க. மதுமிதா மேல அக்கறையா? இல்லை, மதுமிதாங்கிற மிஷின் சீக்கிரம் ரிப்பேராகணுமேங்கிற கவலை! அவங்க பொண்டாட்டிக்குக் கால் ஒடிஞ்சாக்கூட இவ்வளவு கவலைப்பட மாட்டாங்க." என்று சிரித்தாள்.

"எப்பவும் ஒரு விரக்தி! சரி சொல்லு, கால்ல இப்ப வலி இருக்கா?"

"இப்ப இல்லை. அப்பப்ப வரும். குறையும். ஒரு வாரம் கழிச்சுத்தான் வலி சுத்தமா நிக்குமாம்."

"என்னவோ, என்னவெல்லாமோ பிளான் பண்ணினோம். இப்படி திடீர்னு படுத்திட்டே! ஏய்! நான் கவலைப்படறது நிஜமான மதுமிதாவுக்காக. நடிகை மதுமிதாவுக்காக இல்லை. என்னையும் உன் லிஸ்ட்ல சேர்த்துடப்போறே!"

"சே! என்னப்பா இது! உங்களை அந்த லிஸ்ட்ல சேர்ப்பேனா? ஏன் கண் எல்லாம் சிவந்திருக்கு?"

"தூக்கமில்லை. உன்னைப் பத்தித்தான் நினைச்சிட்டிருந்தேன்."

"சரி, தாலி வாங்கிட்டீங்களா?"

"ஃபோன்ல பேத்தினது பத்தாதா? நேர்லயுமா?"

"சந்துரு, ஐயாம் ஹண்ட்ரட் பர்செண்ட் சீரியஸ்"

"என்ன சொல்றேம்மா?"

"நான் உங்களைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு அம்மாவும், ஈஸ்வரும் ரொம்ப சுலபமா கண்டுபிடிச்சுடுவாங்க. அப்புறம் கல்யாணம் நடக்காம இருக்கிறதுக்கு என்னவெல்லாம் சதி பண்ண முடியுமோ, அத்தனையும் பண்ணுவாங்க."

"அதனால?"

"நம்ம கல்யாணம் இரகசியமாகவும் நடக்கணும். அவசரமாகவும் நடக்கணும் சந்துரு."

"எப்படியும் நீ டிஸ்சார்ஜ் ஆகி வர்ற வரைக்கும் நாம் காத்துக்கிட்டுத்தான் இருந்தாகணும் மது."

"ஏன் அப்படி? நான் சீரியஸா கேக்றேன். நாம ஏன் இந்த ஆஸ்பத்திரிலேயே கல்யாணம் பண்ணிக்கக் கூடாது?" என்றாள் மதுமிதா.

(தொடரும்)

## யார் இவர்கள்?

விடை உதவி பக்கம் 18.



1



2

# நம்பிக்கை

## கவியரசு கண்ணதாசன்

'என் பையன் மிகவும் நல்லவன்' என்று நீ நம்பிவிட்டால், எந்தவிதத் தொல்லையும் உனக்கு இருக்காது.

பையன் கெட்டவனாக இருக்கலாம்; அதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டியவன் அவனே.

மனைவி உத்தமி, பத்தினி என்று நம்பிவிட்டால், உன்னைப் பொறுத்தவரை காதல் சுகமாகிவிடும்.

தவறான நடத்தைக்குத் தண்டனை அனுபவிக்க வேண்டியவள் அவளே.

வேலைக்காரனையும் நம்பிவிட வேண்டும்; அதற்கு அவன் துரோகம் செய்தால் அவனை விலக்கிவிடு; அதற்காக யாரைக் கண்டாலும் அவநம்பிக்கை கொள்ளாதே.

நம்பிக்கையோடு கோவிலுக்குப் போ.

'நம்பினார் கெடுவதில்லை' என்பது நான்கு மறைத் தீர்ப்பு.

வாஸ்கோடகாமாவின் நம்பிக்கை, புதிய நிலத்தைக் கண்டுபிடித்தது.

கொலம்பஸின் நம்பிக்கை, அவன் தாய் நாட்டுக்கு ஒரு புதிய நிலத்தைத் தந்தது.

ஆயுதங்களில்லாத சர்ச்சிலின் நம்பிக்கை, இரண்டாவது உலகப் போரின் போது இங்கிலாந்துக்கு வெற்றியைத் தேடித் தந்தது.

கடலில் விழுந்து தத்தளித்து ஒருவன் இரண்டு மாதங்கள் நீந்திக் கொண்டிருந்தானென்றும், பிறகொரு கப்பலில் கரை சேர்ந்தானென்றும் நான் படித்திருக்கிறேன்.



நம்பிக்கை மட்டும் இல்லாதிருந்தால் அவன் பிணமாகி மீன்களுக்கு இரையாகியிருப்பான்.

பிரகலாதனின் நம்பிக்கை, கடவுளைக் காட்டிற்று.

கண்ணனின் நம்பிகை, பாரதப் போரில் வெற்றிபெற்றது.

நான் முன்னேறியது படிப்பினால் அல்ல; நம்பிக்கையால்.

அப்போது எனக்குப் பதினான்கு வயது. கவிதை எழுதுவதில் எனக்குக் கொள்ளை ஆசை.

ஒரு நாள் அதிகாலையில் எழுந்து நான்கு வரி எழுதினேன்:

'வீணா கானம் விடியுமுன் கேட்டது;
கானா மிர்தம் காதுக் கினிமை!
தூக்கம் கலைந்தது துள்ளி எழுந்தேன்!
படுக்கையிலிருந்தே பருகினேன் அமுதம்!'

–இந்த நான்கு வரிக்கு மேல் எழுதத் தெரியவில்லை; விட்டு விட்டேன்.

பதினேழாவது வயதில் முதன் முதலாக முழுக் கவிதை எழுதினேன். அந்த வயதிலேயே ஒரு பத்திரிகையில் ஆசிரியரானேன்.

ஒரு நண்பர் எத்தனை ஆயிரம் ரூபாய் இருந்தாலும் என்னிடம் கொடுத்து வைப்பார்-நம்பிக்கை.

நம்பிக்கைக்குத் துரோகம் செய்கிறவன் பெரும் தண்டனைக்கு ஆளாவான்–கண்ணாரக் கண்டிருக்கிறேன்.

என்னிடம் அநியாயமாகப் பணம் வாங்கியவர்கள், அந்தப் பணத்தை நியாயமாகச் செலவழித்ததில்லை; அது துரோகத்துக்குத் தண்டனை.

தேசத்தை நம்பு; தெய்வத்தை நம்பு; உலகம் உன்னைப் புகழும்.

'இது நம்மால் முடியும்' என்று எண்ணு; முடிந்து விடும்.

மனோதிடமும், வைராக்கியமும் இந்த நம்பிக்கையின் குழந்தைகளே!

ஒரு துறையில் முனைந்து நின்று நம்பிக்கையோடு முன்னேறினால், நீ நினைக்கும் அளவுக்குப் புகழும், பொருளும் வந்து சேரும்.

கடலைக் கடக்கக் கப்பலைத் தந்தது எவனோ ஒருவனின் நம்பிக்கை.

இவற்றுள் தலையாயது தெய்வ நம்பிக்கை.

தெய்வ நம்பிக்கை பொருள் தருகிறது; நிம்மதி தருகிறது; நியாயமாக நடக்கச் செய்கிறது.

மருத்துவரிடம் நம்பிக்கை வைத்தால் மருந்தில்லாமலே பாதி நோய் தீர்ந்து விடுகிறது.

நம்பிக்கை உடையவன் தான் வேதாந்தியானான், விஞ்ஞானியானான்.

நம்பிக்கை இல்லாதவனுக்குச் சுகமும் அற்பம்; ஆயுளும் அற்பம்.

தண்ணீரைப் பால் என்று நம்பினால் அது பால்தான்; வேப்பிலை இனிக்கும் என்று நம்பினால் இனிக்கும்.

நம்பிக்கைக்கு மிகவும் தேவையானது மனம்.

அது உன்னிடமே இருக்கிறது; அதற்காக நீ ஒரு பைசாவும் செலவழிக்கத் தேவையில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# பால்பேணி

தட்டு முட்டுச் சாமான்களோடு சேர்ந்து கவிழ்ந்திருந்த மண் சட்டியை நிமிர்த்தினான் ரஸீன். பளீரென்று வெண்மையாய்... புதுமணப் பெண் போல் உள்ளே உட்கார்ந்திருந்தது 'பால்ப் பேணி!'

**விலையில்லா உயிர்களை பலியாக்கிக் கொண்டிருக்கும் யுத்தப் பிசாசே..! எதிர்பார்ப்புகளோடு காத்திருக்கும் இந்தப் 'பிஞ்சின்' எதிர்காலத்துக்கு நீ என்ன பதில் சொல்லப் போகிறாய்?!**

பார்த்த மாத்திரத்திலே கண்கள் ஒளிர்ந்தன.

வெகு வாஞ்சையோடு அள்ளியெடுத்து; நெஞ்சோடு அரவணைத்தான். பெருமிதத்தோடு அதனைத் தடவிக் கொடுத்தான்.

'பால்ப்பேணி'

அவனது ஒருவருடச் சேமிப்பில் கனத்தது.

சில்லறைச் சத்தம் கேட்டு 'பானு' ஓடி வந்தாள். குண்டுக் கண்களும்; ரோஜா இதழ்களும் கொண்ட ஐந்து வயதுத் தென்



றல்! அந்தக் குடிசை வீட்டின் குட்டி மகாராணி...!

"வாப்போவ்... உண்டியல ஒடக்கப் போறீங்களா...?" மடியில் ஊஞ்சலாடினாள்.

ஆர்வமும் ஆசையும் நிறைந்த அந்தக் கண்கள் 'வைரங்களாய்ப்' பிரகாசித்தன.

"உம்மாவக் கூட்டி வா!"

கூரைகளுக்கிடையே வெள்ளைக்கோடுகளாய் சூரியன் எட்டிப் பார்த்தான்.

சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்ட ரஸீனை உற்சாகமாய் பார்த்துக் கொண்டிருந்தாள் மனைவி.

அந்தக் குடிசை வீட்டின் மொத்த எதிர்பார்ப்புகளையும் உள்வாங்கி ஒரு மகா ராஜனைப் போல் வெகு மரியாதையோடு நடுநாயகமாக உட்கார்ந்திருந்தது பால்ப் பேணி!

அவர்களின் 'பொக்கிஷப் பேழை'
ஒன்று....
இரண்டு...
நாலு...
முன்னூத்தி அம்பத்தி ஏழு...

"எண்டம்மோவ்.... முன்னூத்தி சொச்சம் சேர்ந்துரிச்சா...." நினைக்கையிலே நெஞ்சுக்குள் தேனாறு பாய்ந்தது.

"ஓ... இந்த முறை பெருநாளைக்கி உடுப்பெடுக்கேலும்.... பானுவுக்கு வெள்ளச் சட்டகூட இன்னும் தைக்கல்ல. சீருடை கெடைக்குமட்டும் பாத்திட்டிருக்கேலா... இந்த வருஷம் முதமுத போற புள்ள இல்லியா... பென்சிலும், சோக் பெட்டியும் அவ மாமா வாங்கிக் கொடுத்தாரு... மத்தச் செலவுகள அவன் பாக்க வேண்டாமா"

கலீரிட்டு சிரித்த சில்லறைகளை அள்ளியள்ளிப் பார்த்தாள் மனைவி. "...எனக்கொரு சட்டைத் துணியெண்டாலும் எடுக்கேலும் இல்லியா..." நப்பாசையில் அவள் நெஞ்சுக்குள் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் பறந்தன. கனவுகள்... கனவுகள்... கலர் கலராய்க் கனவுகள்.

மஞ்சள் நிற புதிய கைக் குட்டைக்குள் 'மொத்தமாய்ச் சில்லறைகளைச் சேர்த்து முடிச்சாக்கினான்.

'நாளைக்கு யாவாரத்தில வர்ற லாபத்தையும் சேர்த்தா எல்லாருக்குமே உடுப் பெடுத்துப் போடலாம்...' மனம் கணக்குப் போட்டது.

☾ ☾

சென்ற வருஷத்து நோன்புப் பெருநாளில் பக்கத்து வீட்டு நஸீகா மினுக்கச் சட்டையும், பாவாடையும் போட்டிருந்தாள். பானுவுக்கு ஒரு வயது மூத்தவள். அந்தச் சட்டையைக் கண்ட நாளிலிருந்தே ரஸீனுக்கு ஏக்கம். 'எப்படியாவது இதே நீல நிறத்தில மினுக்கச் சட்டையை பானுவுக்கும் வாங்கிப் போட்டுப் பார்க்கணும்' தந்தையுள்ளம் கிடந்து தவித்தது.

கிடைக்கும் மீன் வியாபார இலாபத்தில் இரண்டு, மூன்று என பால்ப்பேணி நிறைத்துக் கொண்டது.

☾ ☾

சந்தைக்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தான் ரஸீன். 'பானு' வளர் இளம் பரிதி போல வாயிலில் நின்றாள்.

"...மினுக்கச் சட்டையும், பாவாடையும் எடுத்துட்டு வாங்க வாப்பா...!"

"ம்...."

".....தண்ணி போத்தலும் வாங்கோனும்"

"..... சரிம்மா!"

"....பெருநாளக்கி சக்கரவெடி வேணும் வாப்பா..."

".... வாங்கிட்டு வர்றேன் மக!"

"இன்னிக்கு மீன் வித்து கெடக்கிற முழு லாபமும் ஒனக்குத்தான் மகள்!"

சந்தை வெகு ஆரவாரத்தோடிருந்தது.

யுத்த பூமி மக்களென்றாலும்கூட அவர்களும் சதையும் எலும்புகளும் கொண்ட மனிதர்களில்லையா?

சதா சண்டைகளையும், இழப்புக்களையும் சந்தித்துக் கொண்டிருந்தாலும், இதயம் புதிய புதிய கனவுகளையும், எதிர்பார்ப்புகளையும் தேக்கிக் கொண்டுதானே இருக்கிறது.

மீனெல்லாம் வித்தாயிற்று. கணிசமான இலாபம் கண்டதில் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது.

**பாத்திமா ஸப்ரீனா**

அப்போதுதான் மிகத் தாழ்வாகப் பறந்து வந்தது 'அலுமினியப்' பறவை!

உற்சாகமாய் ஆரவாரித்த மக்களிடையே மரண பீதி...! திடுக்கிட்டு; திகைத்து விழுந்த இடத்தில் குப்புறக் கிடந்து..... நின்று நிலையெடுத்து நிதானிப்பதற்கு முன்னமே.... சிதிலமாகிப் போயிற்று நெல்லியடிச் சந்தை....!!!!

அநாதையாய்க் கிடந்த அந்த 'மஞ்சள் நிறக் கைக்குட்டை முடிச்சு....' இரத்தச் சேறாகி இருந்தது.

***

"...நிசாயா இந்த முறை மினுக்கச் சட்டையோட நானும் உன்கூட தொழ வருவேனே....!"

நிசாயாவுக்கு... பெருமையாய்ச் சொல்லிக் கொண்டிருந்தாள் பானு!

(யாவும் கற்பனையல்ல)

# கல்லூரிப் படிப்பு

ஏ.எல் சோதனையில் நினைத்தவாறு பெறுபேறு கிடைக்காததால் கவலையில் இருந்தான் நிமலன். சகோதரங்களின் பேச்சுக்கு மத்தியில் இவ்வுலகில் வாழ்வதே கஷ்டமாக இருந்தது. தாயின் ஆதரவைத் தவிர வேறு எவரும் நிமலனுக்கு ஆறுதல் சொல்லுவதாக இல்லை.

கிழக்கில் பிறந்து வளர்ந்த நிமலன், கல்லூரிப் படிப்பை தேனகத்திலே கற்றான், ஆனால் சோதனைக்கு முகம் கொடுப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்குச் சென்று வீட்டாரின் பணத்தை விரயம் செய்து ரியூசன் கல்வியைத் தொடர்ந்தான் நிமலன். இப்பகுதிப் பணக்காரர்களின் படிப்பு இப்படித்தான் தொடர்ந்தது.

யாழ்ப்பாணம் செல்ல ஆயத்தமாகும் போதே அண்ணன் பல தடவை சொல்லியிருந்தார், "அங்கு சென்று கல்வி கற்பதென்பது நல்ல விடயம்தான், அதேபோல் நல்ல றிசல்ட்டையும் எடுத்துக் காட்ட வேண்டும், அங்கு போய் படமாளிகைக்கும், நண்பர்களுக்குப் பின்னாலும் திரிவதென்றால் அந்தப் பயணம் தேவையில்லை, இங்கேயே படித்து நல்ல பெறுபேற்றைப் பெறலாம்!"



**வீரமுனை வானவர்கோன்**

அண்ணனின் பேச்சையும் கேட்காமல் யாழ்ப்பாணம் போன நிமலன் நல்லதொரு தனியார் பாடசாலையில் அனுமதி பெற்று காலை, மாலை வகுப்புகளுக்குப் போய் வந்தான், தங்குவதற்கு தனது அண்ணனின் சினேகிதனின் வீட்டில் இடமும் கிடைத்தது. 'இரவு பகலாகப் படித்து நல்ல றிசல்ட்டைப் பெற வேண்டும்' எனும் எண்ணம் நிமலனின் மனதில் குடிகொண்டதனால் படிப்பே கவனமென்று தொடரலானான். அவ்வேளையில் அவ் வீட்டாரின் மகள் ரியூசன் போகாமல் வீட்டில் கற்றலைத் தொடர்ந்து வந்தாள். நிமலன் அவ்வீட்டுக்கு போனதில் இருந்து அவனது நோட்ஸைக் கேட்டுப் படித்து வந்தாள்.

ஆறு மாத காலமாக ஊரை மறந்து, நிமலன் வீட்டார் அனுப்பும் பணத்தை மாதாந்தம் தபாற்கந்தோருக்குச் சென்று பெற்று வருவான். அதில் ரியூசன் பணம், றூம் வாடகை, தனது செலவு என்றெல்லாம் செலவு செய்து அனுப்பும் பணம் காணாதென்று வீட்டுக்கு கடிதம் எழுதுவதும் உண்டு. கடிதத்தை வீட்டில் அண்ணன் கண்டதும் முதலில் சீறி விழுவார், பின்னர் ஒருவாறாக அம்மா சமாதானம் சொன்னதும் பணத்தைக் காலந்தாழ்த்தாது உடனடியாக அனுப்பி வைப்பார்.

அண்ணனின் உழைப்பிலே நிமலனும், தாயும், சகோதரியும் வாழ்ந்து வருகின்றனர், அண்ணன் ரியூசனுக்குச் செல்லாமலே பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகி வைத்தியர் பட்டம் பெற்றவர், அவரும் திருமணமாகி நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையாவார், அவரின் குடும்பப் பொறுப்புடன் எங்களது வீட்டையும் பராமரிப்பதென்பது கஷ்டமான வேலையாகும், இருப்பினும் எங்களது வீட்டையும் பார்க்கின்றாரென்றால் அவரின் சொல்லையும் நாங்கள் கேட்க வேண்டுமே.

சோதனையில் ஒரே பாடம், அதுவும் சாதாரண சித்தியே நிமலனுக்குக் கிடைத்தது, ரியூசன் போகாமல் இருந்து ஊரில் படித்த எனது வகுப்பு நண்பர்கள் ஐந்து பேர் பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகினர். இதனால் என்னைக் கண்டவர்கள் எல்லோரும் என்னைப் பார்த்து சிரித்துச் செல்கின்றனர், விரக்தியின் விளிம்புக்கே சென்று விட்டான் நிமலன்.

இக் கால கட்டத்தில் தொழில் நுட்பக் கல்லூரியில் புதிய மாணவர்களை சேர்ப்பதற்காக விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. நண்பர்களின் ஆலோசனையில் கற்கைநெறி ஒன்றுக்காக விண்ணப்பித்தான் நிமலன். நேர்முகப் பரீட்சையும் முடிவுற்று விரிவுரையில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு வந்தது.

முதலாம் நாள் அமர்வில் கலந்து கொள்ளச் சென்ற நிமலனுக்கு கல்லூரி வாசலில் நின்ற சிரேஷ்ட மாணவர்களினால் அமோக வரவேற்புக் கிடைத்தது. உள்ளே சென்றதும் அறையொன்றினுள் நிமலனை சிரேஷ்ட மாணவர்கள் அழைத்துச் சென்றனர். அங்கே உடைகள் களையப்பட்டு பகிடிவதை ஆரம்பமானது.

வைத்தியசாலைக் கட்டிலில் குளுக்கோஸ் பாய காட்சியளித்தான் நிமலன். வைத்தியர்களிடம் வினாவியபோது, சிறுநீரகம் பாதிக்கப் பட்டுள்ளதாகக் கூறினர். ○

# நேரடி நடவடிக்கை

ஆண் மகனுக்கு அந்தஸ்து கொடுப்பது அழகு, அறிவு, மீசை, எதுவுமில்லை.

பிறகு எது?

பெண் இணைப்பு!

மனைவி என்றவள் வந்த பிறகுதான் மனிதனாகிறான். முழுமை பெறுகிறான்.

அதை அடைவதற்குள், அவன் படும் அவஸ்தை ஏராளம்..



**ஜெனிபர்**

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்.."

உண்மையான வார்த்தை.

வரதன் முப்பது வயது முடியும் தருவாயில் பெண்ணுக்கு அலைந்து அலுத்து விட்டார்.

இன்னும் இரண்டு மாதத்தில் முடிந்தால் முடிந்ததுதான். இல்லையேல் அவ்வளவு சீக்கிரம் நடக்காது.

கல்யாணகுரு முடிகிறது.

"பொலிஸ் பொன்னுசாமி வீடு இது தானே?" வயசு பெண்ணிடம் கேட்டான்.

"ஆமாம், நீங்க யாருங்க?" அவள் கேட்டாள்.

"நான் கிராமம். இந்த வீட்டுல பெண் இருப்பதாக கேள்வி பட்டேன். பார்த்துப் போகலாம்ன்னு வந்தேன்."

'வாடா ராசகுமாரா... எனக்காக பிறந்திருக்கும் ராஜா நீ தானா!' அவள் மனதுக்குள் ஓடியது.

"வாங்க; அப்பா வீட்டுல இருக்காரு."

"நான்தான் பொண்ணு" தெளிவாகச் சொன்னாள்.

புது ஆளைப் பார்த்ததும் வெட்கமோ, நாணமோ இல்லை..

மாப்பிள்ளை அவர்தான் என்று தெரிந்தும், 'நான் தான் பொண்ணு' என்று சொல்லும் தெளிவு வந்துவிட்டது.

பெண் இனம் மேன்மை அடைந்து விட்டது. மாப்பிள்ளையைக் கண்டால் குனிந்து கொள்ள வேண்டுமா? அந்தக் காலம் போய் விட்டது.

ஏன்? எதற்கு குனிய வேண்டும்?

ஒரு நாள் குனிந்ததன் விளைவு வாழ்நாள் முழுவதும் குனிந்தே வாழ வேண்டும். முன்பே பார்த்து, பேசி, அறிந்து திருமணம் செய்து கொண்டால் பின்னால் வருத்தம் வராது.

அதனால் அவனிடமே பேசினாள். அப்பாவை அழைத்து வந்தாள். அறிமுகம் செய்து வைத்தாள்.

"தம்பி தனியா வந்திருக்கீங்க.. கூட யாரும் வரலியா?"

"இல்லீங்க... அப்பா, அம்மா படிக்காதவங்க... நான் ஓ.எல். பெயில்.. அண்ணா இருக்காரு. அவர் குடும்பமே அவருக்கு பாரம். கொஞ்சம் சுத்தற பேர்வழி... நான் சொன்னா எதையும் தட்டமாட்டாரு. ரெண்டு அக்கா! தம்பி எப்படி போனா என்ன? தனக்கு என்ன கிடைக்கும்? அந்த ரகம்.

நான் படிக்கற காலத்துல, சரியா பள்ளிக்கூடம் போகாம பாதி வழியில பதுங்கிட்டு விளையாண்டுட்டு பள்ளிக்கூடம் போனவங்க திரும்பும் போது, அவங்களோட போயிடுவேன்... அத வீட்ல கண்டிக்காம விட்டது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்போ தெரியுது.. பெயிலாயிட்டதும் வீட்டுக்குத் தெரியாம ஓடிப் போயிட்டேன். பல தொழில் செய்தேன். எதுவும் சரியா அமையலே... இருபத்தி ஏழு வயசுல விவசாயம்தான் நம்ம தொழில்ன்னு செய்ய ஆரம்பிச்சேன். இப்போ மூணு வருஷமா ஒழுங்கா இருக்கேன். அப்போ இருந்து பெண் தேடுறேன். ஒண்ணு கூட சரியா அமையலே..."

பொன்னுசாமி சிரித்தார்.

"ஏங்க சிரிக்கறீங்க?"

"மூச்சு விடாம முழு புராணமும் சொல்றீங்களே..."

"பின்னால நீங்க எதுவும் என்மேல குறை சொல்ல கூடாதல்லவா?"

"பெண் கொடுக்கறன்னு சொல்லிட்டனா? அதுக்குள்ள எல்லாத்தையும் சொல்றதுக்கு"

"பெண் குடுக்கறீங்களோ, இல்லையோ, என்ன பத்தி தெளிவா தெரிஞ்சுகிட்டா, அடுத்த இடத்தில என்னப் பத்தி சொல்லுவீங்க இல்லியா?"

'அப்பா உண்மையிலேயே இவன் பெரிய ஆளு' என்று வியந்தார் பொன்னுசாமி.. 'புத்திசாலியா இருக்கிறான். மடக்கி போடுவோம்.' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார்.

"விலாசம் கொடுத்துட்டு போங்க... நாங்க வருகிறோம். அப்புறமா முடிவு செய்யலாம்.." என்றார் பொன்னுசாமி.

காபியுடன் வந்தாள்... அலங்கரித்திருந்தாள்.. கறுப்புதான். அழகி. இவள் கிடைப்பாளா?

வந்தார்கள்.. போனார்கள்..

திருமணம் முடிந்தது...

முதலிரவு அறைக்குள் நாணப்படாமல் குனியாமல் வந்தாள்.

பால் கொடுத்துவிட்டு சிரித்தாள். "ஏன் சிரிக்கற?" என்றான்.

"பழைய ஞாபகம். நீங்க முதன் முதலாக என்ன பார்க்க வந்தீங்களே.. அன்னிக்கு நடந்தத நினைச்சு சிரிச்சேன்..." என்றாள்.

"சிரிக்கறபடியா பேசிட்டேன்." என்றார்.

"அந்த குழந்தைத்தனமான பேச்சுதான் என்னைவிட எங்க அப்பாவுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. அதனாலதான் நீங்க இந்த மாதத்திலேயே முடிக்கணும்னு சொன்னதுக்கு கூட ஒத்துக்கிட்டாரு."

"சரி பேசியே நேரம் வீணாகுது. ஏற்கெனவே வயசு போயிருச்சு..

தாவி அணைத்தான் விளக்கை. ■

# தூது செல்லாத கிளி!

'எப்படி? எப்படி அவளிடம் என் காதலை தெரிவிப்பது' இந்த கேள்வி என் மூளையை சதா வருத்திக் கொண்டே இருந்தது.

'இதுவரை அவளிடம் பேசியது கிடையாதே. முதல் சந்திப்பே என் காதலை வெளிப்படுத்தவதாக இருந்தால்... ஒரு வேளை மிரண்டு, காதலை நிராகரித்து விடுவாளோ? சோ, வேற ஏதாவது வழி இருக்கிறதான்னு பார்க்கணும்.'

'கல்யாணி.... கல்யாணி.... கரெக்ட் கல்யாணிதான் இதற்கு சரியான ஆள். அவளுக்கு என்னிடம் பழக்கம் உண்டு. என் இதயராணி கவிதாவிடமோ நெருங்கிய பழக்கம் அவளுக்கு, கல்யாணியால்தான் இதற்கு உதவ முடியும்.'

அன்று மாலையே கல்யாணி வீட்டுக்குச் சென்றேன்.



"வா கிருஷ்ணா... என்ன அதிசயமா இந்த பக்கம்?"

இதற்குமுன் எப்போதாவது அவள் வீட்டுக்குச் சென்றதுண்டு. இப்போது, 'கவிதாவை நான் காதலிக்கிற விஷயம் பற்றி பேசவந்தேன்னு' சொன்னா ஒரு வேளை அவ 'காரியமாத்தான் வந்திருக்கிறேன்' என்று எரிச்சல் அடைந்து விட்டால்...

அதனால், "சும்மாதான். இந்த பக்கமான வந்தேன். சரி அப்படியே உன்ன பார்த்துட்டு போகலாமேன்னு வந்தேன்" என்று மழுப்பினேன்.

அந்த மாலை முழுவதும் வேறு எதைப்பற்றி எல்லாமோ பேசினேன். கவிதாவை பற்றி தவிர, முதலில் கல்யாணியிடம் ஒரு நெருக்கம் ஏற்பட வேண்டும். அப்புறம்தான் நேரம் பார்த்து இதை ஆரம்பிக்க வேண்டும் என்பதால், கல்யாணியின் வீட்டுக்கு ஏதாவது சாக்கு போக்கு சொல்லிக்கொண்டு அடிக்கடி சென்று வந்தேன்.

'இன்று எப்படியாவது ஆரம்பித்து விட வேண்டும்' என்ற முடிவுடன் கிளம்பினேன். கல்யாணியை சந்தித்து பேசிக் கொண்டிருந்தேன்.

"ரெடி ஸ்டார்ட்" என்று எனக்குள் சொல்லிக்கொண்டு ஆரம்பித்தேன்.

"கல்யாணி"

"ம்"

"நா இப்படி அடிக்கடி வரனே... ஏன்னு இதுவரையும் நீ கேட்கலையே..."

"ஏன்னு தெரிஞ்சப்புறம் ஏன் ஏன்னு கேட்கணும்."

"என்ன சொல்ற?"

**சுரா**

"ஆமாம். நீ என்னை காதலிக்கறேன்னு சொல்லப்போற. இதுல எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்ல. ஏன்னா எனக்கும் உன்ன ரொம்ப புடிச்சிருக்கு. என்ன கரெக்டா நான் சொல்றது?" என்றாள் ஒரு புன்முறுவலுடன்.

நானோ, "ஆமாம்" என்றேன் அசடு வழிந்துகொண்டே. வேறுவழியில்லாமல். ■



படிப்பகம்

www.padippakam.com

# அறியாமல் தெளியாதே

தென்றல் வீசிடும் மாலை
பூக்கள் தூவிடும் சோலை.

அவனுக்கு மட்டும்
அமைதியில்லை!

"மறந்து விடுங்கள்"
என்று சொல்லவும் நேரமின்றி
பறந்துவிட்டது புறா!

"காதலிக்கக்
கற்றுத் தந்தவளே
காதலை மறக்கவும்
கற்றுக் கொடுத்துவிட்டுப்போ!

நேசத்தை
சுவாசிக்க எனக்கு
கற்றுக்கொடுத்தவளே,
சுவாசத்தை நிறுத்தவும்
சொல்லித் தந்துவிட்டுப் போ!

என் தினங்கள்
ஒவ்வொன்றையும்
தித்திக்க வைத்தவளே
இனி என் தினங்களை
குத்திக் கிழித்துவிட்டுப் போ!

புன்னகைப் பூக்களால்
என்னை வருடியவளே,
முட்களால் என் முகத்தை
முற்றும் கிழித்துவிட்டுப் போ!

மூச்சுக் காற்றால்
என் நுரையீரலை
சுத்தப்படுத்தியவளே,
என் மூச்சையே
நிறுத்திவிட்டுப் போ!

மோக மயக்கத்தில்
என்னை தாகப்படுத்தியவளே
மண்ணுக்குள் வீசி என்னை
மூடிவிட்டுப் போ!

குளிருக்குள்ளும்
தீயாக நாம் இருந்தோம்!
கோடைக்குள்ளும்
குளிராக நாம் இருந்தோம்!

தீண்டும் குளிர் மத்தியிலே
தீக்குளித்தோம்!
இரு தேகம் பிழிந்து
தேன் குடித்தோம்!

இதழ் என்ற கிண்ணத்தில்
மீதியின்றி
இனிய அமுதத்தை
நான் குடித்தேன்!

கடல் என்ற சொல்லுக்கு
அர்த்தம் கண்டு
உறவுக் கடல் புகுந்து
நாம் இருவர் சங்கமித்தோம்!



மது மயக்கம் கூட
விடிந்தால் பறந்து போகும்!
மதி மயக்கம்-இது
கதை முடிந்தால்கூட மறந்திடுமா?

உண்ட களை கூட
உறங்கினால் தீர்ந்து போகும்!
உன்னை மனம் உண்ட கதை
இறக்கும்வரை தீர்ந்திடுமா?

தீயைத் தொட்ட
தழும்பும் மறைந்திடலாம்!
நீ தொட்ட
தழும்புகள் மறைந்திடுமா?

தீயைவிடப் பொல்லாதவள்
நீயடி!
தீண்டிப் போனாய்
தீய்ந்து போனேன் நானடி!

பார்வைக்குள்ளே
பாம்பிருந்தது உண்மையோ?
அன்று கொத்தி
எனக்குள் நின்ற விஷம்
இன்று என்னைக் கொல்லுதே!

பூவுக்குள்ளும்
பூ நாகம் இருக்குமாம்!
உன் புன்னகைக்குள்
பூநாகம் இருந்ததோ?

புலம்பினான், புலம்பினான்
அவள் நினைவுகளை மட்டும்
மனதால் அலம்பினானில்லை"

"மறக்கக்கூடிய
முகமா அது?
மறக்கக்கூடிய
உறவா அது?

பூக்கள்கூட உதிரலாம்
கனிகள்கூட உதிரலாம்
பூத்த காதல்
பூவாய் உதிருமா?
கனிந்த காதல்
கனியாய் அழுகுமா?"

உள்ளத்தில் அடுக்கடுக்காய்
வினா விதைகள்!

உதட்டால் திட்டினாலும்
உள்ளத்தால் அவளை
தீண்டிக் கொண்டே
உட்கார்ந்திருந்தான்!

விழிகளை மூடினால்
இமைகளாய் அவள்!
புலன்களை மூடினால்
மூச்சாக அவள்!

"உடலைக் கூட
உயிர் உதறிப் போகலாம்!
உயிராகி விட்டவளை
உதறவா முடியும்?"

கலங்கியவன் காதில்
கலீர் எனச் சிரிப்பொலி!

கண்களைத் திறக்கமுன்னரே
மனதுக்குள் தேன் மழை!

அவள்தான்!
அவளின் சிரிப்பொலிதான்!

எந்தச் சிலம்பொலியும்
எதிர் நிற்க முடியாத
அதே சிரிப்பொலி!

கண்களைத் திறக்க
அவன்
பயந்தான்!
ஒரு வேளை கனவென்றால்
என்ன செய்வது?

சட்டென்று அவன்
உதட்டில்
சில்லென்ற ஈரலிப்பு!

"தேன் பூசப்பட்டதா
சிந்தப்பட்டதா?"
வியப்போடு விழித்தான்.

அவள்தான்!
அவளேதான்!!
அவனுடையவளேதான்!!!

அதே புன்னகை
அதே பூ நகை!

'அப்படியானால்
அறிந்தது பொய்யா?'
இரகசியமாக
மனதுக்குள் விசாரித்தான்.

"வசதியான வணிகனை
கைப்பிடிக்க சம்மதித்தாள்
கப்பலேறிப் போய்விட்டாள்"
என்று தான் அறிந்திருந்தான்!

"ஐயோ!
சந்தேகத் தீயில்
தீக்குளிக்க வைத்தேனே
என் சீதையை!"

தனக்குள் வெட்கினான்.
தனக்குள் சிறுத்தான்!

## இலக்கிய நயம்

"காதலில் இனியது
நம்பிக்கை.
காதலில் இனியது
புரிந்துணர்வு!

இரண்டுமே என்னிடம்
இல்லாமல் போனதே!"

புழுங்கினான் மனதில்!
கலங்கினான் மனதில்!

திருவள்ளுவர் சொன்ன
குறளின்
மெய்ப்பொருள் புரிந்தது.

"யார் யார் எல்லாம்
தம் வாயால்
யாதுதான் கூறினாலும்
நாம் அதன்
உண்மையை ஆராயவேண்டும்
அதன் பின்னரே
அங்கீகரிக்க வேண்டும்!

இல்லையெனில்;
நண்பன் எதிரியாவான்
காதலி துரோகியாவாள்
உற்றார் எதிரியாவர்
சுற்றத்தார் துரோகியாவர்!
உண்மை புரிந்தது.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
-அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு"

குறள்: 423 அதிகாரம்: 43

தருவரு ரசிகன்

## சிந்தியா பதில்கள்

★ மனிதர்கள் ஏன் பல ரகமாகப் பிரிந்து கிடக்கிறார்கள்?

எம். சாஜகான், கண்டி.

எட்வேர்ட் பாட்ச் என்னும் அறிஞர் மனிதர்களை துருவி ஆராய்ந்து, ஏழுவகையாக பிரித்திருக்கிறார்.

முதல்வகை: பயந்த குணமுடையவர்கள்.
இரண்டாவது வகை: சஞ்சலப்படுபவர்கள்.
மூன்றாவது வகை: எப்போதும் கற்பனையில் மிதந்து கோட்டை விடுபவர்கள்.
நான்காவது வகை: தனிமை உணர்வு மிக்கவர்கள்.
ஐந்தாவது வகை: மற்றவர்களின் செல்வாக்குக்கோ சொல்லுக்கோ உடன்பட மறுப்பவர்கள்.
ஆறாவது வகை: எதிலும் பயமற்றவர்கள்.
ஏழாவது வகை: மற்றவர்களின் கவலைகளை தம் கவலைகளாக எடுத்துப் போட்டுக்கொண்டு காரியம் பார்ப்பவர்கள்.

●●

★ டியர் சிந்தியா! உங்கள் ஊரில் புழுக்கம் எப்படி?

கி. மல்லிகா, ஹட்டன்.

காலையில் மட்டும் இதமான குளிர் அணைக்கிறது. பின்தூங்கி பின் எழவேண்டியிருக்கிறது!

★ பில் கிளின்ரன் மாட்டிக்கொள்ளுவாரா?

எஸ். ஜெயக்குமார்-கண்டி.

மாட்டிக்கொள்ளுகிறாரோ இல்லையோ, காட்டிக்கொடுக்க அழகிகள் ஒருவர் பின் ஒருவராக ஆஜராகிக்கொண்டே இருக்கிறார்கள். புகார்கள் உண்மையாக இருந்தால்கூட பூரணமாக சம்மதித்துவிட்டுத்தான் இப்போது வேறு ஏதோ நோக்கத்துடன் அண்ணரை போட்டுக் கொடுக்கிறார்கள் என்றுதான் நம்பவேண்டி இருக்கிறது. இல்லாவிட்டால் சம்பவம் நடந்த சூட்டோடு புகார் சொல்லியிருக்கலாமோ இல்லையோ!

●●

★ நூறு வயதுவரை வாழ்வதற்கு ஒரு யோசனை சொல்லுங்களேன்?

எச்.எம். இம்தியாஸ், மட்டக்களப்பு.

கவிஞர் ரவீந்திரநாத் தாகூருக்கு எண்பதாவது பிறந்தநாள். அவருக்கு மகாத்மா காந்தி வாழ்த்துச் செய்தி அனுப்பிவைத்தார்.

"தங்களுக்கு எண்பது வயது போதாது; நூறு வயது பூர்த்தியாகவேண்டும்!" என்று குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு தாகூர் பதில் அனுப்பியிருந்தார்: "வாழ்த்துக்கு நன்றி! ஆனால் அதை ஏற்கமுடியவில்லை. 80 ஆண்டுகள் வாழ்வதே அதிகப் பிரசங்கித்தனம். 100 ஆண்டு வாழ்வது பொறுக்க முடியாத குற்றம்!"

●●

★ சிந்தியா! சோனியா காந்தியின் பிரசாரத்தால் காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்கு வளர வாய்ப்பு உள்ளதா?

பா. உமா, கம்பளை.

சோனியாவின் செல்வாக்கு வளர வாய்ப்பு உள்ளது.

காங்கிரஸ் கணிசமான ஆசனங்களைப் பெறும். ஆனால் தனிப்பெரும் கட்சியாக பாரதிய ஜனதாதான் வரும். இம்முறை சோனியாவின் பிரசாரம் கவிழ்ந்த காங்கிரஸ் கப்பலை மீட்கலாமே தவிர, கரைசேர்க்க கால அவகாசம் போதாது!

●●

★ யாழ் மாவட்டத் தேர்தலில் முரசு ஏன் கருத்துக் கணிப்பு வெளியிடவில்லை?

ஏ. வில்சன், வவுனியா.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு எதிர்நிலை எடுத்துக்கொண்டு மறைமுகமாக சில கட்சிகளை ஊக்குவிப்பது முரசின் நிலைப்பாட்டுக்கு விரோதமாகிவிடும் என்பதால்! ஆனாலும், கடைசி நேரத்தில் போய் கூட்டணி என்ன செய்யப்போகிறது என்று பலரும் நினைத்திருக்க, முரசு மட்டுமே, யாழ் மாநகர சபையில் கணிசமான ஆசனங்களையும், வலிகாமம் வடக்கில் வெற்றி வாய்ப்பும் கூட்டணிக்கு இருப்பதாக சூசகமாக கணிப்புக் கூறியிருந்தது. அதன்படிதான் நடந்துள்ளது. மாநகரசபையில் ஆசனங்கள் அதிகமே தவிர தனிப் பெரும்பான்மை பெறவில்லை. வலிகாமம் வடக்கில் தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி.

●●

★ ஆசிரியர்களையே ஆட்டிப்படைக்கும் மாணவர்களை என்ன செய்யலாம்?

கே. சோதிலட்சுமி, மாத்தளை.

புத்திசாலித்தனம் என்றால் தட்டிக் கொடுக்கலாம்.

ஆசிரியை ஒருவர் கணக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

"எட்டிலே பாதி என்ன?" என்று கேட்டார்.

ஒரு புத்திசாலியான மாணவன் எழுந்து: "மிஸ், பாதி என்றால் எப்படிப் பாதி?" என்று கேட்டான்.

ஆசிரியை முழித்து, "என்னப்பா குழப்புகிறாய்?" என்றார்.

"மிஸ், எட்டில் கீழ் பாதி மேல் பாதியா, சைடுல பாதியா, கூட்டலில் பாதியா?" என்றான்.

"என்னடா சொல்லுகிறாய்?" என்றார் குழம்பிய ஆசிரியை.

"மேல்பாதி கீழ்பாதி என்றால் சைபர் சைபர். சைடுல பாதி என்றால் 3. கூட்டலில் பாதி என்றால் 4."

★ யாழ் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் திருப்திதானே?

சி. தங்கராஜ், கொழும்பு-06.

அதிருப்திதான்! 'முப்பது வீத மக்கள் பொல்லைக் கொடுத்து அடி வாங்குவோம்' என்று அடம்பிடித்திருக்கிறார்களே!

●●

★ யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோருக்காக நியமிக்கப்படப்போவதாக அறிவிக்கப்பட்ட ஆணைக்குழு கண்டுபிடித்துத் தருமா?

பி.சோதியா, யாழ்ப்பாணம்.

எதை? புதைகுழிகளையா?! அதுகூட கஷ்டம்தான்!

●●

★ பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் இராஜினாமா பற்றி என்ன நினைக்கிறீர்?

என். கோணேஸ்வரன், மட்டுநகர்.

அவராக அடம்பிடிப்பதைவிட பலராகச் சேர்ந்து வடம்பிடித்து இழுத்துத் தடுப்பதாக தொலைக்காட்சிகள் மூலம் படம்பிடித்துக் காட்டி- அருமையான அரசியல் நாடகம் ஒன்றை அரங்கேற்றி முடித்துவிட்டனர்.

●●

★ தீர்வு யோசனைகளை எதிர்க்கட்சி நிராகரித்து விட்டதே! இனி என்னாகும் தீர்வு முயற்சிகள்?

கா. ராஜேந்திரன், திருமலை.

நிராகரிக்காவிட்டாலும் கிடைத்திருக்கக்கூடியது அரைகுறைத்தீர்வுதானே! அதைவிட இரு பெரிய கட்சிகளும் ஏட்டிக்குப்போட்டியாக நிற்பதுதான் நம் தரப்பு நியாயத்தை உலகுக்கு உணர்த்த உகந்தது. மோதட்டும் விடுங்கள்!

●●

★ யாழ் மாநகர சபை கூட்டணியிடம் போய்விட்டதே?

ஆர். அருட்செல்வன், வவுனியா.

முன்னாள் போராளிகள் தங்களுக்குள் மல்லுக்கட்டியதால் வாக்குகள் பிரிந்தன. அதனால் அந்தநாள் அண்ணன்மார் கட்சி பலனை அறுவடை செய்துவிட்டது. இனி மேலாவது இக் கட்சிகள் திருந்துமா?!

●●

★ இளவரசர் சாள்ஸ் இலங்கை வரப் பிடிவாதம் பிடித்தது ஏன்?

எஸ். சுகிர்தா, கொழும்பு-09.

பிழையான வாதத்தால் டயானாவையே பிழையான பாதையில் செல்லவைத்த பெருமகன் அவர்! பிரித்தாள்வதற்காக இலங்கைத் தீவை ஒன்றாக்கிவிட்டுப்போன வம்சத்தைச் சேர்ந்தவர் சாள்ஸ். தங்கள் சூழ்ச்சியால் இன்றுவரை மோதும் மக்களைக் கண்டு இரசிக்கத்தான் பிடிவாதம் பிடித்தாரோ- யாரறிவர்?!

●●

கிளின்ரனின் காதலிகள்



பவுலாஜோன்ஸ்



ஜெனிபர்



மோனிகா

ஸ்போர்ட்ஸ்

## ஒருநாள் போட்டியில் சூரர்கள்

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடி அதிகமான ஓட்டங்களைக் குவித்து வெற்றி பெற்று- சாதனைக்குரிய அணியாக இருந்தது இலங்கை அணி. 1992ம் ஆண்டு அவுஸ்திரேலியா-நியூஸிலாந்து நாடுகளில் நடைபெற்ற 5வது உலகக் கோப்பைப் போட்டியின் போது இச்சாதனை நிகழ்த்தப்பட்டது. நியூபிளைமவுத் நகரில் இலங்கை-ஸிம்பாப்வே அணிகளுக்கிடையே நடைபெற்ற லீக் போட்டியொன்றில், ஸிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்களில் 312 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை 49.2 ஓவர்களில் 313 ஓட்டங்களைக் குவித்து வெற்றி பெற்றது.

இந்தச் சாதனை அண்மையில் நடைபெற்று முடிந்த பங்களாதேஷ் சுதந்திரக் கோப்பை போட்டியில் இந்திய அணியால் முறியடிக்கப்பட்டது. டாக்கா நகரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 48 ஓவர்களில் 314 ஓட்டங்களைப் பெற்றது. இந்த மலைக்க வைக்கும் ரன் குவிப்பை இந்திய அணி 47.5 ஓவர்களில் கடந்து உலக சாதனை படைத்தது.

ஒருநாள் போட்டிகளில் 2வதாக விளையாடி அதிகமான ரன் குவித்து வெற்றி பெற்ற முதல் பத்து அணிகள் பற்றிய விபரம் வருமாறு:

| ஓட்டங்கள் | ஓவர்கள் | அணிகள் | இடம் | திகதி |
|---|---|---|---|---|
| 316-7 | 47.5 | இந்தியா-பாகிஸ்தான் | டாக்கா | 18.01.98 |
| 313-7 | 49.2 | இலங்கை-ஸிம்பாப்வே | நியூபிளைமவுத் | 23.02.92 |
| 297-4 | 48.1 | தெ.ஆபிரிக்கா-மே.இ.தீவு | லாகூர் | 03.11.97 |
| 289-4 | 47.5 | அவுஸ்திரேலியா-நியூஸிலாந்து | சென்னை | 11.03.96 |
| 288-2 | 46.4 | தெ.ஆபிரிக்கா-இந்தியா | டெல்லி | 14.11.91 |
| 287-5 | 47.5 | மே.இ.தீவு-அவுஸ்திரேலியா | ஜோர்ஜ் டவுன் | 18.03.95 |
| 287-5 | 49.0 | அவுஸ்திரேலியா-தெ.ஆபிரிக்கா | செஞ்சூரியன் பார்க் | 10.04.95 |
| 285-4 | 45.3 | மே.இ.தீவு-பாகிஸ்தான் | ஷார்ஜா | 05.11.93 |
| 284-3 | 48.5 | மே.இ.தீவு-அவுஸ்திரேலியா | பிரிஸ்பேர்ன் | 05.01.97 |
| 284-3 | 47.1 | இந்தியா-நியூஸிலாந்து | பரோடா | 17.12.88 |

## பந்து வீச்சு மன்னர்கள்

★ முதன் முதலாக பந்து வீச்சாளரின் முதல் பந்துவீச்சில் அவுட்டானவர் இங்கிலாந்து வீரர் டி.டபிள்யூ. ரன்டெல். மேற்கிந்தியத் தீவு பந்து வீச்சாளர் அன்டி ரொபேர்ட்ஸ்தான் இவரை அவுட்டாக்கினார்.

★ மூன்று போட்டிகளில் தான் வீசிய முதல் பந்துகளிலேயே மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் அவுஸ்திரேலியப் பந்துவீச்சாளர் கிரேய்க் மக்டெர்மட்.

★ நியூஸிலாந்தின் ஜோன் ரைட், பாகிஸ்தானின் ரமீஸ் ராஜா, இலங்கையின் ரொஷான் மகாநாம ஆகியோர் இரண்டு முறை பந்துவீச்சாளர்கள் வீசிய முதல் பந்திலேயே ஆட்டமிழந்துள்ளார்கள்.

இவையாவும் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் நடந்தவை'.

## இவர்கள்தான் அவர்கள்



① சூர்யா



② அருண்குமார்

## எழுத்தாளரின் பேரன்

கடந்த் வருட இறுதியில் ஷார்ஜாவில் நடைபெற்ற அக்காய்-சிங்கர் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணி சார்பாக மத்தியூ பிளெமிங் என்ற சகலதுறை ஆட்டக்காரர் சேர்த்துக்கொள்ளப்பட்டார். 33 வயதான பிளெமிங் முதன் முதலாக இந்தியாவுக்கு எதிராக அறிமுகமாகி, முதல் போட்டியிலேயே 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இவர் ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரத்தை உருவாக்கிய இயன் பிளெமிங் என்ற எழுத்தாளரின் பேரன் ஆவார்.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 120

இராமபிரானும் இளைய பெருமாளும் உருசிய முகம் என்னும் வனத்தில்தான் முதன் முதலில் அனுமனைக் காண்கின்றனர். தனது அண்ணன் வாலியின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி சுக்கிரீவன் உருசிய முகத்தில் தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருந்தான். அவனுடைய ஒற்றர்கள், தவவேடம் தரித்த இருவர் ஆயுத பாணிகளாக கானகத்தில் அலைகின்றனர் என்று கூறிய தகவலை அறிந்து, தன்னைக் கொல்லத் தனது அண்ணன் வாலியால் அனுப்பப்பட்ட ஏவலர்களோ அவர்கள் என்று அஞ்சுகிறான். தனது நம்பிக்கைக்குரிய அமைச்சர் ஆஞ்சநேயரை அழைத்து, கானில் திரியும் ஆயுத பாணிகளான இளம் தபசிகளைப் பற்றி அறிந்து வரும்படி ஏவுகிறான்.

ஆஞ்சநேயர் அந்தணர் வேடம் தாங்கி இராம- இலட்சுமணர்களை அணுகுகிறார், இராமபிரானைக் கண்டதும் ஆஞ்சநேயர் ஒருவித காந்த சக்தியினால் கவர்ந்திழுக்கப் படுகிறார், தன்னிலை மறந்து, இராமபிரான் மீது பக்தி வசப்படுகிறார்.

☆☆☆

அஞ்சனாதேவி, தனது மகனை சூரிய தேவனிடம் வேதசாஸ்திரங்களைக் கற்று வருமாறு கூறி அனுப்பியதும் ஆஞ்சநேயர் கதிரவனை நோக்கித் தவமிருந்தார். கதிரவன் தோன்றி, தான் அளித்த வாக்குறுதியின்படி, கல்வியறிவைப் புகட்டுவதாக ஒப்புக் கொண்டார். இருப்பினும் இதில் ஒரு சிக்கல் இருந்தது. சூரியன் ஒரே இட்த்தில் ஒரு கணநேரமும் நிற்பதில்லை, கன வேகமாக அவர் பவனிவரும்போது, அனுமனுக்கு எவ்வாறு கல்வியைப் புகட்ட முடியும்?

இந்தச் சிக்கலை அனுமனே தீர்த்து வைத்தார். தன்னுடைய பராக்கிரமத்தைத் தானே அறிய முடியாது என்று முனிவரின் சாபம் இருந்த போதிலும், உரிய சந்தர்ப்பத்தில் தனது சக்தியைப் பிரயோகிக்கும் வல்லமையைப் பெறுவார். அதே போல் சூரியன் தன் நிலையையிட்டு தெரிவித்ததும், அனுமன் "சூரியதேவரே! தாங்கள் எத்தகைய வேகத்தில் பவனி வருகிறீர்களோ, அதே வேகத்தில்- நானும் தங்களைத் தொடர்ந்து வருவேன். எதுவித தடையுமில்லாமல் தாங்கள் எனக்குக் கல்வியைப் புகட்டலாம்!" என்று கூறினார். இதே ரீதியில், தனது கல்வி அறிவினை அனுமன் பெற்றுக்கொண்டார். கதிரவனின் கோரிக்கையின் பிரகாரம், சுக்கிரீவனிடம் வருவதற்கு முன்னர், தனது தாய் அஞ்சனாதேவியிடம் விடைபெற வந்து சேர்ந்தார். அஞ்சனாதேவி தன் மகனிடம், "மகனே! உன்னை முதன் முதலில் அனுமன் என்று எவர் அழைக்கிறாரோ அவரையொட்டியே நீ வாழக்கடவாய்! அவரிடும் பணிகளை ஏற்று நடப்பதே உனது இலட்சியமாகும். அவருக்கு நீ புரியும் தொண்டு உன்னைப் பெருமைப்படுத்தும். அவ்வாறு உண்மையுடன் அவருக்குச் சேவை செய்தால் உனக்கு என்றுமே அழிவில்லை; சென்று வா மகனே!" என்று கூறி அனுப்பி வைத்தார்.

### இராமதாசனானார்

கானகத்தில் இராமபிரானையும் இலக்குமணனையும் கண்டதும் ஆஞ்சநேயர், தன் தாயார் குறிப்பிட்ட நாயகர்கள் இவர்கள்தான் என்பதை உணர்ந்து கொண்டார். ஆஞ்சநேயரின் கோலத்தைக் கண்ட இராமபிரானும் அவரை எடை போட்டுவிடுகிறார். அவர் வாய், 'அனுமனே!' என்று அழைத்ததும் தன்னுடைய அந்தண வேடத்தைக் கலைத்து, சுயமான வானர வேடத்தை எடுத்துக் கொண்டார், அந்தக் கணத்திலிருந்தே தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இராமபிரானின் தாளில் சமர்ப்பித்து இராம தாசனாகிவிட்டார்.

சுக்கிரீவன் மறைந்திருந்த குகைக்கு இராம-இலக்குமணரைத் தன் இரு தோள் மீது தூக்கிக்கொண்டு சென்றார். வாலியை வதைத்து, சுக்கிரீவனுக்கு கிட்கிந்தை நாட்டை ஆளும் வாய்ப்பினையும், இராமபிரானின் துணை கொண்டு, ஆஞ்சநேயரே பெற்றுக் கொடுத்தார்.

சீதாப்பிராட்டியார் சிறைவைக்கப்பட்டிருந்த அசோகவனத்தை அடைந்து அன்னையைக் கண்டார். தக்க தருணத்தில் சீதாப்பிராட்டியாரை ஆஞ்சநேயர் காணாதிருந்தால், அன்றைய தினமே பிராட்டியார் தற்கொலை செய்து கொண்டிருப்பார். பிராட்டியாரை, முப்பது நாட்களுக்குள் 'இராமபிரான், இராவணனைக் கொன்று சிறை மீட்பார்,' என்று அவர் கொடுத்த வாக்குறுதிக்காகவே, பிராட்டியார், ஆஞ்சநேயரை, "சிரஞ்சீவியாய் இருப்பாய்!" என்று வாழ்த்தி அருளினார்.

### காரணப் பெயர்கள்

அஞ்சனாதேவியின் புத்திரன் என்பதனால் 'ஆஞ்சநேயர்' என்ற பெயரைப் பெற்றார். 'மாருதி' என்பது வாயு-காற்றுக்கு மற்றுமொரு பெயர். வாயு புத்திரன் என்பதனாலும் காற்றைப் போல் வேகமாகச் சென்று எப்பணியையும் முடிக்கும் வல்லமை பெற்றிருந்தமையினாலும் 'மாருதி' என்ற பெயர் அவருக்குக் கிடைத்தது.

சூரியனைப் பிடிக்க வானில் தாவிச் சென்றபோது இந்திரனின் வஜ்ராயுதத்தால் தாக்குண்டு கன்னத்தில் காயம் பட்டமையினால் 'அனுமான்' என்ற பெயரைப் பெற்றார். இது தவிர 'சஞ்சீவி' என்றொரு பெயரும் அவருக்குண்டு. இந்திரஜித்தால் தாக்குண்டு மயக்கமடைந்த இலக்குவனை எழுப்புதற் பொருட்டு சஞ்சீவி மலையைக் கொண்டு வந்தமையினால் ஏற்பட்ட காரணப் பெயராகவும் கருதப்படலாம். தவிர அவருடைய திருமேனியில் எப்போதும் சுகந்தம் வீசுவதனால் அப்பெயர் ஏற்பட்டிருக்கவும் கூடும். நறுமணத்துக்கு வடமொழியில் சஞ்சீவி என்றொரு பெயருமுண்டு.

ஆஞ்சநேயர் நல்ல அறிவாற்றலுடையவராகவும் அளவிடற்கரிய தேகபலம் பொருந்தியவராகவும், பெரும் புகழ் பூத்தவராகவும், பெரும் தைரியசாலியாகவும், எதைக் கண்டும் அஞ்சாதவராகவும், நோயற்றவராகவும், சோம்பலற்றவராகவும், சிறந்த வாக்கு சாதுரியமுடையவராகவும் கற்பிக்கப்படுகிறார். வால்மீகி மாமுனிவர், கம்ப நாட்டாழ்வார், துளசிதாசர் ஆகியோராலும் வேறு பல மேதாவிகளாலும் இயற்றப்பட்ட இராம காதை அனைத்திலும் அனுமனின் இத்தகைய எட்டு ஆற்றல்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. பாரதநாடு, இலங்கை ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும்கூட ஆஞ்சநேயருக்கு ஆலயங்கள் எழுப்பி மக்கள் பிரார்த்தித்து வருவதை அறியலாம்.

கவிச்சக்கரவர்த்தி கம்பநாட்டாழ்வார், ஆஞ்சநேயரை நோக்கிப் பிரார்த்திக்கும் முறையில் சிலேடையாக ஒரு செய்யுளை யாத்துள்ளார்:

அஞ்சிலே ஒன்று பெற்றான்,
அஞ்சிலே ஒன்றைத் தாவி,
அஞ்சிலே ஒன்று ஆறு ஆக
ஆர் உயிர் காக்க ஏகி;
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக் கண்டு, அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான்,
அவன் எம்மை அளித்துக் காப்பான்.
(மிகைப்பாடல்)

பொருள்:

*ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றான காற்றின் மகனாகப் பிறந்தவன், மற்றொன்றான கடலைத் தாண்டி, ஆகாயத்தில் பறந்து, பூமியின் மகளான சீதாப்பிராட்டியாரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக பகைவரின் ஊர் சென்று, அங்கு தீயை மூட்டியவனான அனுமன் எம்மீது இரக்கம் கொண்டு காத்தருளுவான்.*

கம்பராமாயணத்தில் 'சுந்தர காண்ட'த்தில்தான் ஆஞ்சநேயர் பிரவேசிக்கிறார், 'சுந்தரம்' என்பது அழகினைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். வடமொழியில் சுந்தரம் என்பதற்குக் 'குரங்கு' என்றொரு பொருளுமுண்டு. சுந்தர காண்டத்தில் ஒன்றன்பின் ஒன்றாக துயர சம்பவங்களே தொடர்கின்றன. ஆகவே வானரர்களுக்குரிய பிரதேசங்களில் இராமபிரான் பிரவேசிப்பதனால் குரங்குகளுக்குரிய காண்டம் என்பதே பொருந்தும்.

## ஆஞ்சநேயரின் கதை (இரண்டு)



☆☆☆

### தன் ஆற்றலை அறியாதவர்

ஆஞ்சநேயர் அஷ்டசித்திகளைப் பெற்றிருந்த போதும், ஒரு முனிவரின் சாபத்தால் தனது ஆற்றலை மறந்தவராகவே வாழ்ந்து வந்தார். அவருடைய ஆற்றலைப் பற்றி வேறொருவர் சுட்டிக்காட்டி, அவரைத் தூண்டிவிட்டால் உடனடியாகவே தனது சக்தியை உணர்ந்து செயலில் இறங்கி விடுவார் என்பதை முன்னரே சுட்டிக் காட்டியிருந்தோம்.

சீதாப்பிராட்டியார் இருக்குமிடத்தைக் கண்டறிய தெற்குக் கடற்கரையோரம் வந்து நின்ற வானரப் படைகள், கடலைக் கடப்பது எவ்வாறு என்று தடுமாறியபோது, அனுமனின் ஆற்றலை அறிந்த ஜாம்பவன், "வானில் தாவிக் கடலைக் கடக்கும் சக்தி ஆஞ்சநேயருக்கே உண்டு," என்று கூறிய பின்னர் தான் தனது ஆற்றலை உணர்ந்து வானிலே தாவுகிறார்.

இளையபெருமாள் இலக்குவன் இந்திரஜித்தன் ஏவிய கணையால் மூர்ச்சித்துக் கிடந்தபோதும் ஜாம்பவனே முன்வந்து சஞ்சீவி பர்வதத்தின் கதையைக் கூறுகிறார். "அம்மலையைக் கொண்டு வந்து சேர்க்கும் ஆற்றல் ஆஞ்சநேயரைத் தவிர வேறு எவருக்கும் இல்லை. ஆஞ்சநேயர் ஒருவரை அம்மலையைக் கொண்டு வந்து சேர்க்கும் வல்லமை கொண்டவர்!" என்று ஆஞ்சநேயரைத் தூண்டுகிறார். அத்தூண்டுதலினால்தான் ஆஞ்சநேயர் செயலில் இறங்கி செயற்கரிய காரியத்தைச் செய்து முடிக்கிறார்.

இராமகாதை எங்கே கூறப்படுகிறதோ, இராமாயண பாராயணம் எங்கே இடம் பெறுகிறதோ, இராமபிரானைத் துதித்து எங்கே பிரார்த்தனைகள் இடம்பெறுகின்றனவோ அங்கெல்லாம்-யுக யுகமாய் நின்று சிரஞ்சீவியாக விளங்கும்- மாருதி பிரசன்னமாக இருப்பார் என்ற நம்பிக்கை பண்டு தொட்டு இருந்து வருகிறது.

**இனி அயோத்தி நகரில் நடைபெறும் இராம பட்டாபிஷேகத்தைத் தரிசிக்க ஆயத்தமாவோம்.**

(தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

### இராமாயணப் போட்டி: 118

சரியானவிடை:- நந்திக்கிராமம்

1. பொ.வேல்நாயகம், பாசிக்குடா றோட், கல்குடா.
2. செல்வி ஜெயந்தி சிதம்பரம், மன்னார் வீதி, புத்தளம்.
3. செல்வன் எம்.ஏ.எம்.மஜ்பர், தொட்டவத்தை, பாணந்துறை.
4. ஏம்.எம்.ஜுணைதீன், முதல் குருக்குத் தெரு, ஒட்டமாவடி-01.
5. டி.பி.இரத்தினவேல், 65, பள்ளேவளை, கம்பளை.

**போட்டி இல. 120** கேள்வி:- ஆஞ்சநேயரின் எட்டு ஆற்றல்களையும் வரிசையாகத் தருக?

பெப்ரவரி 14 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி – இல.120, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.

## கலைஞரின் கடிதம்

**காங்கிரஸ் கட்சியுடன் கலைஞர் கருணாநிதி கூட்டுச் சேர்ந்திருந்தால் 'முரசொலி' பத்திரிகையில் எப்படிக் கடிதம் எழுதியிருப்பார்?**



**உடன் பிறப்பே!**

வந்துவிட்டது பாராளுமன்றத் தேர்தல் என்றதும் உனக்கும் வந்துவிட்டது உற்சாகம்.

என் இனிய இளவல், நம் பாரதத்தின் முன்னாள் பிரதமர், நேருவின் மகளின் காருண்ய புத்திரன் ராஜீவ் இன்றில்லை.

இளவல் ராஜீவின் பாரியார் சகோதரி சோனியா வந்திருக்கிறார் தனியாக!

நம்மை நாடி, நம் வாக்குத் தேடி வந்திருக்கிறார் ஓடோடி!

ராஜீவின் பாரியாரே வருக, பிரியமான ஆட்சியைத் தருக' என்று நான் அழைக்கிறேன். நான் அழைக்கிறேன் என்றால் நீ அழைக்கிறாய் என்று பொருள்.

நீ அழைக்கிறாய் என்றால், தமிழகத்து தமிழர்கள் கிட்டத்தட்ட நாலரைக் கோடிப் பேர் அழைக்கிறார்கள் என்று பொருள்.

காங்கிரஸ் கட்சிக்கும் எமக்கும் இடையிலே அன்னை இந்திரா காலத்தில் இலட்சியக் கூட்டு உதித்தது என்பதை நீ அறிவாய்.

இடையிலே என்ன காரணத்தாலோ உடைந்துபோன அந்தக் கூட்டு மறுபடி உருவாகியிருக்கிறது.

தமிழ்நாட்டை பாப்பானிய கூட்டம் விழுங்காது தடுக்க, மதவாதப் பேய் அண்டாது தடுக்க வாராது வந்த மாமணி அன்றோ இந்தக் கூட்டு.

பதவியை முள்ளாக, முட்படுக்கையாக நினைப்பவர்கள் நாங்கள்.

பாரதிய ஜனதாவையும், ஊழல் செல்வியையும் எதிர்த்து நிற்கவே அந்த முள்ளை நாடியிருக்கிறோம். முட்படுக்கையில் விழத் துணிந்திருக்கிறோமே அல்லாமல், பதவி மேல் கொண்ட பற்றினால் அல்ல என்பதை நீ அறிவாய்! நான் அறிவேன்.

## ஒரு தடவை போட்டா...

**ரஜினிகாந்த் சோனியாவை ஆதரித்துப் பிரசாரம் செய்தால் எப்படி இருக்கும்?**




**வணக்கம்.**

என்னை வாழவைக்கும் தெய்வங்களான தமிழக மக்களே. ரசிகப் பெருமக்களே.

தீபாவளி வருசத்துக்கு ஒரு தடவைதான் வரணும். பொங்கல் வருசத்துக்கு ஒரு தடவைதான் வரணும். நான் எதையுமே ஒரு தடவை வரணும் என்றுதான் விரும்புவேன். ஏன் தெரியுமா? ஒரு தடவை தீபாவளி கொண்டாடினா அது ஒரு வருசத்திற்கு கொண்டாடின மாதிரி இருக்கணும். ஒரு தடவை பொங்கல் நடத்தினா அது வருசம்பூரா நடத்தின மாதிரி இருக்கணும்.

இது என் கருத்து இல்லே. அந்த பரிபூரணன் சொல்லுறான். இந்த ரஜினி எதிரொலிக்கிறான்.

திருமதி சோனியா ரொம்பரொம்ப பெரியவங்க. ரொம்ப தொலைவிலே இருந்து இங்கே வந்திருக்காங்க. தேடி வந்தவங்களை வரவேற்கிற மக்கள் தமிழக மக்கள்.

நல்லவங்க தேடி வந்தா வாக்கு போடாம விடவும் கூடாது. தேடி வந்தாலும் போடக் கூடாதவங்களுக்கு வாக்குப் போடவும் கூடாது.

இந்தம்மா சோனியா வந்தாங்கன்னா ஆண்டவனும் துணைநிற்பான். அந்தம்மாவும் சின்னம்மாவும் வந்தாங்கன்னா ஆண்டவனும் நம் பக்கம் நிற்க மாட்டான். தன்னையும் கால்லே விழச் சொல்லிடுவாங்களோ என்று ஓடியே போயிடுவான்.

நீங்க எல்லாம் ஓட்டுப் போடுங்க. ரோட்டிலே கூத்துப் போடாதீங்க. உங்க குடும்பத்தை கவனியுங்க. தேர்தல் தினத்தன்று மட்டும் கொஞ்சம் டைம் ஒதுக்கி ஓட்டுப் போடுங்க. டைமை வேஸ்ட் பண்ணி தேர்தல் தேர்தல் என்னு அலையாதீங்க.

இதை நான் சொல்லலை. அந்த பரிபூரணன் சொல்லுறான். இந்த ரஜினி எதிரொலிக்கிறான்.

ரொம்ப வேலை இருக்கிறவங்க கவலைப்படாம வேலையைப் பாருங்க. உங்க சார்பாகவும் நான் ஓட்டுப் போடுறேன். நான் ஒரு தடவை ஓட்டுப் போட்டா அது நூறு தடவை ஓட்டு போட்ட மாதிரி.

## கடிகாரம் இல்லாத ஜெயலலிதா

**ஜெயலலிதாவும், சோனியா காந்தியும் ஒரே மேடையில் தோன்றினால், ஜெயலலிதா என்ன பேசுவார்?**

இரத்தத்தின் இரத்தமான என் உடன் பிறப்புக்களே!



எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆர் அவர்களின் உடன் பிறவா சகோதரர் ராஜீவ் காந்தியின் பாரியாரான என் உடன் பிறவா சகோதரி சோனியா காந்தி இங்கு வருகை தந்துள்ளார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி, மாநிலத்தில் அ.தி.மு.க ஆட்சி. அதுதான் இதய தெய்வம் எனக்கு இட்ட அன்புக் கட்டளை.

யார் அந்த வாஜ்பேய்? பெயரிலேயே பேய் இருக்கிறது. அதுதான் கருணாநிதியுடன் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்.

தமிழகத்தில் சகல பாராளுமன்றத் தொகுதிகளிலும் நாம்தான் ஜெயிப்போம். கருணாநிதி வேண்டுமானால் பக்கத்து மாநிலத்தில் போய்த்தான் ஜெயிக்க வேண்டும்.

தமிழக மக்கள் அஞ்ச வேண்டாம். என்னிடம் போதியளவு சொத்து இருப்பதால், மேற்கொண்டு சொத்து சேர்க்கும் உத்தேசம் தற்போதைக்கு இல்லை என்றே நினைக்கிறேன்.

பாருங்கள் கைக்கடிகாரம் கூட என்னிடம் இல்லை. அதனால் அடிக்கடி என் உடன்பிறவா சகோதரி சோனியா அவர்களிடம் நான் நேரம் கேட்டு தொந்தரவு செய்ய வேண்டியிருந்தது. என் ஏழ்மை நிலையைக் கண்டதும் சோனியா அவர்களின் கண்கள் பனித்தன. இதற்கெல்லாம் இத் தேர்தலில் கருணாநிதி பதில் சொல்லியாக வேண்டும்.

## எலக்ஷன் டூயட்

ஜெயலலிதாவும், சசிகலாவும் இணைந்து பாடும் பாடல்.

ஜெ: கையிலே பணமெதற்கு?
சசி: காலமெல்லாம் கரைப்பதற்கு!
ஜெ: உதட்டிலே சிரிப்பெதற்கு!?
சசி: எலெக்ஷனில் வெல்வதற்கு!
ஜெ: பதவியெனும் சுகமெதற்கு?
சசி: செல்வத்தில் மிதற்பதற்கு!
ஜெ: நாற்காலியில் கண்ணெதற்கு?
சசி: நாலு சுகம் காண்பதற்கு!
ஜெ: பொய்யுக்கு சிறகெதற்கு?
சசி: பொது மக்களை ஏய்ப்பதற்கு!
ஜெ: காலிலே நடையெதற்கு?
சசி: கோட்டையை பிடிப்பதற்கு!

## நெஞ்சம் மறப்பதில்லை

பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி வந்தால், அடுத்து சட்ட சபையும் கலைக்கப்படும். மறுபடி ஆட்சி கையில் வரும். கனவு காண்கிறார் சசிகலா. கனவில் நாற்காலி தோன்றுகிறது.

நெஞ்சம் மறப்பதில்லை–அது
நினைவை இழப்பதில்லை–நாம்
காத்திருந்தோம்–உன்னை
பார்த்திருந்தோம்
கண்களும் மூடவில்லை–எம்
கண்களும் மூடவில்லை.
–(நெஞ்சம்)

காலங்கள் தோறும்
நாற்காலி தேடி
கலங்கும் எம் மனமே–வரும்
எலக்ஷனிலும்–பெரும்
கலெக்ஷனிலும்–நாம்
காண்பது பெரும் சுகமே!
–(நெஞ்சம்)

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

3 செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# இனப் படுகொலை






ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


↑ 'ஸ்னோஃபிளேக்' என்ற பெயருடைய இந்த மனிதக் குரங்குக்கு 32 வயதாகிறது.

இதற்கு இரண்டு வயதாக இருக்கும்போது, ஈக்வெட்டோரியல் கயானாவிலுள்ள ஒரு வனத்தில் பிடிக்கப்பட்டது. இது வனத்தில் பிறந்ததனால், இதன் பிறந்த திகதி எவருக்கும் தெரியாது. ஆனால் 1967 மார்ச் மாதம்தான் மனிதர்களின் கையில் அகப்பட்டது. ஸ்பெயின் நாட்டிலுள்ள பார்சலோனா நகர மிருகக் காட்சிச் சாலையில் இருக்கும் இந்த ஸ்னோவைட்டுக்கு 30வது ஆண்டுவிழா கடந்த நவம்பர் மாதம் கொண்டாடப்பட்டது. மூன்று நாட்கள் நடைபெற்ற கொண்டாட்டங்களில், இக் குரங்கு வாழும் கூட்டின் முன்புறம் மேடை அமைத்து இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பார்வையாளர்கள் பிடித்த புகைப்படங்களையும் தொகுத்து இம் மனிதக் குரங்கின் 30வது ஆண்டுவிழாப் பரிசாக (மிருகக் காட்சிச் சாலை அதிகாரிகளிடம்) வழங்கியுள்ளனர். அப்புகைப் படங்களில் அசத்தலாகக் காணப்படும் போஸ் உள்ள படம் இதுதான்.

இதற்கு அடிக்கடி புதுப்புதுக் காதலிகள் வந்து போவார்கள். இவற்றால் 21 குழந்தை (குரங்குகளுக்கு தகப்பன் என்ற பெயருமுண்டு. தனக்கு நடைபெற்ற கொண்டாட்டங்களை தனது புதிய காதலி 'டெங்கு'வுடன் ஒரே கூண்டுக்குள்ளிருந்து பார்த்து இரசித்தாராம். பொல்லாத குசும்பர்தான். ■

# ரோபோ சேவகன்

↓ வட-தென் அமெரிக்காவுக்கிடையில் மொமிக்ரு தென் கிழக்கே பஹாமாஸ் தீவுகள் உள்ளன. இதில் நசௌ என்ற நகரம் உல்லாசம் விரும்பும் உலகப் பணக்காரர்களுக்கு ஏற்ற பல பொழுது போக்குகள் உள்ளன. இங்குள்ள கலக்ரிக் ஃபவ்ரசி என்றொரு விடுதி இருக்கிறது. உலகிலுள்ள விலையுயர்ந்த விடுதிகளில் இதுதான் முன்னணியில் இருக்கிறது.



← இங்குள்ள விசேஷ சமாச்சாரம் என்ன தெரியுமா? உலகில் முதன் முதலில் ஹொட்டல் பணியாளராக 'ரோபோ' என்றழைக்கப்படும் இயந்திர மனிதன் பயன்படுத்தப்படும் அதிசயம் இங்குதான் உள்ளது. வேறு எந்த ஹொட்டலும் இதுவரை பயன்படுத்தவில்லை.

ஹொட்டலில் தங்கியுள்ள உல்லாசியான பெண் ஒருவர் தனக்குத் தேவையான பணிவிடைகளை இயந்திரமனிதனுக்கு பிறப்பிக்கும் காட்சிதான் இது. (போகப்போக எதற்கெல்லாம் இயந்திர மனிதனை உபயோகப் படுத்தப் போகிறார்களோ?)

இந்த ஹொட்டலில் மற்றுமொரு விசேஷம் யாதெனில்: இங்கு அறைகளில் தங்குவோரின் உடல் உஷ்ணத்திற்கு ஏற்றவாறு அறைச்சூழல் தானாக மாறும். அறையின் ஒளி அமைப்பும் உஷ்ணத்திற்கு ஏற்ப மாறுமாம்.

இந்த உலக சாதனை விடுதியில் ஒரே ஒரு நாள் தங்குவதற்கு என்ன கட்டணம் தெரியுமா? அதிகமில்லை, ஆக, 25 அயிரம் அமெரிக்க டொலர்கள். தம்மூர் மதிப்பில் 15 இலட்சம் ரூபாய்கள்!

விரலுக்கு ஏற்ற வீக்கம். வசதிக்கு ஏற்ற கட்டணம். பணம் கரைக்க ஏற்ற இடம். ■

# ஆக 70



↑ பார்த்தாலே பயந்து நடுங்க வைக்கும் தோற்றத்தைக் கொண்ட இக் கழுகு பிணந்தின்னிக் கழுகு என்று அழைக்கப்படுகிறது.

இத்தகைய கழுகுகள் இன்று உலகில் ஆக 70 மட்டுமே இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதுவும் இந்த இனத்தை அழிவிலிருந்து காப்பாற்ற அமெரிக்க நிறுவனம் ஒன்று ஒரு பண்ணையை அமைத்து இவற்றை வளர்த்து வருகின்றது.

'கலிபோர்னியன் கொண்டோர்' என்ற இக் கழுகுகள் சிலவற்றை மிகப் பிரயத்தனப்பட்டுப் பிடித்து வளர்த்து, இனப் பெருக்கம் செய்யவைத்து இவற்றை இவ்வமைப்பு சுதந்திரமாக காடுகளில் விட்டு விடுகிறது. உலகில் மிக குறைந்த எண்ணிக் கையில் உள்ள பறவை என்ற உலக சாதனை இந்தக் கழுகுகளுக்கு சேருகிறது. அழிவும் சாதனையாகிவிட்டது. ■

# நீலத்தில் நீளம்



→ 'ஜாஹேர் வைக்கிங்' என்ற இந்த எண்ணை தாங்கிக் கப்பலே உலகில் மிகப் பெரியதாகும். 458.45 மீட்டர் (1,504 அடி) நீளமானதும் 5 இலட்சத்து 64 ஆயிரத்தி 785தொன் எடையும் கொண்டது.

இக்கப்பல் ஈரான்-ஈராக் யுத்தத்தின் போது தாக்குதலுக்குள்ளானது. இதனைப் பழுது பார்ப்பதற்கு மட்டும் 6 கோடி டொலர் செலவானது.

சிங்கப்பூரிலும் துபாயிலும் இக்கப்பலுக்கான பழுது பார்க்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, 1991ம் ஆண்டு மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

இக்கப்பலுக்கு ஏற்கனவே 'ஹப்பி ஜயன்ற்' (மகிழ்ச்சிகரமான இராட்சதன்) என்றும் 'சீவைஸ் ஜயன்ற்' (கடலுக்கேற்ற இராட்சதன்) என்றும் இரு வேறு பெயர்கள் சூட்டப் பட்டிருந்தன.

நீலக் கடலில் பயணம் செய்யும் கப்பல்களில் இன்று வரை மிக நீளச் சாதனைக் கப்பல் இதுதான். ■

# வருகிறது திருவிழா



→ பலகோடி ரசிகர்களைக் கவரும் உலக உதைப்பந்தாட்ட திருவிழா நெருங்கிவிட்டது.

ஃபிரான்ஸ் நாட்டிலுள்ள 10 இடங்களில் 98ம் ஆண்டு உலக உதை பந்தாட்டப் போட்டிகள் இடம் பெறவிருக்கின்றன. ஜூலை 10ம் திகதி முதல் ஜூலை 12ம் திகதிவரை நடைபெறவுள்ள போட்டிகளில் மொத்தம் 32 அணிகள் மோதுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இத்தேர்வுகளுக்கான போட்டிகள் ஃபிரான்ஸ் நாட்டின் வெல்ட்றோம் மாநிலத்திலுள்ள மார்செயில் நகரில் அமைந்த விளையாட்டரங்கில் சமீபத்தில் நடைபெற்றது. இந்த அரங்கில் 60 ஆயிரம் பேர் வசதியாக அமர்ந்து போட்டிகளைப் பார்க்கலாம்.

உதை பந்தாட்டப் போட்டிகளின் தொடக்க விழா மிகப் பிரமாண்டமான செள் டெனிஸ் விளையாட்டரங்கில் நடைபெறும். 80 ஆயிரம் பேர் வரை இவ்வரங்கில் அமர்ந்து விளையாட்டுக்களை ரசிக்கலாம்.

ஃபிரான்சில் உலக உதை பந்தாட்டப் போட்டி முன்பொரு தடவை 1938ல் நடைபெற்றுள்ளது. இப்பொழுது 16வது உலகக் கோப்பைக்கான போட்டியும் இங்குதான் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளை நடத்துவதற்கு ஃபிரான்ஸ் நாட்டு அரசாங்கம், மொத்தம் 196 கோடி 80 இலட்சம் ஃபிரான்ஸ் ஃபிராங்குகளை ஒதுக்கிவிருக்கிறது.

உலக உதை பந்தாட்டக் கோப்பை-98க்கான வகை வகையான சுவரொட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள். இம்முறையும் பிரேசில் அணிதான் புகுந்து தூள் கிளப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அணியின் நம்பிக்கை நட்சத்திரமான ரொமாரியோ தான் படத்தில் காணப்படுகிறார்.





# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

30.12.1997



## செல்வன் அஸ்வின் சபாநாதன்

CANADA SCARBOROUGH 197, LIVINGSTON ROADல் வசிக்கும் சபாநாதன்-கவிதா தம்பதியினரின் செல்வப் புதல்வன் அஸ்வின் (ASWIN) தனது 1வது பிறந்தநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

அஸ்வினை அன்பு அப்பா, அம்மா, பாட்டி, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், பெரியம்மா, ஆசைச்சித்தி, சித்தப்பாமார், அண்ணா பிரதீப், அக்காமார் லக்ஷி, குஜின்சி, மச்சான்மார் ஞானுசன், மதீபன், சுபர்னன, மச்சாள்மார், துசானா, வைதீகா, கீர்த்தனா, சுவேதா, மாமா திலக், நீதன் அண்ணா மற்றும் நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் மயூரி அம்மன் அருள்பெற்று நீடுழிகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

அப்பா, அம்மா - (416) 261-3440.



படிப்பகம்